@NewsRotary /RotaryNewsIndia

ஜனவரி 2021

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Vol.3, Issue 8 | Annual Subscription ₹420



Rotary


FEEL
THE
ENERGY
12-16 JUNE 2021 | TAIPEI, TAIWAN
Register today at convention.rotary.org | #Rotary21
Rotary
TAIPEI
2021




10



20



22



32



44



62

# உள்ளே


**10 நம்பிக்கைக்கும் வாய்ப்புக்கும் ஏற்ற நேரம்!**
கோவிட்-19 நெருக்கடிபற்றிய தன் கருத்துகளைப் பகிர்ந்து கொள்கிறார் RID பரத் பான்ட்யா.

**20 துயரத்திலும் நான்கு பேருக்கு வாழ்வளித்த ரோட்டரி ஜோடி!**
Rtn பிக்கினா சக்ரவர்த்தி மற்றும் பானு, மூளை இறப்பைச் சந்தித்த தங்கள் மகன் ஸ்ரீகாந்தின் உடல் உறுப்புகளை நன்கொடையாக வழங்கியதுபற்றிய நெகிழவைக்கும் பதிவு.

**22 "இந்திய நாடக அரங்கின் பரந்த தன்மையை ஆங்கில நாடகங்களில் பிரதிபலிக்க முடியாது": விஜய் படகி**
பெங்களூர் லிட்டில் தியேட்டர் நிறுவனர் அறங்காவலருடன் ஒரு பேட்டி. (இவர் ஒரு ரோட்டரியனும்கூட.)

**30 மெய்நிகர் சந்திப்புகள், வழிகாட்டும் ரோட்டரி இ-கிளப்புகள்!**
ஆறு கண்டங்களைச் சேர்ந்த 28 நாடுகளிலிருந்து 80 மின் சங்கங்கள் ஒரு சந்திப்பில் கலந்துகொண்டன, இதில் RI தலைவர் ஹோல்கர் நாக் மற்றும் சுசேன் உரையாற்றினார்கள்.

**32 படங்கள் பேசும்போது...**
RID 3040 இன்டராக்டர்கள் ஒரு புகைப்படப் போட்டியை நடத்தினார்கள், இதில் பன்னாட்டு உறுப்பினர்கள் பங்கேற்றார்கள்.

**44 ஆப்கானிஸ்தான்: பதிலைவிட கேள்விகள் தான் அதிகம்!**
போரால் பெரிதும் சேதமடைந்த நாட்டுக்கு 2005ல் சென்றுவந்தவர்களுடைய அனுபவப் பதிவு.

**58 வயதுவந்தோருக்கு ரோட்டரி எழுத்தறிவு மையங்கள்**
வயது வந்த, கல்வியறிவற்ற 100 பேருக்குக் கல்வி கற்பிப்பதற்காக, இரண்டு கிராமங்களில் எழுத்தறிவு மையங்களை ரோட்டரியன்கள் திறந்துள்ளார்கள்.

**62 குரல் வளத்தால் உச்சம் தொட்ட முகமது ரஃபி**
அவர் பாலிவுட் இசையின் தங்கத் தரமாக்க் கருதப்பட்டார்.


**அட்டைப்படத்தில்:** RID 3040 இன்டராக்டர்கள் நடத்திய பன்னாட்டுப் பசுமைப் புகைப்படப் போட்டியில் பரிசு பெற்ற புகைப்படம்.

**புகைப்படம்:** இன்டராக்டர் விஷால் நவீன்.


## சென்னை பூ விற்பனையாளர்களுக்கு நாம் உதவவேண்டும்

*சென்னை பூ விற்பனையாளர்களைப் பற்றிய அட்டைப்படக் கட்டுரை மிக நன்றாக எழுதப்பட்டிருந்தது! சென்னையின் பூ விற்கும் பெண்கள் என்ற பெயரில் ஒரு சிறப்புத் திட்டத்தை நடத்தவேண்டும் என்ற தூண்டுதலை இது எனக்கு அளிக்கிறது. இதேபோன்ற எண்ணம் கொண்ட ரோட்டரியன்கள் இதில் இணையலாம்.*

Dr B *தாட்சாயணி*
RC *மீனம்பாக்கம்* — D 3232

*ஏழைகளின் நிலையைப்பற்றிப் பேசுகிற, முடக்கத்தின் போது அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிற டிசம்பர் இதழுக்குப் பாராட்டுகளை வாரி வழங்கவேண்டும். வாங்குவோர் பேரம் பேசாமல் கேட்கும் விலையைச் செலுத்தினாலே போதும், அது ஒரு மிகச் சிறந்த உதவியாக இருக்கும்.*

TRF*க்கு நிதியளிக்கக் கோருகிற, வெவ்வேறு வகைகளைத் தெளிவாக விவரிக்கிற அறங்காவலர் தலைவர்* K R *ரவிந்திரனுடைய கோரிக்கை உள்ளிட்ட மற்ற கட்டுரைகள் சிறப்பாக இருந்தன. குஜராத் சுவைப் பண்டங்களைத் தயாரிப்பதுபற்றிய கட்டுரையைப் படித்து எங்கள் வீட்டுப் பெண்கள் மிகவும் மகிழ்ந்தார்கள்.*




*நன் நாராயணன்,* RC *மதுரை வெஸ்ட்* — D 3000

*சென்னையைச் சேர்ந்த ஒரு பூ விற்பனை யாளரைக் காட்சிப்படுத்தும் முன் அட்டைப் புகைப்படம் எளிமையாக, அதே நேரம் ஈர்க்கக்கூடியதாக இருந்தது; புகைப்படங்களுடன் அமைந்த கிரண் ஜெஹ்ராவின் அட்டைப்படக் கட்டுரை நெஞ்சைத் தொட்டது.*

RI *தலைவர் ஹோல்கர் நாக் அவர்களுடைய செய்தி, துணிவோடு முன்னேறுவதற்கான நேர் ஆற்றலை நமக்கு அளிக்கிறது. ஏனெனில், அவர் இந்த நோய்ப்பரவலில் இருந்து பல புதிய வாய்ப்புகளைக் கண்டறிந்துள்ளார்,* 2020*ஐ ரோட்டரிக்கான வலிமை ஆண்டாகக் குறிக்கிறார்.*

*கோவிடுக்குப்பிறகு, குறைந்த வருவாய்க் குழுக்களின் பொருளாதாரப் புனர்வாழ்வுக்கு ஆசிரியர் ரஷீதா பகத் குரல் கொடுக்கிறார், நுண்கடன் இதற்கான ஒரு நீடித்த தீர்வாக இருக்கும் என்கிறார்.*

50 *வயதைத் தொடும்* RC *புணே சவுத் செயல்படுத்தியுள்ள பல அடையாளத் திட்டங்களைப்பற்றிப் படித்து மகிழ்ந்தோம்.* K R *ரவீந்திரன் எழுதிய கோவிடுக்குப் பிந்தைய உலகத்தில் ரோட்டரியன்களுக்கான சவால்கள் மற்றும் வாய்ப்புகள், இளம்பிள்ளைவாத நாளை முன்னிட்டுப் பேரணிகள், விழிப்புணர்வுப் பரப்புரைகள் போன்ற கட்டுரைகள் சிறப்பாக அமைந்திருந்தன.*

*ரோட்டரி இதழ்கள்* 25 *மொழிகளில் பதிப்பிக்கப்படுகின்றன,* 129 *நாடு களில் உள்ள உறுப்பினர்களுக்குச் சேவை யாற்றுகின்றன என்பதை*

### RC புணே சவுத்-துக்கு வாழ்த்துகள்!

சமூகத்துக்குச் சேவை யாற்றுதல், தங்களைச் சுற்றியுள்ள மக்களின் வாழ்க்கைகளை மாற்றி யமைத்தலில் 50 பொன் ஆண்டுகளை நிறைவு செய்யும் RC புணே சவுத்துக்கு வாழ்த்துகள்.

வீரண்ணா A ஹுக்கி
RC சிமோகா — D 3182

டிசம்பர் இதழில் இரண்டு கட்டுரைகள் ஆர்வமூட்டும் வகையில் அமைந்திருந்தன. முதலில், மன்னா டே பற்றிய S R மதுவின் கட்டுரை. 4,000க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ள இவர், தன்னுடைய நேர்த்தியான பாடும் திறமைக்காக லதா மங்கேஷ்கரிடம் பாராட்டு பெற்றுள்ளார். மிகச் சிறந்த வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கும் ஆசிரியருக்கு வாழ்த்துகள்.

இரண்டாவது கட்டுரையான 50ம் ஆண்டைக் கொண்டாட்டத் துடன் எட்டும் புணே சவுத் மிகவும் குறிப்பிட வேண்டியது.

Dr பொன் முத்தையன்
RC ஆடுதுறை — D 2982

RI தலைவர் ஹோல்கர் நாக் வழங்கியுள்ள புத்தாண்டுச் செய்தி, 2020ம் ஆண்டைப்பற்றிய என் சிந்தனை முழுவதையும் மாற்றிவிட்டது. அனைத்து ரோட்டரியன் களுக்கும் மிகச் சிறந்த ஒரு செய்தியை அவர் அளித்துள்ளார். ஒட்டுமொத்த உலகும் உறைந்து நின்றபோது, ரோட்டரி தொடர்ந்து இயங்கிவந்தது எபப்டி என்று அவர் விவரித்திருக் கிறார். நாம் உண்மையில் மிகவும் புதுமைச்சிந்தனை கொண்டவர்கள்.

Dr மகேஷ் காவ்லெ
RC காரைக்கால்
சென்டென்னியல் — D 2982

வளமான இந்தியாவுக்குச் சமூகப் பண்ணைகள் என்ற தலைப்பில் அமைந்த நவம்பர் இதழின் அட்டைப்படக் கட்டுரை உண்மையில் மிகுந்த ஊக்கமளித்தது. மாயங்க் காந்தியின் பணி பாராட்டவேண்டியது, வியக்கவைப்பது, குறிப்பாக, பணமதிப் பிழத்தலுக்குப் பிந்தைய நாட்களில். அவருடைய கடின உழைப்பு, கிராமப் பொருளாதாரத்தை மாற்றியமைத்துள்ளது. அவருக்கு நம் பாராட்டுகள்.

விநாயக் N உபாத்யே
RC ஔரங்காபாத் —
RID 3132

நவம்பர் இதழில், RC மணாலி, RID 3070இடமிருந்து உதவி பெற்ற ஜெயா சாகர் என்ற ரோடராக்டரைபப்ற்றிய

*அறிந்து மகிழ்ந்தோம். மன்னா டே பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.*

*ஃபிலிப் முலப்பொனெ* M T
RC *திருவனந்தபுரம் சப்அர்பன்* — D 3211

*டிசம்பர் இதழில், கோவிட் உதவிப் பணிகளை ஏராளமாகச் செய்துள்ள ரோட்டரியன்கள் ஏழைகளுக்குப் பொருளாதார உதவி மற்றும் புனர்வாழ்வை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் ஆசிரியர் குறிப்பு நம் கண்களைத் திறக்கிறது. சென்னையில் பூ விற்பவர்கள், இந்த நோய்ப்பரவலின்போது அவர்களுடைய துன்ப நிலையைப் பற்றிய கிரணின் அட்டைப்படக் கட்டுரைக்காக அவருக்கு வாழ்த்துகள். மன்னா டே பற்றிய* S R *மது-வின் கட்டுரை, ரோட்டரியன்களுடைய நோய்ப்பரவல் நேர உதவிகளைப்பற்றிய* V *முத்துக்குமாரனுடைய கட்டுரை ஆகிய இரண்டும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன.*

*டேனியல் சிட்டிலப்பிள்ளி*
RC *கல்லூர்,* — D3201

கட்டுரையை ஆர்வத்துடன் படித்தோம். அவர் UKல் உயர் கல்வி பெறுவதற்காக, மணாலி சங்கம் ஓர் உயர் நிலைக் கணினியை அவருக்கு நன்கொடையாக அளித்துள்ளதை அறிந்து நான் மகிழ்ந்தேன்.

இந்த மிகச் சிறந்த பணியைச் செய்த சங்கத் தலைவர் G C தாகுர் மற்றும் அவருடைய குழுவினருக்குப் பாராட்டுகள். இந்தத் திட்டத்தில் DG சிங்கின் முயற்சி பாராட்ட வேண்டியது. தேவைப்படும்போது தங்களுக்கு உதவுவதற்கு ரோட்டரி இருக்கிறது என்ற உணர்வை நாம் ரோடராக்டர்கள் மனத்தில் உருவாக்குவோம்.

N ஜகதீசன், RC ஏலூரு — D 3020

### ஊக்கமளிக்கும் ஓர் உண்மைக் கதை

PDG ராஜன் தேஷ்பாண்டே எழுதிய கட்டுரை (ரோட்டரியன் மருத்துவர் ஒருவர் தன்னுடைய கொரோனாவைரஸ் அனுபவத்தை நினைவுகூர்கிறார்) இந்த நோய்ப் பரவலை எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்கான ஓர் அழைப்பு மட்டுமில்லை, ஊக்கமளிக்கும் ஓர் உண்மைக் கதையும்கூட. அவர் நிகழ்ச்சிகளை ஓர் எளிய முறையில் நினைவுகூர்ந்துள்ளார், இதனால், வாசகர்கள் அந்தச் சூழ்நிலையுடன் நன்கு இணைந்துகொள்ள இயலும் என்பதை உறுதிசெய்துள்ளார். நோய்ப்பரவல் மக்களுடைய அன்றாட வாழ்க்கைகளைப் பாதித்துள்ளது என்பதையும், நலத்துறைத் தொழில் வல்லுனர்கள் முன்னெச்சரிக்கைகளை எடுத்துக் கொண்டபோதும், உண்மையில் இந்த நோய்த்தொற்றின் ஆபத்துகளுக்கு அவர்கள் தங்களை வெளிக்காட்டிக் கொள்கிறார்கள் என்பதையும் இந்தக் கட்டுரை சரியாகச் சுட்டிக்காட்டுகிறது.

Dr ஜெயசேகரன் VP
RC பையனூர் — D 3202

நவம்பர் இதழில், PDG Dr ராஜன் தேஷ்பாண்டே கோவிட் வைரஸின் தீவிரத்தை விவரித்துள்ளார், கொரோனாவிலிருந்து குணமான, தகுதியுள்ள மக்கள் பிளாஸ்மாவைத் திரும்ப வழங்கி வாழ்க்கைக்கு நன்றியுணர்வைக் காண்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

PDG N K மிஷ்ரா — D 3262

### உங்கள் உடல் நலம் சார்ந்த எண்களை அறிந்திருங்கள்

மக்களுடைய எடை, BP மற்றும் ரத்தச் சர்க்கரை அளவை அவ்வப்போது கண்காணிப்பதற்காக, ரோட்டரி சங்கங்கள் “உங்கள் எண்களை அறிந்திருங்கள்” முகாம்களை நடத்தவேண்டும், இந்த முகாம்களின்போது, நீரிழிவு, BP, இதய நோய், பக்கவாதம் மற்றும் சிறுநீரகச் செயலிழப்பைக் கட்டுப்படுத்துகிற எளிய உதவிக் குறிப்புகள், உடல் நலம் நிறைந்த வாழ்க்கைமுறைக்கான ஆலோசனை களைக் கொண்ட சிற்றேடுகளை நாம் வழங்கவேண்டும்.

கோவிந்த் தாஸ் அக்ரவால்
RC பேலூர் — D 3291

### நம்பிக்கை ஒலியாக ரோட்டரி

இதழாசிரியரின் Dec கட்டுரை யொட்டி ரோட்டரியினரான நாம் ஏழை மக்களுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் மத்தியில் ஒரு பாலமாக இருந்து ஏழைகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த உதவலாம்.

கோவிந்த் சர்மா
RC காண்ட்வா — D 3040

### ரோட்டரி நியூஸ் ப்ளஸ்

ரோட்டரி ப்ளஸ் மிக நன்றாக உள்ளது. ரோட்டரி நியூஸ் போல் இதழாகவும் வெளியிடலாம், வாழ்த்துக்கள்.

PDG அருண் கபூர் — D 3070

We welcome your feedback. Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details, along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com**

Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com** WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** in our website
**www.rotarynewsonline.org**
to read about more Rotary projects.



# சங்கங்கள் திட்டமிடுவது மிக முக்கியம்

நாம் 2021ஐ ஆவலுடன் எதிர்நோக்குகிற நேரத்தில், இந்த 364 நாட்களின் நிறைவில் நம் சிந்தனை நின்றுவிடவேண்டியதில்லை. 2022ல், 2023ல், அதன்பிறகு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைப்பற்றி முன்னோக்கிச் சிந்திக்கிறீர்களா?

நம்மால் எதிர்காலத்தை முன்கூட்டியே காண இயலாது, ஆனால், நாம் எங்கு செல்ல விரும்புகிறோமோ அந்த இடத்துக்கு நம்மை நாமே அழைத்துச்செல்ல இயலும். ஒவ்வொரு ரோட்டரி சங்கமும், ஆண்டுக்கு ஒருமுறையாவது ஒரு வியூகக் கூட்டத்தை நடத்துவது முக்கியம் என்று நான் எண்ணுகிறேன். சங்கங்களுடைய திட்டங்களுக்காக அந்தச் சங்கங்களுடன் பணியாற்றுவதில் மிகுந்த அனுபவம் கொண்டவர் PRID கிரெக் யாங்க். அவர் தன்னுடைய பார்வையைப் பகிர்ந்துகொள்கிறார்.

*திட்டமிட மறந்தவர்கள் தோல்விக்குத் தயாராகிறார்கள்'' என்பது ஒரு புகழ் பெற்ற பழமொழி. வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் வெற்றியைச் சாதிப்பதற்குத் திட்டமிடுவது அவசியமாகும், இது ரோட்டரிக்கும் பொருந்தும். ஒவ்வோராண்டும் நாம் இதில் மேலும் மேம்படுகிறோம்.*

*ரோட்டரி சங்கங்களுக்காக வியூகத் திட்ட மிடுதல் நல்ல பலனை அளிக்கும். அந்த வழியைக் கண்டறிவதற்கு நான் பல சங்கங் களுக்கு உதவியிருக்கிறேன். இதற்காக, நான் அவற்றுடன் இணைந்து பணியாற்றியிருக்கிறேன், "புளூபிரின்ட்" என்று நான் அழைக்கிற ஒரு பல்லாண்டுத் திட்டத்தைக் கட்டமைக்க அவற்றுக்கு உதவியிருக்கிறேன். இந்தத் திட்டம், இந்த அடிப்படைக் கேள்விக்குப் பதிலளிக்கிறது: நம் சங்கத்துக்கான நம்முடைய நோக்கம் என்ன?*

*நான் பார்த்தவரையில், கவனத்தைக் குவிக்கிற திட்டங்கள்தான் மிகச் சிறப்பாக அமைகின்றன, அதாவது, ஒரு சங்கம் தனக்குள்ள மிகச் சிறந்த வாய்ப்புகளில் தன்னுடைய வளங்களைக் குவிக்கும் திட்டங்கள். உங்கள் ரோட்டரி சங்கம், தன்னுடைய உறுப்பினர்களுக்கும், தான் சேவை புரிகிற சமூகத்துக்கும் எல்லா விஷயங்களாகவும் இருக்க இயலாது; அதன் மனித, நிதி மற்றும் நேர வளங்கள் வரம்புக்குட்பட்டவை. ஒரு வெற்றிகரமான திட்டம், சொத்துகள் மற்றும் வரம்புகளைக் கருத்தில் கொள்கிறது, உங்கள் உறுப்பினர்களுக்கான விரும்பப்படும் வழியை வரைகிறது.*

*உங்கள் சங்க உறுப்பினர்களுடன் கலந்து பேசுங்கள், ஒரு பன்னாட்டு வியூகத் திட்டத்தைக் கட்டமைக்கத் தொடங்குங்கள், அடுத்து, உங்கள் முன்னெடுப்புகளை மூன்றிலிருந்து ஐந்து முக்கியத்துவங்களைக் கொண்ட ஒரு மையத் தொகுப்பாகக் குறையுங்கள்.*

*அதன்பிறகு, களத்தில் இறங்கி அதை நிறைவேற்றுங்கள். சங்கங்களின் திட்டமிடுதலில் சங்கங்களுக்கு உதவுவதற்காக ரோட்டரி ஒரு நல்ல வார்ப்புருவை (டெம்ப்ளேட்) உருவாக்கியுள்ளது, அதை நீங்கள் இங்கு காணலாம்: my.rotary.org/document/strategic-planning-guide.*

புதிய விவாதங்கள் மற்றும் யோசனைகளால் நம் சங்கங்கள் வளமாகவேண்டும், அவற்றில் ஆர்வம் பெருக வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். வியூகத் திட்டமிடுதலின் வழியாக நாம் இதை ஆராய்கிறோம், நம் சங்கத்தின் மிக இயல்பை, அதன் உறுப்பினர்களுக்கும் சமூகத்துக்கும் அது வழங்கும் மதிப்பை வரையறுக்கிறோம். ஒவ்வொரு சங்கமும் வெவ்வேறு, ஒவ்வொரு சங்கத்தின் மதிப்பும் தனித்துவமாக இருக்கும். திட்டமிடல் செயல்முறையின்போது, தாங்கள் செய்து கொண்டிருந்த சில செயல்பாடுகள் இனி பொருந்தாது அல்லது ஈர்க்காது என்பதையும் சங்கங்கள் கண்டறியலாம்.

உங்கள் சங்கம் ஒரு வியூகத் திட்டத்தை உருவாக்கிய பிறகு, தேவையான மாற்றங்களைச் செய்யவேண்டும். நம் சொந்தச் சங்கங்களைத் தனித்துவமாக்குவது என்ன என்பதை நாம் கண்டறியும்போது, நம் முயற்சிகள் அனைத்திலும் அந்த மைய மதிப்பீடுகளைச் சிந்தித்துக் கட்டமைக்கும்போது, ரோட்டரி வாய்ப்புகளைத் திறக்கிறது, எல்லாருடைய வாழ்க்கைகளையும் வளமாக்குகிறது.



கிரெக் யாங்க்
2017–19
RI இயக்குனர்

**ஹோல்கர் நாக்**
RI தலைவர்




# தொற்று நமக்கு கற்றுக்கொடுத்தது என்ன?

என் வாழ்க்கையின் நினைவில் இதுபோன்ற நிச்சயமில்லாத, கொடூரமான, திகிலூட்டும், பேரழிவை ஏற்படுத்திய ஆண்டை நான் பார்க்கவில்லை. அது இப்போது முடிவுக்கு வருகிறது. எனினும் உலகத்தில் இந்த ஆண்டு முடிவுக்கு வருகிறதே என்று சோகமாக இருப்பவர்களும் உள்ளார்களோ என எண்ணத் தோன்றுகிறது. டைம்ஸ் பத்திரிகையின் டிசம்பர் இதழில் 2020 என்று தடித்த எழுத்துகளால் குறிப்பிட்டு அதன் மீது X என்ற குறியீட்டை பெரிதாக போட்டிருந்தனர். கொவிட்-19 தொற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்க மிகவும் நம்பகமான பாதுகாப்பான தடுப்பூசி விரைவில் வந்துவிடும் என உலகமே நம்பிக்கை ஒளியில் காத்திருக்கும் நேரத்தில், பிரிட்டனில் புதிய வகை கொரோனா தொற்று பரவிவருவதாக செய்திகள் வெளி வந்துள்ளது அதிர்ச்சியை அளிப்பதாக உள்ளது. மீண்டும் ஒருவிதமான கட்டுப்பாடுகள், பிரிட்டனிலிருந்து இந்தியா வரும் விமானங்களுக்கு தடைவிதிப்பு, அங்கிருந்து வந்த பயணிகளுக்கு கொரோனா அல்லது புதிய உருமாற்றத்தில் வந்துள்ள வைரஸ் தொற்று இருக்கிறது என்று கண்டறியும் சோதனைகள் தொடங்கியுள்ளன. புத்தாண்டில் கொரோனா வைரஸிலிருந்து நம்மை காத்துக்கொள்ள தடுப்பூசிகள் வந்துவிடும் என நம்பிக்கையுடன் இருக்கும் நிலையில் மீண்டும் வைரஸ் கருமேகங்கள் நம்மை சூழ்ந்துள்ளன.

2020ம் ஆண்டு மோசமான ஆண்டாக இருந்தாலும், நமக்கெல்லாம் ஓய்வு கொடுத்ததுடன், நாம் சிந்தித்து நமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள நேரம் கொடுத்தது. நம்பிக்கை, துணிச்சல், தாராள மனப்பான்மை, கருணை, சுயநலமற்ற தன்மை ஆகியவற்றை கற்றுக்கொடுத்தது. மேலும் கொரோனா தொற்று பரவாமல் இருக்க மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் இருக்கவும், சௌகரியங்களைத் தேடிச் செல்லாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தோம். சிலர் தைரியம் மற்றும் நம்பிக்கையுடன் ஏழைகளுக்கும் உதவி தேவைப்பட்டவர்களுக்கும் உதவ முன்வந்தனர். இந்தியாவில் பல இடங்களில் உள்ளவர்களும் பல்வேறு விதத்தில் உதவிக்கரம் நீட்ட முன்வந்தனர். சூரத் நகரில் குடியிருப்புகளில் வசிக்கும் பெண்கள் ஒவ்வொருவரும், தினமும் சப்பாத்தி தயாரிக்கும் போது கூடுதலாக 5 அல்லது 6 சப்பாத்தி தயாரித்து வழங்கினர். இவை மொத்தமாக சேகரிக்கப்பட்டு செய்வதறியாமல் தவித்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. சூரத் மக்கள் தங்கள் கைப்பணத்தை தாராளமாக செலவிட்டு நல்லிதயத்தை வெளிப்படுத்தினர். திடீர் பொது முடக்கத்தால் தவித்த வீடற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் மனிதநேயத்துடன் உணவும், நிவாரணமும் அளித்தவர்களில் ரோட்டேரியன்களுக்கும் முக்கிய பங்கு உண்டு.

புத்தாண்டு எப்படி இருக்கும்? கடந்த ஆண்டைவிட சிறப்பாக இருக்குமா அல்லது அதைவிட மோசமானதாக இருக்குமா? இதைத் தெரிந்துகொள்ள நம்மிடம் மந்திரக்கோல் எதுவும் இல்லை. ஆனால், ஒரு விஷயம். இந்த தொற்று நம்மிடையே திகிலையும், பீதியையும் ஒருபக்கம் ஏற்படுத்தியிருந்தாலும் மற்றொரு பக்கம் நமது குறிக்கோள் இல்லாத வாழ்க்கையை நேர்படுத்தியுள்ளது. நமது தொழிலில் புதிய இலக்குகளை அடைய வழியேற்படுத்தியுள்ளது. வங்கி சேமிப்புகளையும் உயர்த்தியுள்ளது. நாம் எதைச் செய்தாலும் அது மதிப்பு மிகுந்ததாக இருந்தது. வைரஸ் தொற்றிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள நாம் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தோம். ஆனாலும் விமான சேவை நிறுத்தப்பட்டதாலும் கார், பஸ் போன்ற மோட்டார் வாகனங்கள் இயக்கப்படாமல் இருந்ததாலும் அவை வெளியிடும் புகைகளால் பாதிக்கப்படாமல் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டது. வீடுகளிலும் தோட்டத்திலும் பூக்கள் பூத்துக்குலுங்கின. எங்கும் மரங்கள் பசுமையாக காட்சியளித்தன. விலங்குகளும் பறவைகளும் சுதந்திரமாக தங்கள் இருப்பிடங்களில் சுற்றித்திரிந்தன அல்லது பறந்துசென்றன.

2021 வைரஸை தடுக்க தடுப்பூசி, பாதுகாப்பு எதைக் கொண்டுவந்தாலும் மருத்துவ வசதி மேம்படுதலும், அது சமமான அளவில் எல்லோருக்கும் கிடைப்பதும் முக்கியமாகும். மீண்டும் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கும் புதிய வாய்ப்புகளுக்காகவும் உலகமே காத்திருக்கிறது. இந்த வைரஸ் நமக்கு சில பாடங்களைக் கற்றுத்தந்தாலும், நாம் மனிதத்தன்மையுடன் இருக்க உதவியுள்ளதை நாம் மறந்துவிடலாகாது.



**ரஷீதா பகத்**

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG R Balaji Babu |
| RI Dist 2982 | DG K S Venkatesan |
| RI Dist 3000 | DG A L Chokkalingam |
| RI Dist 3011 | DG Sanjiv Rai Mehra |
| RI Dist 3012 | DG Alok Gupta |
| RI Dist 3020 | DG Muttavarapu Satish Babu |
| RI Dist 3030 | DG Shabbir Shakir |
| RI Dist 3040 | DG Gajendra Singh Narang |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Rajesh Agarwal |
| RI Dist 3060 | DG Prashant Harivallabh Jani |
| RI Dist 3070 | DG CA Davinder Singh |
| RI Dist 3080 | DG Ramesh Bajaj |
| RI Dist 3090 | DG Vijay Arora |
| RI Dist 3100 | DG Manish Sharda |
| RI Dist 3110 | DG Dinesh Chandra Shukla |
| RI Dist 3120 | DG Karunesh Kumar Srivastava |
| RI Dist 3131 | DG Rashmi Vinay Kulkarni |
| RI Dist 3132 | DG Harish Motwani |
| RI Dist 3141 | DG Sunnil Mehra |
| RI Dist 3142 | DG Dr Sandeep Kadam |
| RI Dist 3150 | DG Nalla Venkata Hanmanth Reddy |
| RI Dist 3160 | DG B Chinnapa Reddy |
| RI Dist 3170 | DG Sangram Vishnu Patil |
| RI Dist 3181 | DG M Ranganath Bhat |
| RI Dist 3182 | DG B Rajarama Bhat |
| RI Dist 3190 | DG B L Nagendra Prasad |
| RI Dist 3201 | DG Jose Chacko Madhavassery |
| RI Dist 3202 | DG Dr Hari Krishnan Nambiar |
| RI Dist 3211 | DG Dr Thomas Vavanikunnel |
| RI Dist 3212 | DG P N B Murugadoss |
| RI Dist 3231 | DG K Pandian |
| RI Dist 3232 | DG S Muthupalaniappan |
| RI Dist 3240 | DG Subhasish Chatterjee |
| RI Dist 3250 | DG Rajan Gandotra |
| RI Dist 3261 | DG Fakir Charan Mohanty |
| RI Dist 3262 | DG Saumya Rajan Mishra |
| RI Dist 3291 | DG Sudip Mukherjee |


Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

# RI இயக்குனர்



## ரோட்டரியின் தொழில் சார்ந்த சேவை

நான் சங்கத் தலைவராக இருந்தபோது, பாப் பார்த் RI தலைவராக இருந்தார். அவர் ஒருமுறை இவ்வாறு குறிப்பிட்டார்: ரோட்டரி ஊசி, அதை அணிபவரைப்பற்றி இவ்வாறு கூறவேண்டும்: “நீங்கள் என்னை நம்பலாம், நான் நம்பக்கூடிய ஒருவராக இருப்பேன், நான் நம்பகமானவராக இருப்பேன், நான் எடுத்துக் கொள்வதைவிடக் கூடுதலாக வழங்குகிறேன், நான் எப்போதும் கிடைப்பேன்.” இந்தச் சொற்கள் ரோட்டரியின் அனைத்து அம்சங்களுக்கும் பொருந்துகின்றன, குறிப்பாக, நம்முடைய தொழில் சார்ந்த சேவைக்குப் பொருந்துகின்றன.

ஜனவரி மாதம், தொழில் சார்ந்த சேவை மாதமாகும். மற்ற சேவை நிறுவனங்களிலிருந்து ரோட்டரியைத் தெளிவாகவும் கூர்மையாகவும் பிரித்துக் காண்பிக்கின்ற ஒன்று உண்டென்றால், நம்முடைய உறுப்பினர்கள் நம்முடைய தொழில்களின் அடிப்படையில் அமைகிறார்கள். தொழில் சார்ந்த சேவை என்பது, ஒருவர் மற்றவருடைய தொழில்களைப்பற்றிப் பகிர்ந்துகொள்வது, கற்றுக்கொள்வது, நம் தொழில் சார்ந்த திறமைகளைச் சேவை புரியப் பயன்படுத்துவது, ஓர் இளைஞருக்கு வழிகாட்டுவது, மிகச் சிறந்த தனி நபர்களை அடையாளம் காண்பது மற்றும் நம் தனிப்பட்ட, தொழில் சார்ந்த மற்றும் ரோட்டரி வாழ்க்கைகளில் நேர்மை.

பிறருக்கு, குறிப்பாக நம் இளைஞர்களுக்கு ஆற்றல் அளிக்கவேண்டும் என்று தொழில் சார்ந்த சேவை நம்மை அழைக்கிறது, அதற்காக நம்முடைய தனித்துவமான திறன்கள் மற்றும் வல்லமையைப் பயன்படுத்தி, அவர்கள் புதிய தொழில் சார்ந்த வாய்ப்புகள் மற்றும் ஆர்வங்களைக் கண்டறிய அவர்களுக்கு உதவவேண்டும் என்கிறது. தொழில் சார்ந்த உன்னதம் மற்றும் நேர்மை ஆகியவை, ரோட்டரியின் தொழில் சார்ந்த சேவையின் இரண்டு பின்னிப்பிணைந்த பகுதிகளாகும்.

தொழில் சார்ந்த விருதுகள், இந்த அம்சங்கள் இரண்டுக்கும் நியாயம் சேர்க்கின்றன. தங்கள் தொழிலை/பணியைப் பேரார்வத்துடனும், உன்னதத்தைப் பின்பற்றுதலுடனும், விடாமுயற்சி மற்றும் நேர்மையுடனும் செய்கிற தனி நபர்களை அங்கீகரிப்பதன்மூலம், அவர்களை ஊக்குவிக்கவும் அவர்களுக்குத் தன்னம்பிக்கை அளிக்கவும், பிறர் பின்பற்றுவதற்கான ஒரு மாதிரியை அமைக்கவும் ரோட்டரி விரும்புகிறது. தொழில் சார்ந்த சேவை மாதத்தைக் கொண்டாடுவதற்கு இது ஒரு நல்ல வழி.

மதிப்பீடுகள் நம் வாழ்க்கைகளில் உள்ளார்ந்து அமைந்துள்ளன. அவை நம் ஆளுமைக்கு வலிமை சேர்க்கின்றன. எனக்கு ஒரு கனவு வந்தது, அதில் கடவுள் என்னிடம் “இன்னும் மேம்பட்ட ஓர் உலகைக் கட்டமை” என்று கூறினார். “எப்படிக் கட்டமைப்பது?” என்று கேட்டேன் நான், “உலகம் ஒரு மிகப் பரந்த மற்றும் சிக்கலான இடம். நான் மிகச் சிறியதாக இருக்கிறேன், பொருட்படுத்தத் தகுதியற்று இருக்கிறேன்.” அதைக் கேட்டதும், அறிவு மிக்க கடவுள் கூறினார், “உன்னை இன்னும் மேம்படுத்திக்கொள்.”

நாம் ஒவ்வொருவரும் நம்மை மேம்படுத்திக்கொள்வோம், அதன்மூலம், நம் சங்கங்களை இன்னும் சிறப்பாக்குவோம், நம் சமூகத்தை வாழ்வதற்கு இன்னும் நல்ல இடமாக்குவோம். அதுதான் நம்முடைய தொழில் சார்ந்த வாய்ப்பு. நல்லவற்றைச் செய்வதற்கான மிகச் சிறந்த பரிசு, மேலும் நல்லவற்றைச் செய்கிற வாய்ப்புதான். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். ரோட்டரியை அனுபவியுங்கள், உங்களை அனுபவியுங்கள்.

**Dr பரத் பாண்ட்யா**
RI இயக்குனர், 2019–21

# களின் செய்திகள்



அன்புள்ள ரோட்டரி தலைவர்களுக்கு,

சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற் காகவும், புதிய தொழில் வாய்ப்புகள் மற்றும் ஆர்வங்களைக் கண்டறியப் பிறருக்கு உதவுவதற்காகவும் நம்முடைய தனித்துவமான திறன்கள், வல்லமையைப் பயன்படுத்திப் பிறருக்கு ஆற்றலளிக்கவேண்டும் என்று தொழில் சார்ந்த சேவை நம்மைக் கேட்கிறது.

ஜனவரி மாதம், ரோட்டரியின் தொழில் சார்ந்த சேவை மாதம் ஆகும். உங்கள் சங்கத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளில் தொழில் சார்ந்த சேவையைப் பயன்படுத்திக்கொண்டு நம்முடைய நான்கு வழிப் பரிசோதனையின் உணர்வை உள்ளீர்த்துக்கொள்வதற்கான ஒரு மிகச் சிறந்த நேரம் இது.நீங்கள் ஒவ்வொருவரும் இரு வகைகளில் தொழில் சார்ந்த உன்னதத்தைப் பின்பற்றவேண்டும். முதலில், உங்கள் தனிப்பட்ட பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பு, இரண்டாவதாக, உங்கள் சங்கச் செயல்பாடுகளின் வழியாக:

**உங்கள் சங்கச் செயல்பாடுகளில் தொழில் சார்ந்த சேவையைக் கொண்டு வருவதற்கு உங்களுக்கு உதவக்கூடிய ஐந்து வழிகள்:**

- இந்த மாத சங்கக் கூட்டத்தில் நான்கு வழிப் பரிசோதனை, தொழில் செய்கிற, பல தொழில்களில் ஈடுபடுகிற ரோட்டரியன்களுடைய அறிவிப்பு ஆகியவையும் இடம்பெறலாம்.
- ஒவ்வோர் உறுப்பினரும் தன்னுடைய தொழிலைப்பற்றி ஓர் ஐந்து நிமிட உரையை வழங்கலாம்.
- உங்கள் சமூகத்தில், மிகச் சிறந்த தொழில் சார்ந்த சாதனையை வெளிப்படுத்தியுள்ள, அதே நேரம் மிக உயர்ந்த நெறித் தரநிலைகளையும் பராமரித்துள்ள ஒருவருக்கு விருது வழங்குங்கள்.
- சமூகத்தின் தொழில் சார்ந்த தேவைகளைப்பற்றி விளக்கும்படி வல்லுனர்களை அழையுங்கள்; அத்தகைய திட்டத்தை உருவாக்குங்கள்.
- சங்க உறுப்பினர்கள் ரோட்டரி தன்னார்வலர்களாகப் பணியாற்றுவதற்காகத் தங்கள் தொழில் சார்ந்த திறன்களைப் பயன்படுத்தலாம் என்று ஊக்குவியுங்கள்.

**தனி நபர் என்றமுறையில் நீங்கள் தொழில் சார்ந்த சேவையைப் பின்பற்றக்கூடிய ஐந்து வழிகள்:**

- ஒரு ரோட்டரி செயல் குழுவை உருவாக்குங்கள்.
- உங்கள் தொழிலை நேர்மையுடன் நடத்துங்கள்.
- இளைஞர்கள் தங்களுடைய பணி வாழ்க்கை இலக்குகளை எட்ட உதவுவதற்காக, வழிகாட்டுதல்கள், பயிற்சிநிலைப் பணிகள் அல்லது எதார்த்த வாய்ப்புகளை உருவாக்குவதற்காக உள்ளூர்த் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பணிபுரியுங்கள்.
- பிறருடைய தொழில் சார்ந்த முன்னேற்றத்துக்கு வழிகாட்டுங்கள், அவர்களை ஊக்குவியுங்கள்.
- தொழில் சார்ந்த ரோட்டரி நட்புப் பரிமாற்றம் ஒன்றில் பங்கேற்றிடுங்கள்.

நாம் வெற்றி மனிதர்களாக மாற முனைவதைவிட, மதிப்பு மிக்க மனிதர்களாக மாற முனைவோம்.

**கமல் சங்வி**
RI இயக்குனர், 2019–21


## Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPE Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |
| RIDE A S Venkatesh | RI Dist 3232 |
| RIDE Dr Mahesh Kotbagi | RI Dist 3131 |

**Executive Committee Members (2020–21)**

| | |
|---|---|
| DG Sanjiv Rai Mehra<br>Chair – Governors Council | RI Dist 3011 |
| DG Sudip Mukherjee<br>Secretary – Governors Council | RI Dist 3291 |
| DG Sangram Vishnu Patil<br>Secretary – Executive Committee | RI Dist 3170 |
| DG Prashant Harivallabh Jani<br>Treasurer – Executive Committee | RI Dist 3060 |
| DG S Muthupalaniappan<br>Member – Advisory Committee | RI Dist 3232 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from
*rotarynewsonline.org* on WhatsApp.

# நம்பிக்கைக்கும் வாய்ப்புக்கும் ஏற்ற நேரம்!

பரத் பாண்ட்யா

கோவிட்-19 ஒரு வருடமே வீணாகி விட்ட நிலையில், எனக்கு சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய A Tale of Two Cities புத்தகம்தான் நினைவுக்கு வருகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகள் இப்படித்தான் தொடங்குகிறது.

*இது மிகச் சிறந்த நேரமாகும்,*
*இது மிக மோசமான நேரமும்கூட;*
*இது ஒளியின் பருவம்,*
*இது இருளின் பருவம்;*
*இது நம்பிக்கையின் வசந்தம்,*
*இது விரக்தியின் குளிர்காலம்.*

இந்த வரிகள் 2020ம் ஆண்டில் நடந்தது என்ன என்பதை எடுத்துரைக்கின்றன. நிறைய வாக்குறுதிகளுடனும் நம்பிக்கையுடனும் தொடங்கியது இந்த ஆண்டு. ரோட்டரியின் தொடர்புகளுக்கும் ரோட்டரியின் வாய்ப்புகளுக்கும் நம்பிக்கை அளிக்கும் விதத்தில் இருந்தது. ஆனால், கோரோனா வைரஸ் தொற்று பரவலால் இந்த ஆண்டு இருளில் மூழ்கி விரக்தியை ஏற்படுத்தி விட்டது. இன்னும் சொல்லப்போனால் உலகையே தனது காலடியில் விழவைத்துவிட்டது.

ஒரு மாணவன், பயிற்சியாளர், மருத்துவர், மருத்துவ ஆலோசகர் என்ற வகையில் மருத்துவத் துறையுடன் எனக்கு 44 ஆண்டு கால தொடர்பு உண்டு. ஆனால், இந்த தொற்றுநோயால் ஏற்பட்ட விரக்தி, மறுப்பு, பயம் மற்றும் மனவேதனையை இதுவரை நான் பார்த்ததில்லை. இந்த கோவிட்-19 நெருக்கடியில் ஒரு முன்னணி சுகாதார நிபுணராக நான் நம்பமுடியாத வகையில் மக்களின் எதிர் வினைகளைக் கண்டேன். மக்கள் மற்றும் வீட்டு வசதி சங்கங்கள் தங்களுக்குள் புதிய விதியை உருவாக்கின. அவை பெரும்பாலும் நம்பத்தகாதவை மற்றும் பொருத்தமற்றவை என்றாலும் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தப் பட்டன.

இந்த பகுத்தறிவு மற்றும் பகுத்தறி வில்லாத எதிர்செயல்களுக்கு நடுவே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், வீடற்றவர்கள், பசியோடு இருப் பவர்களின் துயரங்களைப் போக்கு வதற்கு ஏராளமான நம்பிக்கைகள் துளிர்விட்டன.

ஏழைக்கு இலவசமாக வழங்கு வதற்காக ஜெய்ப்பூரில் மருத்துவ தம்பதிகள் முகக்கவசங்களை தயாரித்தது, கோரோனாவில் ஜம்மு காஷ்மீர் காவலர் ஒருவரின் ராப் ஜிங்கிள் (Rap jingle) வைரலாகிப் போனது, பொது முடக்கத்தால் உணவு கிடைக்காத காலங்களில் மும்பையில் உள்ள சுகாதார ஊழியர்களுக்கு பல மாதங்களுக்கு இலசமாக உணவுப் பொட்டலங்களை வழங்கிய டாடா

குழுமம் இப்படி பலவற்றைச் சொல்லலாம். தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் தொற்று அபாயம் காத்திருந்தபோதிலும் சுகாதார ஊழியர்களும், முன்களப் பணியாளர்களும் உலகில் இயங்கிக் கொண்டிருந்தனர். இது போன்ற பல செய்திகள் மனிதகுலத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தின. கொரோனா தொற்றுப் பரவல் காலத்தில் வெளியில் தெரியாத பல ஹீரோக்கள் சிறப்பாக பணியாற்றியுள்ளனர். அவர்களில் ரோட்டரி சங்கங்களும், ரோட்டேரியன்களும் அடங்குவர்.

செழுமை என்பது நம் மனநிலை என்று நாம் நம்புகிறேன். ஒருவரிடம் அதிக பணம் இருந்தால், அவர் செல்வந்தராக இருக்கலாம், ஆனால், அவர் செழுமையானவராக இருக்க வேண்டியதில்லை. ஒருவரிடம் பணம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர் ஏழையாக இருக்க வேண்டியதில்லை. என்னுடைய அப்பா என்னிடம் இப்படிச் சொல்லுவார்: உன்னிடம் எவ்வளவு இருக்கிறது என்பது முக்கியமல்ல, ஆனால், உங்களிடம் இருப்பதை நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதுதான் முக்கியம், என்பார். எமர்சன் சொல்வது போல, தாராள மனம் இல்லாமல் செல்வம் இருப்பதால் பயனில்லை. இந்த நெருக்கடியான நேரத்தில் உலகில் பலர், குறிப்பாக ரோட்டேரியன்கள் தங்களின் தாராள மனதை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த கொரோனா தொற்று நெருக்கடி வறுமை, பலவீனமான சுகாதார அமைப்பு, பாதுகாப்பான குடிநீர் இல்லாமை, சுகாதாரமின்மை, கல்வி அறிவு, ஒத்துழைப்பு இல்லாமையையே காட்டுகிறது. பல நாடுகள் ஆயத்தமில்லாமல் இருப்பதையும், பொது சுகாதாரம் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளதையும் கொவிட்-19 நெருக்கடி படம்பிடித்து காட்டியுள்ளது. உலக நாடுகளின் தலைவர்கள் முழுமையான அக்கறையுடன் செயல்படாததையும், மக்கள் இதை சாதாரணமாக எடுத்துக் கொண்டதையும் நாம் பார்க்க முடிந்தது. இது அனைத்து நாடுகளுக்கும் அதிர்ச்சியாக அமைந்துள்ளது. மேலும் முக்கிய பொருள்கள் விநியோகத்தில் பாதிப்புகளும், அவசர சிகிச்சை க்குத் தேவையான உபகரணங்கள் கிடைக்காமலும் பொதுசேவைகள் போதிய அளவு கிடைக்காததையும் அம்பலப்படுத்தியுள்ளது.

சில நல்ல அம்சங்களும் உள்ளன. சுற்றுச்சூழல் மேன்மை, அதிக அளவிலான அறிவியல் கூட்டுறவு, விரைவான முன்னேற்றங்கள், மேம்பட்ட தகவல் தொடர்பு, மெய்நிகர் தகவல் தொடர்பு ஊடகத்தின் நேர்மறையான பயன்பாடு மற்றும் உலகம் உண்மையிலேயே உலகளாவிய கிராமமாக மாறிவிட்டிருந்தது. உலகம் இப்போது மீண்டுவர சரியான பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பொது சுகாதாரத்துக்கான செலவினங்கள் இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 1.3 சதவீதமாக இருக்கும் நிலையில் பொது சுகாதார முறைகளை வலுப்படுத்தவும் எதிர்காலத்தில் ஏற்படும் தொற்றுகளை எதிர்கொள்ளும் வகையில் நாம் தயார் நிலையில் இருக்க வேண்டிய அவசியத்தை இப்போது நாம் உணர்ந்துள்ளோம். மருத்துவர்களும் செவிலியர்களும் பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் மட்டும் போதாது. தொற்று ஏற்படும் காலத்தில் அதை திறமையாக கையாளும் வகையில் தடுப்பூசி போடுபவர்கள், ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆஷா ஊழியர்கள் மற்றும் பிற உதவியாளர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதேபோல மருத்துவமனைகளிலும் போதுமான தீவிர சிகிச்சை பிரிவுகளில் படுக்கை வசதிகளும், தீவிர மற்றும் அவசரச் சிகிச்சைக்குத் தேவையான அடிப்படை வசதிகளும் இருப்பதை நாம் உறுதிசெய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நாம் தொற்று நோய் அல்லாத நோய்கள் உள்ளிட்ட அனைத்துவிதமான நோய்களையும் எதிர்த்துப் போராடமுடியும். இதில் கூடுதல் நன்மை என்னவென்றால் இளைஞர்கள் பலருக்கு இதன் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

நாம் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதைவிட பிரச்னைகளுடனேயே வாழ்ந்து வருகிறோம். கோவிட்-19 வைரஸ் தொற்று இந்த நிலைமையை மாற்றிவிட்டது. மாறிவரும் உலகில் நமக்கு புதிய உத்வேக த்தை அளித்துள்ளது. வைரஸ் தொற்று நமக்கு சில பாடங்களை கற்றுக்கொடுத்துள்ளது.

யாரையும் நாம் விட்டுவிட முடியாது. ஒரு சிறிய குழுவை நாம் கவனிக்காமல் விட்டுவிட்டாலும்

இந்த கொரோனா தொற்று நெருக்கடி வறுமை, பலவீனமான சுகாதார அமைப்பு, பாதுகாப்பான குடிநீர் இல்லாமை, சுகாதாரமின்மை, கல்வி அறிவு, ஒத்துழைப்பு இல்லாமையையே காட்டுகிறது.

தொற்றுநோய் மீண்டும் எழக்கூடும். தொற்று அனைவரையும் பாதிக்கிறது. ஏழை, பணக்காரன், நகர மக்கள், கிராம மக்கள் என்று தரம் பிரிப்பதில்லை. அனைவரையும் ஒன்றாகவே பார்க்கிறது, பாதிக்கிறது.

இதற்கு உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச அளவில் சமாளிக்கும் திறமை தேவை. உடல் ஆரோக்கியம், பசி மற்றும் வறுமை ஒழிப்பு, உற்பத்தித்திறனுடனான வேலை, தரமான கல்வி, பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய சவால்களை தனியாகவோ அல்லது சாதாரண அணுகுமுறையாலோ கையாளமுடியாது. இந்தச் சிக்கல்களைச் சமாளிக்க உலகம் ஒன்றுபட்டு கூட்டு மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும்.

நான் இந்த கட்டுரையை எழுதும் நேரத்தில் நம்பிக்கை ஒளி தெரிகிறது. MRNA தடுப்பூசியை அவசர காலத் தில் பயன்படுத்த 6 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன. மேலும் சில தடுப்பூசிகள் அவசரகால பயன்பாட்டுக்காக இறுதிக்கட்ட ஒப்புதலுக்காக காத்திருக்கின்றன. அடுத்து வரும் மாதங்களில் மேலும் சில தடுப்பூசிகள் கிடைக்கும். அது ஒரு நல்ல செய்தி.

1796-ஆம் ஆண்டில் பெரியம்மை நோய்க்கு எதிரான தடுப்பூசி என்ற கருத்தை அறிமுகப்படுத்திய எட்வர்ட் ஜென்னருக்கு நாம் அனைவரும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். பெரியம்மைக்கான தடுப்பூசி லண்டனிலிருந்து வியன்னா, பாக்தாத், பாஸ்ரா வழியாக கடைசியில் 1802ம் ஆண்டு மும்பையை வந்தடைந்தது. கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டு களுக்குப் பிறகு 1980ம் ஆண்டில் உலகம் பெரியம்மை நோயிலிருந்து



*RC விருதாச்சலம் முன்னாள் தலைவர் A தீபக் சந்த் போலீஸாருக்க உடல் வெப்பநிலை பரிசோதனை செய்கிறார்.*



RC *மும்பாய் குவீன்ஸ் நெக்லெஸ் உறுப்பினர் பொது மக்களுக்கு உணவு வழங்குகின்றனர்.*

முழுமையாக விடுபட்டதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது.

ஸ்பானிஷ் ப்ளூ நோய்த் தொற்று 1918ம் ஆண்டில் தொடங்கியது. ஆனால், அதற்கான தடுப்பூசி 27 ஆண்டுகளுக்குப் பிறகு 1945ம் ஆண்டில் பயன்பாட்டுக்கு வந்தது. போலியோவுக்கான தடுப்பூசி பயன் பாட்டுக்கு வர ஒப்புதல் பெற 10 ஆண்டுகள் ஆனது. கொரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பூசி ஓராண்டுகளுக்குள்ளாகவே கிடைக்க விருக்கிறது. இது சற்று நம்பிக்கை அளிக்கிறது. நாம் காயமடைந் துள்ளேமே தவிர தாக்கப்படவில்லை. இருள் நிறைந்த சுரங்கப்பாதையின் முடிவில் ஒளி தெரிகிறது.

நாம் செல்ல வேண்டிய பாதை நீளமானது மட்டுமல்ல, கடின மானதும் கூட. உலகம் முழுவதும் 7 பில்லி யனுக்கும் அதிகமான மக்களுக்கு தடுப்பூசி போடுவது என்பது கடினமான பணியாகும். இதற்கு உலகில் உள்ள அரசாங்கங்கள், உலக சுகாதார நிறுவனம், மற்றும் இதர ஐ.நா. அமைப்புகள், ரோட்டரி உள்ளிட்ட சேவை நிறுவனங்கள், கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் சிறிய மற்றும் பெரிய தொண்டு நிறுவனங்கள் இவற்றுக்கிடையே ஒத்துழைப்பும் நெருக்கமான பணி உறவுகளும் தேவை. சமூகப் பொருளாதார நிலை, ஜாதி, மதம் ஆகியவற்றை பொருட்படுத்தாமல் அனைத்து மக்களையும் சமமாக பாவித்து தடுப் பூசி போடப்பட வேண்டும். தடுப்பூசி க்கான எதிர்ப்பையும் தடுப்பூசி பற்றிய தவறான தகவல்களையும் சமாளிப்பதே நமக்கு பெரிய சவாலாக இருக்கும்.

கோவிட்-19 தடுப்பூசி போடும் பணியில் ரோட்டரியின் ஈடுபாட்டுக்கு RI நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. தடுப்பூசி போடுவதை ஆதரித்து பேசுவதுடன் நில்லாமல் தடுப்பூசிக்கு உள்ளூர் தேவை என்ன என்பதையும் ரோட்டரியினர் தெரிந்துவைத்திருக்க வேண்டும். தலைவர் பதவிக்குத் தேர்வு செய்யப் பட்டுள்ள ஜென்னிஃபர் ஜோன்ஸ் கூறுவது போல, கோவிட் தடுப்பூசி தடுப்பூசி முயற்சிக்கும் போலியோ தடுப்பூசி போடுதலுக்கும் இடையே தொடர்பு உள்ளது. இது போலியோ பிளஸ்ஸில் உள்ள பிளஸ் போன்றது. ஒருவேலையை எடுத்துக் கொண்டு அதை துணிந்து ஒரு செயல் திட்டத்துடன் செயல்படுத்தினால் அற்புதங்களை நிகழ்த்த முடியும் முடியும் என்பது போலியோ மூலம் நிரூபித்துள்ளோம்.

நம்பிக்கை வாய்ப்பு இரண்டும் சேர்ந்ததுதான் ரோட்டரி. இது நமது நேரம். இது நமக்கு கிடைத்துள்ள நல்ல தருணம். ஒரு சிறந்த தடுப்பூசி கிடைப்பதற்கான நம்பிக்கை அதிகரித்துள்ள நிலையில், நாம் நமது பங்கைச் செய்வதற்கான புதிய வாய்ப்புக்கான கதவு திறந்திருக்கிறது. அதை ரோட்டரி புரிந்துகொண்டு சிறப்பாகச் செயல்பட வேண்டும். நாம் இணைந்து செயல்பட்டால் செயற்கறிய சாதனைகளைப் புரிய முடியும். அதற்கான நேரம் இப்போது வந்துள்ளது. இதன் மூலம் நாம் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை ஏற்றி வாழ்வை வசந்தமாக்குவோம்.

கட்டுரையாளர் RI இயக்குநராக பதவி வகிக்கிறார்.

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரிக்கு ரூ.1.08 கோடியில் ‘‘மாமோகிராபி’’ கருவி

ரஷீதா பகத்

சுரேஷ் மாத்யூ, ரோட்டரி மாவட்டம் 3211ன் மாவட்ட ஆளுநராக (2017–2018) பதவி வகித்த காலத்தில் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தார். அவரும் அவரது குழுவினரும் அதற்கு மருத்துவ மனைத் திட்டங்கள் மற்றும் உபகரணங்கள் என்பதன் சுருக்கமாக ‘ஹோப்’ (Hospital Projects and Equipment) என்று பெயரிட்டிருந்தனர்.

மனிதவள மேம்பாட்டுக் குறியீடு ஒப்பீடு அளவில் இந்திய மாநிலங்களில் உயர்ந்த இடத்தில் கேரளம் இருந்தாலும் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய்கள் மற்றும் புற்றுநோய் போன்ற வாழ்க்கை முறை நோய்கள் கேரளத்தில் அதிகம் உள்ளன. நோய் கண்டறியும் முறைகள் மற்றும் இதர சிகிச்சை முறைகள் மூலம் இந்த நோய்களைக் கட்டுப்படுத்த கேரள அரசுக்கு உதவ வேண்டும் என்ற உணர்வு என்னுள் எழுந்தது என்கிறார் சுரேஷ் மாத்யூ.

எனது பதவிக்காலம் முடிவடையும் தறுவாயில் உள்ளதால் ஹோப்பின் கீழ் ஒரு பெரிய இறுதி திட்டத்தை தேடிக்கொண்டிருந்தேன். மேலும் இந்த யோசனையை நான் விரும்பும் தலைவர்களுடன் பகிர்ந்து கொண்டேன். அதுமட்டுமல்ல, மாவட்ட மானிய ஆதரவையும் வழங்கினேன். எனது யோசனையை திருவனந்தபுரம் கௌடியர் ரோட்டரி சங்கத்தலைவரும் மூத்த இதயநோய் நிபுணருமான Dr P மங்களநந்தன் ஏற்றுக்கொண்டார். இது தொடர்பாக அரசு மருத்துவ மனைகளில் தேவை, மதிப்பீட்டு கணக்கெடுப்பு நடத்தினார். பெண்களிடம் பொதுவாக மார்பக புற்றுநோய் அதிகரித்து வருவதால் அரசு மருத்துவமனைகளில் மாமோகிராபி கருவி அவசியம் தேவை என்று கருதினார்.

மார்பக புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிந்தால் தகுந்த சிகிச்சை மூலம் அதை சரிசெய்யலாம்



என்பது ஒருபக்கம் இருந்தாலும், இந்தியாவில் இளம் பெண்களிடம் அதிக அளவில் மார்பக புற்றுநோய் இருப்பது தெரியவந்துள்ளது. குறிப்பாக 30-வயது முதல் 40 வயது வரையிலான பெண்கள்தான் மார்பக புற்றுநோயால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இதுவே மேலை நாடுகளில் 40 முதல் 50 வயது வரை என்ற நிலையில் உள்ளது. 30 வயதுகளிலும் 40 வயதுகளிலும் பெண்கள் குடும்பத்தில் கவனம் செலுத்தி வருவார்கள் அல்லது தங்கள் தொழிலில் அதிக கவனம் செலுத்தி வருவார்கள். அவர்களுக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பது தாமதமாகத் தெரியவந்தால் அதற்கான சிகிச்சை முறைகள் சிக்கலை ஏற்படுத்தும். மேலும் மனதளவிலும், நிதியாதார அளவிலும் அவர்களிடம் பெரிய சுமையை ஏற்படுத்தும் என்கிறார் ரோட்டரி டிஜிட்டல் மாமோகிராபி திட்டத்தின் தலைவர் டாக்டர் மங்களநந்தன்.

அமெரிக்க புற்றுநோய் சங்கம் உள்ளிட்ட பல்வேறு புற்றுநோய் அமைப்புகள் 40 முதல் 55 வயது க்குட்பட்ட பெண்கள் மார்பக புற்றுநோய் பரிசோதனையை தவறாமல் செய்துகொள்ள வேண்டும் என்று பரிந்துரைப்பதற்கு இதுதான் காரணம் என்கிறார் அவர். எனினும் போதுமான விழிப்புணர்வு இல்லாதது அல்லது மார்பக புற்றுநோய் கண்டறியும் மாமோகிராபி கருவிகள் இல்லாதது, ஆகியவை காரணமாக பிற்காலத்தில் இந்நோய் இருப்பது கண்டறியப்படுகிறது. இதன் மூலம் இறப்பு விகிதமும் அதிகரிக்கிறது.

கேரளத்தில் மார்பக புற்றுநோயின் பாதிப்பு தேசிய சராசரியைவிட அதிகமாக இருப்பதாகவும் குறிப்பாக திருவனந்தபுரத்தில் இந்த எண்ணிக்கை அதிகமாக இருப்பதாகவும் ரோட்டரி நடத்திய அடிப்படை ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக மாத்யூ தெரிவிக்கிறார். கேரளத்தில் மார்பக புற்றுநோய் பரிசோதனைக்கான திட்டமோ அல்லது அதற்கான வச தியோ இல்லை என்பதை நாங்கள் கண்டறிந்தோம். திருவனந்தபுரத்தில் உள்ள பிராந்திய புற்றுநோய் சிகிச்சை மையத்தில் டிஜிட்டல். முறையிலான மார்பக பரிசோதனை கருவி உள்ளது என்றாலும் அங்கு நோய் கண்டறியும் பரிசோதனையைவிட அவற்றின் மூலம் சிகிச்சை அளிக்கவே திட்ட மிடப்படுகிறது. தனியாரிடம் இத்தகைய வசதி இருந்தாலும் மார்பக பரிசே ாதனைக்கு வரும் பெண்கள் ரூ.2,000 முதல் ரூ.3,000 வரை கட்டணமாகச் செலுத்த வேண்டி யுள்ளது. பெரும் பாலானவர்களால் இதை செலுத்த முடியாது.

இந்த பிராந்தியத்தில் மார்பகப் புற்று நோயைக் கண்டறியும் கருவி (மாமோகிராபி) தேவை என்பதை தெரிந்து கொண்டவுடன் திருவனந்தபுரம் கௌடியர் ரோட்டரி சங்கம் துரிதமாகச் செயல்படத் தொடங்கியது. இங்குள்ள பிரதான மருத்துவ கழகமான திருவனந்தபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன டிஜிட்டல் மாமோகிராபி கருவியை நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டது. கேரளத்தின் தெற்கு பகுதி மக்களும், தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் இதன் மூலம் பயன்பெறக்கூடும் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்த மருத்துவக் கழகத்தில் கதிரியக்கவியலாளர்கள், முதுகலை மாணவர்கள், பயிற்சியாளர்கள் இருப்பதால் மருத்துவ உபகரணங்களைத் திறமையாகக் கையாள போதிய மனித ஆற்றல் இருப்பதும் உறுதிசெய்யப்பட்டது.

ஜெர்மனியின் ஜெனரல் எலெக்ட்ரிக் நிறுவனத்தின் செனோகிராபி கிறிஸ்டல் நோவா என்னும் நவீன டிஜிட்டல் மாமோகிராபி உபகரணம் நல்ல தரமான படங்களை எடுத்து சரியான தகவல்களைத் தருகிறது என்பது தெரியவந்ததால் அதை வாங்கி நிறுவ முடிவு செய்யப்பட்டது. அதன் விலை ரூ.1.2 கோடி என தெரியவந்தது. ஆனால் பின்னர் பேரம் பேசி அதை ரூ.1.08 கோடிக்கு வாங்க தீர்மானிக்கப்பட்டது. ஆனாலும் ரோட்டரி மாவட்டம் 3211ல் எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு இது ஒரு பெரிய தொகையாகும். இதற்கு நிதி திரட்டுவது கடினமான பணியாகும் என்றார் முன்னாள் மாவட்ட ஆளுநர் மாத்யூ.

ஆனால், இதற்கான நிதியை திரட்டிவிட முடியும் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது. சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரியில் முதல் முதல்வரின் பேரனுமான ராஜேஷ், தனது பங்காக ரூ.10 லட்சம் நன்கொடையளிக்க முன்வந்தார். இது எங்களது சங்கத் தலைவர்களுக்கு மன உறுதியை அளித்தது. ராஜேஷின் நன்கொடை புதிய வேகத்தை உருவாக்கியது. சில ரோட்டேரியன்களும், சங்கத்தின் தலைவரும் நிதியுதவி அளிப்பதாக உறுதியளித்தனர் என்றார் டாக்டர் மங்களநந்தன்.

மொத்த பணத்தை திரட்டுவதில்

*கேரள முதலமைச்சர் பின்னராயி விஜயன் மெய்நிகர் சந்திப்பில் பேசுகிறார். DG தாமஸ் வவானிக்குன்னல் சுற்றுலாதுறை அமைச்சர் சுரேந்திரன், PDG சுரேஷ் மாத்யூ, மருத்துவகல்லூரி தலைவர் சாரா வர்கீஸ் மற்றும் கல்லூரிமேலாளர் Dr ஷர்மத்.*






*இடமிருந்து* Rtn. *ஜிக்னேஷ் நாராயணன்,* PDG *சுரேஷ் மாத்யூ,* DG *தாமஸ் வவானிக்குன்னல்,*
*ரேடியாலஜி துறை* HoD Dr *ஜெய்ஸ்ரீ,* Dr *சாரா வர்கீஸ்,* Dr *ஷர்மத் மற்றும் அமைச்சர் சுரேந்திரன்.*

தொய்வு இருந்தது. ஆனாலும் நிதியுதவி வர ஆரம்பித்தது. மாவட்ட பயிற்சி மாநாட்டில், DG மாத்யூவின் மனைவி லியா மாத்யூ, தனிப்பட்ட முறையில் ரூ.5 லட்சம் நன்கொடை அளித்தார். 2017–2018-ஆம் ஆண்டில் மாவட்டத்துக்கான நிதியிலிருந்து 50 சதவீத நிதியை மாத்யூ ஒது க்கினார். மேலும் பல்வேறு அரசு நிறுவனங்களில் நிர்வாகியாகப் பணியாற்றியவரும் பட்டயக் கணக்காளரும், கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புக்கான (CSR) மாவட்டத் தலைவரும், திருவனந்தபுரம் சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினருமான G N நாயரிடம் எஞ்சிய தொகையை திரட்டும் பணி ஒப்படைக்கப்பட்டது.

G N நாயர், அமைச்சர்களிடம் தமக்கு இருந்த செல்வாக்கை பயன்படுத்தி இது தொடர்பான விரிவான திட்ட அறிக்கையை மாநில நிதியமைச்சர் தாமஸ் ஐசக்கிடம் சமர்ப்பித்தார். கேரள அரசுக்கு சொந்தமான மாநில நிதிநிறுவனங்களிடமிருந்து ரூ.25 லட்சம் கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புத் தொகையாக பெற அமைச்சர் தனிப்பட்ட முறையில் தலையிட்டு ஆவன செய்ய வலியுறுத்தினார்.


இது எங்கள் மாவட்டத்தால் பெறப்பட்ட முதல் சமூகப் பொறுப்பு பங்களிப்பு தொகையாகும். திருவனந்தபுரம் தொழில்நுட்ப பூங்காவில் செயல்பட்டு வரும் UST குளோபல், டெர்மோ பென்போல், சஹாஜன் அண்ட் டெக்னாலஜி உள்ளிட்ட நிறுவனங்கள் தங்களது கார்ப்பொரேட் சமூக பொறுப்பு நிதியிலிருந்து உதவி செய்ய முன்வந்தன. இது தவிர கௌடியர் ரோட்டரி சங்க உறுப்பினர்களும் இத்திட்டத்துக்கு தாராளமாக உதவி செய்ய முன்வந்தனர் என்றார் மாத்யூ.

ஒருவழியாக திட்டத்துக்குத் தேவையான நிதியை திரட்டிய போதிலும் உபகரணங்களைப் பெறுவதிலும், அதை நிறுவுவதிலும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களை நாங்கள் சந்திக்க வேண்டியிருந்தது. இவற்றை கடந்துவந்தபோது கொரோனா தொற்றுப் பரவல் மேலும் தாமதத்தை ஏற்படுத்தியது. ஆனால், ரோட்டேரியன்கள் அரசு மற்றும் ஊடகங்களுடன் இணைந்து செயலாற்றி தடைகளை கடந்து வந்தனர். இறுதியில் கடந்த அக்டோபர் மாதம் 20ம் தேதி முதலமைச்சர் பின்ராயி விஜயன், இரண்டு கேரள அமைச்ச ர்கள் மற்றும் எம்.பி.யான சசி தரூர் ஆகியோர் பங்கேற்ற நிகழ்ச்சியில் மார்பக புற்றுநோயைக் கண்டறியும் மம்மோகிராபி கருவி பொது மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கப் பட்டது. மாவட்ட ஆளுநர் தாமஸ் வவானிகுன்னல், முன்னாள் மாவட்ட ஆளுநர் மாத்யூ, டாக்டர் மங்களநந்தன் உள்ளிட்டோரும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

ஆனால், இந்த மெகா திட்டத்துக்குப் பிறகு ரோட்டேரியன்கள் ஓய்வெடுக்க முடியாது என்கிறார் மாத்யூ. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு மருத்துவர் களுடன் கலந்துரையாடல் நடை பெற்றது. மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையைச் சேர்ந்த மூத்த பெண் டாக்டர் ஒருவர், எங்களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். இங்கு ஒரு பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கிறது. அதாவது எங்களுக்கு PET ஸ்கேன் கருவி அவசரமாகத் தேவைப்படுகிறது என்றார். உடனே அவரிடம் நான், இதற்கு எவ்வளவு செலவாகும் என்று கேட்டபோது, அவர் ரூ.19 கோடியாகும் என்றார்.

ரோட்டேரியன்கள் உறுதியான நிலையில் செயல்படும்போது உலகில் எந்தவிதமான நல்ல காரியங்களைச் செய்வதற்கும் குறைவு ஏற்படாது.■

# இன்னும் நலமான சூழல் என்னும் பரிசு



பிற உயிரினங்கள் ஒவ்வொன்றையும் போல, நாமும் இயற்கையின் ஒரு பகுதி. ஆனால், வருங்காலத் தலைமுறைகளுக் காகச் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள ஒரே உயிரினமாகவும் நாம் உள்ளோம். சுற்றுச்சூழல் அழிவதற்கும் பொது நலனுக்கான அச்சுறுத்தல்களுக்கும் இடையிலுள்ள உறவின்மீது கரோனாவைரஸ் நோய்ப்பரவல் ஒளியைப் பாய்ச்சியுள்ளது, இதற்கு முன் எதுவும் இந்த உறவை நமக்கு இந்த அளவு விளக்கியதில்லை.

சில ஆண்டுகளுக்கு முன், அரசு உரிமை கொண்ட மின் நிறுவனம் ஒன்று கிழக்கு இலங்கையில் இரண்டாவதாக ஒரு நிலக்கரி மின் ஆலையைக் கட்டத் திட்டமிட்டது. அந்த ஆலை, உடையக்கூடிய சூழமைப்புகள் ஆழமான கடலைச் சேர்கிற, உலகிலேயே எண்ணெய்த் திமிங்கிலங்கள் இனப்பெருக்கம் செய்கிற மிகப் பெரிய பகுதிகளில் ஒன்றான ஒரு பள்ளத்தாக்கி லிருந்து ஒவ்வொரு மணி நேரமும் 93 மில்லியன் லிட்டர் நீரை உறிஞ்சும்.

இது செயல்முறைப்படுத்தப்பட்ட பிறகு, பெருங்கடலில் கொட்டப்படும், இப்போது அந்த நீரில் நஞ்சு கொண்ட வேதிப்பொருட்கள் கலந்திருக்கும், அதன்மூலம் கடல்வாழ் உயிரினங்கள் மிகப் பெரிய ஆபத்தைச் சந்திக்கும்.

முதல் ஆலை உண்டாக்கிய சேதத்திலிருந்து பாடம் கற்றுக் கொண்ட மக்கள் ஒரு கூட்டணியை உருவாக்கினார்கள், அதில் பல பொதுநல உரையாளர்களும் ரோட்டரியன்களும் இடம் பெற்றிருந்தார்கள். அவர்கள் ஒரு பரப்புரையை நடத்தினார்கள், சாத்தியமுள்ள ஆபத்துகளைப்பற்றி ஊடகங்கள், மக்கள், உள்ளூர்ச் சமூகத்தை எச்சரித்தார்கள், சட்ட நடவடிக்கையும் எடுத்தார்கள். இதனால் பொதுமக்களிடையே பலத்த எதிர்ப்புக்குரல் எழுந்தது, அதன்பிறகு, அரசாங்கம் தன்னுடைய நிலக்கரி ஆலை யோசனையைக் கைவிட்டது.

ரோட்டரியின் மிகப் புதிய நோக்கமாகச் சுற்றுச்சூழலைச் சேர்க்க வேண்டும் என்பதற்காக நம்மில் சிலர் இயங்கினோம். 1990–91ல், RI தலைவர் பௌலா V C கோஸ்டா முன் வைத்த நோக்கத்தை, நாம் அடுத்த நிலைக்குக் கொண்டு செல்வோம்.

நம்முடைய மாசு கலந்த சுற்றுச்சூழல் நமக்கு மீண்டும் மீண்டும் நோயைக் கொண்டுவரப்போகிறது என்றால், நோயை எதிர்த்து என்ன பயன்?

ரோட்டரி அறக்கட்டளை இந்தப் பணிக்கு மையமாக இருக்கும். கடந்த ஐந்து ஆண்டுகளில், சுற்றுச்சூழல் தொடர்பான பன்னாட்டு நல்கைகளுக்கு $18 மில்லியனுக்கு மேல் அளிக்கப் பட்டுள்ளது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் இந்தப் பணியைப் பயன்படுத்தி, வருங்காலத் தலைமுறைகளுக்கு நாம் இன்னொரு ரோட்டரி பரிசை அளிப்போம். அதில் நீங்கள் இன்று பங்கேற்கலாம்.

Ravi

**KR ரவீந்திரன்**
**அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்**



# தைவானில் உணவு

சுசி L மா

தைவானுடைய உணவும் சரி, மக்களும் சரி, பெரும்பாலும் சீன வேர்களைக் கொண்டுள்ளவர்கள், ஆனால், கடந்த பல தலைமுறைகளாகத் தைவானியர்கள் பல உணவுகளுக்குத் தங்களுடைய சொந்த வடிவங்களை உருவாக்கியுள்ளார்கள். 12 முதல் 16 ஜூன் வரை ரோட்டரி பன்னாட்டு மாநாட்டுக்காக நீங்கள் தாய்பெய்க்கு வரும்போது, தைவானின் தனித்துவமான சில உணவுகளை ருசிபார்க்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

மாட்டிறைச்சில் நூடுல் சூப் (நியு ரோவ் மியான்) என்பது, தைவானின் அதிகாரப்பூர்வமற்ற தேசிய உணவாகும். இது சீனாவின் சிச்சுவான் பகுதியின் மசாலா நறுமணங்களைக் கொண்டுள்ளது. நட்சத்திரச் சோம்பு, இலவங்கம், பட்டை, சிச்சுவான் மிளகு மற்றும் பெருஞ்சீரக விதைகள் ஆகியவை ஒரு வளமான மற்றும் மசாலா மணம் கொண்ட சாற்றை உருவாக்க உதவுகின்றன. இத்துடன் மென்மையான மாட்டுக்கால் இறைச்சித் துண்டுகள் மற்றும் ஒளிரும் பச்சைக் காய்கறிகள் சேர்க்கப்படுகின்றன.

**இதை எங்கு சாப்பிடலாம்?**

- டாவ் யுவான் தெரு மாட்டிறைச்சி நூடுல்ஸ், 15, தாவ்யுவான் சாலை, ஜோங்க்ஜெங்க் மாவட்டம்
- யாங் காங் மாட்டிறைச்சி நூடுல்ஸ், எண். 17, தெரு 31, பிரிவு 2, ஜின்ஷான் தெற்குச் சாலை, டா'ன் மாவட்டம்

**சூப் கொழுக்கட்டைகள்** (ஜியாவோ லாங்க் பாவோ) சீனாவிலுள்ள நான்சியாங் நகரத்தில் உருவானவை, பாரம்பரியமாக இக்கொழுக்கட்டைகளில் பன்றி இறைச்சி நிரப்பப்படுகிறது, ஆனால், நண்டு, கோழி இறைச்சி, அல்லது பிற இறைச்சிகளும் இதில் இருக்கலாம். இக்கொழுக்கட்டையின் சூப் பகுதி, ஜெல்லி போன்ற ஒரு குழம்பாகும், கொழுக்கட்டை வேகவைக்கப்படும்போது இது உருகுகிறது.


**இதை எங்கு சாப்பிடலாம்?**

"டின் டாய் ஃபங் என்ற சங்கிலி உணவகம் தன்னுடைய சூப் கொழுக்கட்டைகளுக்காகப் புகழ் பெற்றது, தாய்பெய்யில் பல இடங்களில் உள்ளது. இந்த உணவகத்தின் இணையத் தளத்தின் ஆங்கில வடிவத்தை இங்கு காணலாம்: www.dintaifung.com.tw/eng.

**மேலும் விபரங்களுக்கு**
**Convention.rotary.org பாருங்கள்.**


# Membership Summary

(As on December 1, 2020)



## Rotary at a glance

| | |
|---|---|
| Rotary clubs : 36,423 | Rotary members : 1,193,852 |
| Rotaract clubs : 11,171 | Rotaract members : 213,269 |
| Interact clubs : 15,381 | Interact members : 353,763 |
| *RCCs : 11,458 | *As on 16 December 2020* |




*Source: RI South Asia Office*

# துயரத்திலும் நான்கு பேருக்கு வாழ்வளித்த ரோட்டரி ஜோடி!

ரஷீதா பகத்

கடந்த செப்டம்பர் மாதம் 24ம் தேதி, இளம் பொறியியல் பட்டதாரியான ஸ்ரீகாந்த், எதிர்கால வாழ்க்கையை தொடங்கும் நோக்கில் தனது 26வது பிறந்தநாளையொட்டி பாட்டியிடம் ஆசி பெற அவரது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். ஆனால், விதி அவரது கனவுகளை தவிடு பொடியாக்கிவிட்டது.

ஸ்ரீகாந்த், மோட்டார் சைக்கிளில் சாலையில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென ஒரு நாய், குறுக்கே வந்தது. மோட்டார் சைக்கிளை நாய்மீது மோதிவிடமால் இருக்க அவர் திருப்ப முயன்றபோது தடுமாறி இருசக்கர வாகனத்துடன் கீழே விழுந்தார். அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

மண்டைப்பேட்டை ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவராக இருந்தவரும், RID 3020ன் முன்னாள் உதவி ஆளுநருமாக இருந்த பிக்கினா சக்கரவர்த்தின் மகன்தான் இந்த ஸ்ரீகாந்த். சாலை விபத்தில் காயமடைந்த அவர், மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு 25 நாள் சிகிச்சை பெற்றுவந்தார். ஹைதராபாதில் உள்ள குளோபல் மருத்துவமனையில் காயங்களுக்கு சிகிச்சை பெற்று உயிருக்குப் போராடி வந்தபோதிலும், அறுவைச்சிகிச்சைக் குப் பின் ஏற்பட்ட சில சிக்கல்களால் அவரது மூளை செயலிழந்தது. தந்தை சக்கரவர்த்தி, தாய் பானு, சகோதரி ஸ்ரீலேகா ஆகியோரை துயரத்தில் ஆழ்த்திவிட்டு அவர் உயிரிழந்து விட்டார்.

தமது மகனை இழந்த சோகத்திலிருந்து மீளாத நிலையிலும் தாய் பானு, தெலுங்கானா அரசின் ஜீவன் தானம் (உடலுறுப்பு தானம்) திட்டத்தின் கீழ் இறந்துவிட்ட மகனின் உடலுறுப்புகளைத் தானமாக வழங்கும் துணிச்சலான முடிவை எடுத்தார். இதன் மூலம் இறந்த பின்னரும் மகன் மற்றவர்களுக்கு உதவ முடியும் என்பதை உணர்ந்து கொண்டார். மகனின் உடலுறுப்புகளைத் தானமாக வழங்கும் மனைவி பானுவின் முடிவுக்கு கணவர் சக்கரவர்த்தியும்



*ஸ்ரீகாந்த் தன் குடும்பத்தினருடன்.*

**இந்த துன்பம் எங்களுக்கு வாழ்நாள் முழுவதும் இருந்தாலும் அவரது உடல் உறுப்புகளை தானம் செய்வதன் மூலம் நான்கு பேரது வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுத்த விரும்பினோம்.**


Rtn **பிக்கினா சக்கரவர்த்தி**


JEEVANDAN
(CADAVER TRANSPLANTATION)
GOVERNMENT OF TELANGANA
Certificate of Appreciation
DONOR FAMILY
Government of Telangana acknowledges and appreciates the endeavor of Mr. / Mrs. Bikkina Srikanth s/o. / d/o. B.S.P. Chakravarthi r/o. Mandapeta, East Godavari Dist. for donating organs under JEEVANDAN Scheme. On 23 October 2020 in Global Hospital, Lakdikapul hospital and saving many lives.
THIS HUMANITARIAN ACT HAS MADE A PROFOUND DIFFERENCE IN THE LIVES OF OTHERS.
Incharge Jeevandan

மனமுவந்து ஒப்புதல் அளித்தார்.

இதைத்தொடர்ந்து ஸ்ரீகாந்தின் இதயம், இரண்டு சிறுநீரகங்கள் மற்றும் கல்லீரல் ஆகியவை அக்டோபர் மூன்றாவது வாரத்தில் தானமாக வழங்கப்பட்டது. இதன் மூலம் நான்குபேர் மறுவாழ்வு பெற்றனர். ஸ்ரீகாந்தின் பெற்றோர் சரியான நேரத்தில் எடுத்த சரியான முடிவினால் நான்கு பேர் பலன்பெற்றனர். அவர்களில் பலவீனமான இதயத்தால் அவதிப்பட்டு வந்த 26 வயது இளைஞனுக்கு ஸ்ரீகாந்தின் இதயம் பொருத்தப்பட்டது. அவர் இப்போது திடமாக இருக்கிறார்.

இது தொடர்பாக ரோட்டரி நியூஸ் குழுவுக்கு பேட்டியளித்த சக்கரவர்த்தி, ‘எனது மகன் நல்ல ஆரோக்கியத்தில் இருந்தார். வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருந்தார். அவருக்கு பெரிய நட்பு வட்டமே உண்டு. அவரை இழந்தது தனிப்பட்ட முறையில் எங்களுக்கு பேரிழப்பு என்றாலும், இந்த துன்பம் எங்களுக்கு வாழ்நாள் முழுவதும் இருந்தாலும் அவரது உடல் உறுப்புகளை தானம் செய்வதன் மூலம் நான்கு பேரது வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுத்த விரும்பினோம். அந்த வகையில் எங்களுக்கும் மகிழ்ச்சிதான். எங்கள் மகனின் இதயம் மற்றும் பிற உறுப்புகளைப் பெற்றவர்கள் யார் என்பதைத் தெரிந்து



கொள்வதில் நாங்கள் ஆர்வமாக இருந்தோம். ஆனால், அரசின் தனியுரிமைச் சட்டங்கள் உடலுறுப்புகளைத் தானமாக பெற்றவர்கள் யார் என்ற விவரங்களை வெளியிட மருத்துவமனையை அனுமதிக்கவில்லை.

ஸ்ரீகாந்திடம் உள்ள சிறப்பு குணம் என்ன வெனில் அவர், பால் ஹாரீஸின் ஆதரவாளர். அவர் எப்போதும் எல்லோரிடமும் கனிவாக பேசுபவராகவும், தாராளமாக உதவி செய்பவராகவும் இருந்ததாக அவரது நண்பர்கள் தெரிவிக்கின்றனர். பிறருக்கு தன்னால் முடிந்த உதவியைச் செய்யத் தயங்காதவர் என்பது இப்போதான் எங்களுக்கு அவருடைய நண்பர்கள் மூலம் தெரியவந்துள்ளது என்றார்.

நான் எனது சகோதரரை இழந்து தவிக்கிறேன்.அவர் இல்லாத வீட்டை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை என்றார் ஸ்ரீகாந்தின் சகோதரி ஸ்ரீலேகா. அவர் அனைத்து வகையான உணவுகளையும் விரும்பிச் சாப்பிடுவார். இசை மீது அவருக்கு அலாதி பிரியம் உண்டு. கர்நாடக இசை, திரைப் படப் பாடல்கள், மேற்கத்திய இசை என எல்லா வகையான இசையையும் அவர் விரும்பிக் கேட்பார் என்றார் ஸ்ரீலேகா. சகோதரரை இழந்த துயரம் இருந்தாலும், தமது பெற்றோர்களைப் போல சகோதரரின் உடலுறுப்பு தானத்தின் மூலம் நான்கு உயிர்கள் வாழ்க்கைப் பெற்றுள்ளது குறித்து அவருக்கும் மகிழ்ச்சிதான்! இந்த நல்ல செயல் பெற்றோரைப் போலவே அவருக்கும் மனநிம்மதியைத் தரும் என்று நம்பலாம்.■

# “இந்திய நாடக அரங்கின் பரந்ததன்மையை ஆங்கில நாடகங்களில் பிரதிபலிக்க முடியாது”: விஜய் படகி

ஜெய்ஸ்ரீ

பெங்களூரின் முதல் ஆங்கில நாடகக்குழுக்களில் ஒன்றான பெங்களூர் லிட்டில் தியேட்டர் (BLT) இந்த ஆண்டு தனது வைரவிழாவைக் கொண்டாடுகிறது. ரோட்டரி மாவட்டம் 3190க்கு உட்பட்ட பெங்களூர் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரரான விஜய் படகி, அதன் நிறுவனர்-அறங்காவலர் ஆவார். பெங்களூர் ரோட்டரி சங்கம், சொந்தமாக நாடகக்குழு அமைப்பதற்கும் அவர் உதவி வருகிறார்.

விஜய் படகி ஒரு உளவியலாளர் மற்றும் நடத்தை விஞ்ஞானி. பெங்களூர் இந்திய நிர்வாகவியல் கழகத்தின் (IIM) நிறுவன உறுப்பினர் மற்றும் பெங்களூர் இந்திய அறிவியல் கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறை வருகைப் பேராசிரியர். 20 வயதில் நாடகத் துறையில் தனது பயணத்தைத் தொடங்கிய அவர், கட்நத 60 ஆண்டுகளில் ஆங்கிலத்தில் அசல், தழுவல் மற்றும் மொழியாக்கம் செய்யப்பட்ட 50க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி பெங்களூர் லிட்டில் தியேட்டர் மூலம் அரங்கேற்றியிருக்கிறார். ஒரு நடிகர், இயக்குநர், பயிற்சியாளர், எழுத்தாளர், வடிவமைப்பாளர் மற்றும் நிர்வாக



*குழந்தை கலைஞர்களுடன் விஜய் படகி.*

என பல துறைகளில் அவர் செயலாற்றியுள்ளார். நாடகக்குழுவுக்கு புதிதாக வருபவர்களுக்கு கோடை காலத்தில் பயிற்சிப் பட்டறைகள் நடத்துவது உள்ளிட்ட BLTயின் பல்வேறு நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுள்ளார். இவரது நாடகக் குழுவில் சேர்ந்து பயிற்சிபெற்று நடிகராகவும், இயக்குநர்களாகவும் உருவானவர்கள் பலர். வாழ்க்கை வரலாற்று நாடகங்கள், கோர்ட் யார்டு தியேட்டர் மற்றும் குழந்தைகள் நாடக திட்டங்கள் என பலவற்றை ஏற்படுத்தி சர்வதேச அளவில் ஒருங்கிணைப்பு உருவாகக் காரணமாக இருந்தவர்.

நாடகத்துறையில் விஜய் படகியின் மதிப்பு மிக்க பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் BLT அவரது 80-வது பிறந்ததினத்தை முன்னிட்டு அவரது நாடகங்களை 9 தொகுப்புகளாகப் பிரசுரித்துள்ளது. மேலும் அவரது நாடகங்களை கடந்த 6 மாதங்களாக மீண்டும் அரங்கேற்றி வருகிறது.



இது தொடர்பாக தனது அனுபவங்களை ரோட்டரி செய்திக்கு அவர் பேட்டியளித்தார். அதன் சாராம்சம் வருமாறு:

**நாடகத்துறையில் உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது. BLT உடனான உங்கள் பயணம் பற்றி சொல்லுங்கள்.**

என் வாழ்க்கையின் முன்னேற்றத்தில் எனக்கு இரண்டு சிறந்த வழிகாட்டிகள் இருந்தது எனக்கு கிடைத்த அதிர்ஷ்டமாகும். முதலாமவர், சென்னையில் எனது கல்லூரி ஆண்டுகளில் எனக்கு நாடகத்துறை பேராசிரியராக இருந்த ஸ்காட்லாந்து நாட்டைச்சேர்ந்தவர். அவரே ஒரு நாடகக்கலைஞர். கல்லூரியில் சிலேடை பேச்சுக்களைத் தாண்டி எனக்கு நாடகத் துறையில் என்னை அறிமுகப்படுத்தினார். இரண்டாமவர் பெங்களூர் லிட்டில் தியேட்டர் நிறுவனர்களில் ஒருவர். அவரது பெயர் ஸ்காட் டாட் (இவரும் ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர்). இவர் சிறந்த நடிகர் மட்டுமல்ல, பெங்களூரில் அமெச்சூர் நாடகங்களை இயக்கியவர். இருவருமே எனக்கு உந்துசக்தியாக இருந்து நாடகத்துறையில் என்னை ஊக்கப்படுத்தியவர்கள்.

**உங்கள் நாடகங்களுக்கான கருவை எங்கிருந்து உருவாக்கினீர்கள்?**

இரண்டு விஷங்கள் எனக்கு ஊக்க சக்தியாக இருந்தன. முதலாவது நான் உளவியலாளராகப் பயிற்சி பெற்றது. இதன் மூலம் மனிதர்களின் நடத்தையின் பன்முகத்தன்மையை புரிந்துகொள்ளவும் மதிக்கவும் கற்றுக்கொடுத்தது. அதாவது ஒருவரிடம் உள்ள தனித்துவம் என்ன? அவரிடமிருந்து வெளிப்படாத குணாதிசயம் என்ன? நடிகர் என்ற முறையில் அவர் எந்த வேஷத்தில் பரிமளிப்பார் என்பதைத் தெரிந்து கொள்வது.

இரண்டாவது எனது தேடுதல் முயற்சி. அதாவது நாடகத்தில் வசனம் பேசுவது, நகர்வுகள், காட்சி களின் ஓட்டம் மற்றும் பல. எனது நாடகங்களில் முக்கியமாக இவற்றை நான் பார்ப்பேன். சில சமயங்களில் நான் எதிர்ப்பார்ப்பது சரியாக அமையாவிட்டால் மனதில் சலிப்பு ஏற்படும்.

**உங்களால் மறக்க முடியாத சில நாடகங்கள் பற்றி?**

அப்படிச் சொல்வது மிகவும் கடினம். ஏனெனில் எப்போதுமே வெவ்வேறு வகையான நாடகங்களை, வெவ்வேறு அணுகுமுறையுடன் அரங்கேற்றுபவன். அதாவது நாடக வசனங்கள் என்றாலும் சரி காட்சியமைப்புகள் ஆனாலும் சரி என்னுடைய இரண்டு நாடகங்கள் ஒரே மாதிரியானவையாக இருக்காது. இது தான் எனக்குக் கிடைத்த பாராட்டு.

எனினும் ஆரம்ப நாட்களில் நான் நடிகராக இருந்தபோது தந்தை வேடத்தில் “பிரான்டெல்லோ” மற்றும் “இன் சர்ச் ஆப் ஆன் ஆதர்” ஆகிய இரு நாடகங்களிலும் நடித்திருக்கிறேன். இரண்டு வெவ்வேறு தயாரிப்புகளில் இரண்டு முறை நான் நடித்திருக்கிறேன். இயக்குநர் என்ற முறையில் குழந்தைகள் நாடக அரங்கை ஒருங்கிணைத்து சாய் பரஞ்சபி எழுதிய “ரிக்மரோல்” நாடகத்தை இயக்கியது மறக்கமுடியாதது.

**பெங்களூர் ரோட்டரி சங்கத்தின் நாடகக்குழுவுக்கான உங்கள் திட்டங் கள் என்ன? வளரும் கலைஞர்களுக்கு சங்கம் பயிற்சி அளிக்குமா? திட்டங் களுக்கு நிதிசேர்க்க நாடகங்கள் அறகேற்றப்படுமா?**

நான் எழுபது வயதைக் கடந்த நிலையில் எனக்கு பெங்களூர் ரோட்டரி சங்கத்திலிருந்து அழைப்பு வந்தது. சங்கத்தில் இருக்கும் ஒரு சிறிய குழுவினர் வழக்கமான

பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கு அப்பால் ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பின. கல்லூரி நாட்களில் இளைஞர்கள் சினிமா நடிகர்களைப் போலவே பாடுவார்கள், நடிப்பார்கள். ஆனால், அதைத் தாண்டி எதுவும் நடைபெறவில்லை. ஆனால், இந்த சிறிய குழு நாடகக்குழுவை உருவாக்குவதில் ஆர்வம் காட்டியது. ஆரம்பத்தில் நாடக வாசிப்புகள் அரங்கேறின. பயிற்சிப் பட்டறைகளும் நடத்தப்பட்டன. அதன் பிறகு நாடகத் தயாரிப்பில் இறங்கினோம். அவை பொது நிகழ்வாக இருக்க வேண்டும் என்று விரும்பினோம். முதலில் ரவீந்தநாத் தாகூரின் கதைகள் தொகுக்கப்பட்டு "ரபீஸ் கார்டன்" என அரங்கேற்றப்பட்டது. அதன் பிறகு மொலிரே, செக்கோவ் போன்ற சிறிய நாடகங்களும் மற்றும் எனது படைப்புகள் சிலவும் அரங்கேற்றப்பட்டன.

பின்னர் பெங்களூர் சங்க நாடகக்குழு BLT உடன் இணைந்து செயல்பட முன்வந்தது. இதற்கு நான் பாலமாக இருந்தேன். இது தொழில் முறையில் சில உள்ளீடுகளைப் புகுத்த உதவியாக இருந்தது. BLT "ஸ்பாட்" என்ற பெயரில் நாடக பயிற்சிப் பட்டறை ஏற்படுத்தப்பட்டது. இதில் நடிப்பு, இயக்கம், உள்ளிட்ட விஷயங்கள் முறையாக சொல்லித்தரப் பட்டன. பெங்களூர் ரோட்டரி சங்க வளாகத்திலேயே மூன்று ஆண்டுகள் இந்த பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. ரோட்டரியினருக்கும் சில இடங்கள் ஒதுக்கப்பட்டன. BLTயின் தயாரிப்புகளில் ரோட்டரி சங்கத்தினரும் பங்கேற்றனர். வீல்ஸ் என்ற சிறிய நாடகளுக்கான கதை வசனங்களும் தயாரிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டன. வெறும் நிதி திரட்டுவதற்கான உத்தியாக இது இல்லாமல் சமூக வளர்ச்சியை இலக்காகக் கொண்டு பிற சங்கங்களும் நாடகம் நடத்த அழைப்பு விடுக்கப்பட்டது.

ரோட்டரி நாடகக்குழுவின் எதிர்காலத்துக்கு வருவோம். ரோட்டரிக்கு நிதி சேர்ப்பதற்காக 2020ம் ஆண்டில் BLTயுடன் இணைந்து மிகப்பெரிய நாடகங்களை அரங்கேற்ற திட்டமிட்டிருந்தோம். ஆனால், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல்

Rtn *தீபக் நக்ரா ரஷிய எழுத்தாளர் ஆன்டன் செக்கோவ்வின் கதை ஒன்றில்.*



காரணமாக அவை தள்ளிப்போடப் பட்டுள்ளன. வேறு சில யோசனை களும் திட்டங்களும் உள்ளன. அவை முழு செயல்வடிவம் பெற சிறிதுகாலம் பிடிக்கும். உதாரணமாக இந்தியாவிலும் சர்வதேச அளவிலும் ரோட்டரி சங்கங்களிடையே நட்புறவை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளோம். ரோஸ்வெல் ரோட்டரி சங்கத் துடன் (அட்லான்டா) இது குறித்து தொடர்பு கொண்டுள்ளோம். பெங்களூர் ரோட்டரி சங்கமும் BLTயும் இணைந்து செயல்பட்டு வருவதைப் போலவே ரோஸ்வெல் சங்கம் ஜார்ஜியா என்செம்பிள் நாடகக்குழுவுடன் நீண்டகாலமாக இணைந்து செயலாற்றி வருகிறது. பெங்களூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ரோட்டரி சங்கங்கள் மூலமாகவும் நாடகக்குழு நடவடிக்கைகளை முடுக்கிவிட திட்டமிட்டுள்ளோம். மூன்றாவதாக ரோட்டரி சங்கங்களுக்கான நாடகங்கள் மூலம் அமைந்த திட்டத்தை செயல் படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். சமீபத்தில் இந்திய ரோட்டரி சங்கத்துக்கும், பாகிஸ்தான் ரோட்டரி சங்கத்துக்கும் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் இதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்கியுள்ளது.

**BLTயின் எதிர்காலத்திட்டங்கள் குறித்து சொல்லமுடியுமா?**

சரியான கேள்வி. BLTக்கு இப்போது 60 வயதாகிறது. அதன் வைர விழாவைக் கொண்டாடுகிறது. 2021ல் வரும் ரவீந்திரநாத் தாகூரின் 160வது பிறந்தந கொண்டாட்டங்களை இந்த விழாவுடன் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. தாகூரின் படைப்புகளில் இரண்டு அசல் தழுவல்களை அரங்கேற்றப்படுவதற்கு தயாராக உள்ளன. சர்வதேச அளவில் புகழ்பெற்ற காந்தி-தாகூர் பரிமாற்றங்கள், நபிகள் மற்றும் கவிஞர் (இது 110 முறை அரங்கேறியுள்ளது) ஆகிய இரு நாடகங்களையும் அரங்கேற்ற இருக்கிறோம். அமெரிக்க சுதந்திரத்துக்கான ஸ்தாபக பிதாக்களுக்கும் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் இடையே நடைபெற்ற பரிமாற்றங்களை நாடகமாக உருவாக்குவதில் நான் தனிப்பட்ட முறையில் ஈடுபட்டுள்ளேன். BLTயின் உண்மையான பலம் அதன் நீண்டகால நாடகத்திட்டங் களுக்கான முதலீடுகள் தான். அவைதான் உண்மையில் செயல் திட்டங்களை தக்கவைக்கின்றன.



Rtn *சாலமன் பரமல் மற்றும் அபிஜித் ரகுநாதன் ஒரு நாடகத்தில்.*

**இந்தியாவில் ஆங்கில நாடகங்கள் வளர்ச்சி மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து உங்கள் கருத்து என்ன?**

மக்கள் தொகையில் இரண்டு சதவீதம் பேரே ஆங்கிலத்தில் பேசும் இந்தியா போன்ற நாட்டில் ஆங்கில மொழி நாடக அரங்கேற்றம் என்பது ஒத்துவராதது. இந்திய நாடகங்களின் பரந்த தன்மையை என்னாலோ அல்லது எனது எழுத்துகளாலோ உண்மையாக பிரதிபலிக்க முடியாது. அந்த பரந்தத்தன்மை இப்போது அழிவை எதிர்கொள்ளும் நிலையில் உள்ளது. இருந்தாலும் ஆங்கில மொழி நாடக அரங்கேற்றம் இந்தியாவில் செழித்து வளரும். மக்கள் தொகையில் சிறுபான்மையினரின் தேவைகளை இது பூர்த்தி செய்தாலும் இது சமூகத்தில் மிக செல்வாக்குள்ள சந்தைப் பிரிவாகும். இது நீண்டகாலமாக இருந்து வருகிறது. இன்னும் தொடரும். இந்த தொகுதியைச் சேர்ந்த மக்களுக்கு ஏராளமான வளங்கள் உள்ளன என்பது மட்டுமல்ல, தங்கள் கொள்கைகளை செல்வாக்கு மூலம் உயர்ந்த இடத்துக்கு கொண்டு செல்ல முடியும். எனவே ஆங்கில மொழி நாடகத்துறை இந்தியாவில் வளரும் என்று எதிர்பார்க்கலாம். 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது ஆங்கில மேடைக்கு எழுதுவதற்கான ஆர்வம் அதிகரித்து வருகிறது. BLTயே கூட கடந்த பல ஆண்டுகளில் குறைந்தது 9 தொகுதிகளாக

நாடகங்களை வெளியிட்டுவந்துள்ளது. முதல் மூன்று தொகுதிகள் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்கு முன்னதாக வெளியிடப்பட்டது. மீதமுள்ளவை 2021ம் ஆண்டின் தொடக்கத்தில் வெளியிடப்பட உள்ளது.

**இளைய தலைமுறையினர் நாடகத் துறையில் ஆர்வம் காட்டுகின்றரா?**

சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனால், தீவிரமான தேடல்களாக இல்லை. பள்ளி, கல்லூரி பாடப்புத்தகங்களில் சேர்ப்பதற்கான சமூக அந்தஸ்தை நாடகங்கள் இன்னும் பெறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். சில விதிவிலக்குகள் இருக்கலாம். ஆனால், அதன் எண்ணிக்கை மிகவும் குறைவு. நாடகத் திட்டங்கள் நீடித்திருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படவில்லை, அல்லது அவை அங்கீகரிக்கப்படவும் இல்லை. குறிப்பாக பயிற்சி அளிக்க நல்ல தரமான நாடக ஆசிரியர்கள் இல்லை. அமெச்சூர் நாடகக் கலைஞர்கள் மூலம் பயிற்சி கொடுக்கலாம் என்றால் அதன் மூலம் அமெச்சூர் கலைஞர்களை மட்டுமே உருவாக்க முடியும்.




*ஒரு பள்ளியில் ரோட்டரி நாடக பயிற்சி முகாம்.*

**கொரோனா வைரஸ் தொற்று நாடகத்துறையை எவ்வாறு பாதித்தது? ஓ.டி.டி. மூலம் சினிமாக்கள் திரையிடப்படுவது போலவோ அல்லது சென்னையில் ஆன்லைன் மூலம் கட்டணம் செலுத்தி கர்நாடக இசை நிகழ்ச்சி களை பார்ப்பதுபோல மெய்நிகர் நாடகங்களை அரங்கேற்ற ஏதாவது ஏற்பாடு செய்துள்ளீர்களா?**

BLTயில் ஆன்லைன் நிகழ்ச்சி களில் நாங்கள் புதுமைகளைச் செய்துள்ளோம். ஆன்லைனில் குறைந்த கட்டணத்தில் முன்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளை வெளியிடுவது குறித்தும் ஆராய்ந்தோம். கோர்ட் யார்டு தியேட்டர் என்ற நீண்டகாலத் திட்டம் உள்ளது. வெற்றிகரமான நாடகங்களின் வசனங்களை இருவரைக் கொண்டு பேசவைப்பது. குறைந்தபட்ச நபர்களைக் கொண்டு நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவது. "ஷேக்ஸ்பியர் பை எனி அதர் நேம்" சமீபத்தில் அரங்கேறியது. இதில் இரண்டு பெண்களும் இடம்பெற்றிருந்தனர். கோர்ட் யார்டு நிழ்ழ்ச்சியில் உள்ள அனைத்து நாடகங்களையும் போலவே இந்த ஷேக்ஸ்பியர் நாடகமும் பல்வேறு இடங்களில் நிகழ்த்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால், ரோட்டரி நாடகக் குழுவுக்கு இது மந்தமான காலம் என்பதால் நாட வாசிப்பாகவே இருந்து வருகிறது.■



*ரோட்டரியினர் ஹிட்லர் பற்றிய ஒரு நாடகத்தில்.*



# A letter from the RI President and TRF Trustee Chair on Rotary's participation in Covid vaccination



Dear district governors,

In these difficult days, we are so heartened to receive such uplifting reports on the unrelenting efforts of our Rotary members who have responded in their communities against the Covid-19 pandemic.

Today, the single question we hear time and again as we traverse the virtual world is, "Are we getting involved with Covid vaccination?" Considering the success and expertise we have gained in our polio eradication effort, this question is both natural and timely.

The answer is yes. We will have an important role in the months ahead.

This does not mean we will deviate in any way from our avowed commitment to eradicating polio, which remains our highest priority and will continue to be our only corporate programme. Polio vaccinations and surveillance activities must continue unabated, as must our effort to raise $50 million per year for this effort.

But as we know, there is a pandemic sweeping the world. The Board of RI and the Trustees of our Foundation met in joint session and have agreed that we have a role to play.

We ask you, then, to encourage your clubs to:

Utilise Rotary's knowledge of vaccine safety and efficacy based on our polio eradication experience to conduct vaccination education and communication outreach in your communities. This will need to be tailored to local contexts to address unique cultural and regional needs. Your leadership will be critical in crafting the appropriate messages and strategies.

Engage, where appropriate, with our current polio eradication partners WHO and UNICEF at the country level to offer Rotary's support to Covid-19 response activities, including vaccination efforts.

Partner at the local level with governments, corporations and foundations to support Rotary activities at the country level.

Through hundreds of global grants and projects, Rotary members have demonstrated what we can accomplish to raise awareness, deliver critical personal protection equipment and provide support for frontline health workers. As you learn of work being done in your area, please encourage clubs to add to the more than 3,000 projects already registered on Rotary Showcase (please log in to My Rotary first, and navigate to Rotary Showcase). We would like to know about them.

We have one final call to action: Help us combat the powerful, growing force of vaccine resistance and misinformation. Our advocacy in our communities will be critical — we need to spread the message about the power of vaccines to save lives.

Working together, we have done so much to adapt to the Covid-19 pandemic, to care for our communities and to prepare Rotarians for the work ahead.

We do this for ourselves and for future generations. We do this as part of our obligation to support our world as it faces the most significant challenge of this generation.

Thank you.

**Holger Knaack**
RI President

**K R Ravindran**
TRF Chair

# பழங்குடியினப் பெண்களுக்கான ஓர் எளிய திட்டம்

ரஷீதா பகத்

மும்பையில் ஓர் இருண்ட மழைக்காலக் காலைப் பொழுது, வானில் மழை பொழியத் தொடங்கியது. பாம்பே மகாகாளி ஹைட்ஸ் ரோட்டரி சங்கம், RID 3141ன் தலைவரான குர்ப்ரீத் சிங் உப்பல் கவலையுடன் தன்னுடைய பால்கனியிலிருந்து வானத்தை நிமிருந்து பார்த்தார், மிகவும் பெரிய மழை வருவதைக் கண்டார். இரண்டு வாரகாலத்துக்குக் கடுமையாக உழைத்து நாங்கள் திரட்டிய சில பொருட்களை வனவாசி (பழங்குடியின)ப் பெண்களுக்கு வழங்குவதற்காக ஒரு சிறிய நிகழ்ச்சிக்கு நாங்கள் திட்டமிட்டிருந் தோம்'' என்று நினைவுகூர்கிறார்.

இச்சங்கத்தின் சமூக சேவை களுக்கான இயக்குநர் சிந்தித்த ஓர் எளிய, ஆனால், இதயத்தைக் கதகதப்பாக்கும் திட்டம் அது; மும்பையிலிருந்து சுமார் 180 கிமீ தொலைவிலுள்ள, ராய்காட் மாவட்டத்திலிருக்கும் மன்காவ்ன் கிராமத்தைச் சேர்ந்த சிறு பழங்குடியினப் பெண்கள் இதன்மூலம் பலன் பெறுவார்கள். மன்காவ்னைச் சேர்ந்த இந்தச் சிறு பெண்களின் துன்ப நிலையைப்பற்றியும், அவர்கள் மிகுந்த வறுமையில் வாழ்வதைப்பற்றியும் அவர் கேள்விப்பட்டபோது, மிகவும் நெகிழ்ந்து, இந்தத் திட்டத்தைச் சிந்தித்தார்'' என்கிறார் உப்பல்.

இந்தச் சங்கத்தினர் சிங்காரி சக்தி அறக்கட்டளை என்ற ஓர் NGOவுடன் மிகவும் நெருங்கிப் பணியாற்றுவதால், இந்தச் சங்கம் இந்தத் திட்டத்தை அடையாளம் கண்டதாக அவர் விளக்குகிறார். இந்த

**இடதிலிருந்து:** *கிரண் ஸ்ரீவத்ஸவா, சதிந்தர் ஆலுவாலியா, பிங்கி ராஜ்கர்ஹியா, சங்கத்தலைவர் குர்ப்ரீத் சிங் உப்பல், DG சுனில் மெஹ்ரா, திட்டத்தலைவர் மனிஷ் மொட்வானி மற்றும் விரெந்திர கவுர் உப்பல் உதவிப் பொருட்களுடன்.*






NGO பெண் குழந்தைகளின் நலன், அவர்களுக்கு ஆற்றலளிப்பதில் கவனம் செலுத்துவதுடன், சிறப்புத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஒரு பள்ளியையும் நடத்துகிறது.

ரோட்டரியன்களுடைய உதவி தேவைப்படும் இந்தப் பெண்கள், வறுமையான தங்கள் குடும்பங்களுடன் வாழ்கிறார்கள்,

**வெறும் 2–3 நாட்களில் பணம் குவிந்தது, இந்தத் திட்டத்துக்குத் தேவையான நிதிக்குமேலேயே நாங்கள் திரட்டிவிட்டோம்.**

குர்ப்ரீத் சிங் உப்பல்
**சங்கத் தலைவர்**

டால்கம் பவுடர், தலை எண்ணெய், சானிட்டரி பேட்கள் மற்றும் உள்ளாடைகள் என நாமெல்லாம் மிக எளிதாக எடுத்துக்கொள்கின்ற அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்களை இந்தக் குடும்பங்களால் தங்கள் மகள்களுக்கு வாங்கித்தர இயலவில்லை. இந்தப் பெண்களுக்கு முறையான ஆடைகளை வழங்கும் அளவுக்கு இந்தக் குடும்பங்களிடம் வளம் இல்லை; பல நேரங்களில் இந்தப் பெண்கள் ஆண்களுடைய உள்ளாடைகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டியிருக்கிறது, ஏனென்றால், பெற்றோரால் இவர்களுக்கென்று இவற்றைத் தனியாக வாங்க இயலுவதில்லை.

இந்தத் தேவையைப்பற்றித் தெரிந்ததும், இந்தச் சங்கத்தின் வாரியம் உடனடியாகக் கூடிப் பேசியது, இந்தத் திட்டத்தைப்பற்றி விவாதித்தது, இதற்கு நிதி திரட்டுவதற்கான பரப்புரை ஒன்று திட்டமிடப்பட்டது, உறுப்பினர்கள் தன்னார்வத்துடன் அதற்குப் பங்களித்தார்கள். மிக விரைவில், பணம் கொட்டத் தொடங்கியது, உண்மையில், வெறும் 2–3 நாட்களில் பணம் குவிந்தது, இந்தத் திட்டத்துக்குத் தேவையான நிதிக்குமேலேயே நாங்கள் திரட்டிவிட்டோம். எங்களுடைய உறுப்பினர்களில் ஒருவரே தேவையான நிதியில் 70 சதவிகிதத்துக்குமேல் திரட்டி விட்டார்'' என்று தொடர்ந்து கூறுகிறார் இவர். அந்தத் தொகை, வெறும் ரூ.50,000 தான்; ஆனால், இந்தத் திட்டம் இதயத்தைக் கதகதப்பாக்கும் ஒன்றாகும், இந்தப் பொருட்கள் மிகவும் தேவைப்படுகிறவையாகும், ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய தேவையை ரோட்டரியன்கள் உணர்ந்தார்கள்.

பொருட்களை வழங்கும் நிகழ்ச்சி, இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஒருவருடைய வீட்டில் திட்டமிடப்பட்டிருந்தது; விருது பெற்ற இந்த NGOஐ நடத்தும் பிங்கி ராஜ்கர்ஹியா இதில் கலந்து கொண்டார். சங்கத்தின் இப்போதைய தலைவரும் அவருடைய மனைவியும் கொட்டும் மழைக்கு அஞ்சாமல் அந்த முன்னாள் தலைவர் வீட்டுக்கு விரைந்தார்கள்.

RID 3141 DG சுனில் மெஹ்ரா மற்றும் தலைமை ஒருங்கிணைப் பாளர் மனீஷ் மோத்வானியின் தலைமையில் கூட்டம் தொடங்கியது. இதைப்போன்ற பாராட்டவேண்டிய இன்னும் பல நோக்கங்களுக்காகச் சிங்காரி அறக்கட்டளைக்கு இந்தச் சங்கத்தின் ஆதரவை உறுதியளித்ததுடன், பிங்கியிற்கு இந்தச் சங்கத்தின் கௌரவ உறுப்பினர் பொறுப்பும் வழங்கப்பட்டது.

ரோட்டரியன்கள் பழங்குடியினப் பெண்களுக்காக 500 முகமூடிகள், ஐந்து தூய்மைப்படுத்தி நிறுத்தங்கள், போதுமான எண்ணிக்கையில் தூய்மைப்படுத்திப் பாட்டில்கள், 9,500 சானிட்டரி பேட்கள் மற்றும் 230 தொகுப்பு உள்ளாடைகளை NGO இடம் வழங்கினார்கள்; அதன் தன்னார்வலர்கள் இந்தப் பொதிகளைப் பழங்குடியினப் பெண்களுக்குக் கொண்டுசேர்த்துவிட்டார்கள்.■

# மெய்நிகர் சந்திப்புகள், வழிகாட்டும் ரோட்டரி இ-கிளப்புகள்!

ஜெய்ஸ்ரீ

இந்த சந்திப்பு ரோட்டரி இ-கிளப்புகளின் உண்மையான பலத்தைக் காட்டுகிறது. இதற்கு நாம் தொற்று நோய்க்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். இன்று நமது அனைத்து ரோட்டரி சங்கங்களும் இ-கிளப்புகள் போலவே செயல்படுகின்றன. இதுபோன்ற சந்திப்புகளில் நீங்கள் ஏற்கெனவே பங்கேற்று இருப்பீர்கள் என்றார் சென்னை ரோட்டரி மாவட்டம் 3232 சார்பில் நடைபெற்ற சர்வ தேச இ-கிளப்புகள் சந்திப்பில் உரையாற்றிய RI தலைவர் ஹோல்கர் நாக்.

ஆறு கண்டங்களைச் சேர்ந்த 28 நாடுகளிலிருந்து சுமார் 80 இ-கிளப்புகள் பங்கேற்றன. ரோட்டரி இ-கிளப்புகளின் மாநாட்டைப் போலவே இருந்தது. அன்டார்ட்டிக்காவை மட்டும் தவற விட்டு விட்டோம். ஏனெனில் அங்கு ரோட்டரி சங்கமில்லை என்றார் PDG V ராஜா சீனிவாசன்.

ரோட்டேரியன்கள் வெவ்வேறு நேரங்களில், அதாவது காலை, பிற்பகல் மற்றும் மாலை நேரங்களில் இந்தச் சந்திப்புக்குள் நுழைந்திருந்ததை ஏற்றுக்கொண்ட ஹோல்கர் நாக், சூசனும் நானும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறோம் என்றார். நான் தேர்ந்தெடுத்த தலைப்பு ரோட்டரி வாய்ப்புக்களை திறந்துவிட்டிருக்கிறது என்பதுதான். ஏனெனில் அது பல்வேறு நிலைகள் வேலைசெய்கிறது. மக்களுக்கு கண் கண்ணாடி வழங்குவது, சக்கர நாற்காலி வழங்குவது, சிறுதொழில் கடனுதவி வழங்குவது என பல வாய்ப்புகளை நாம் உருவாக்கி இருக்கிறோம். ரோட்டரி நமக்கும் பல வாய்ப்புகளை வழங்கியிருக்கிறது. என்னை பொருத்தவரை ரோட்டரி எனது பார்வையை விரிவுபடுத்தியதுடன் எனக்கு பல நண்பர்களைக் கொடுத்துள்ளது. இது தனிப்பட்ட வளர்ச்சி பற்றியது. இதன் அர்த்தம் என்னவெனில் சிறந்த தலைவராக உருவாவது.

முன்பு எப்போதையும்விட இந்த ஆண்டு ரோட்டரி, தனது உறுப்பினர்களுக்கு மக்களை சென்றடைவதற்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்கியுள்ளது. வைரஸ் தொற்றிலிருந்து தப்பித்து உயிர் பிழைக்க மக்களுக்கு நீங்கள் பல்வேறு வழிகளில் நேரம் காலம் பார்க்காமல் உதவி வருகிறீர்கள். இந்த மெய்நிகர் அனுபவங்கள் மகிழ்ச்சி அளிப்பதாக மட்டும் அல்லாமல் ரோட்டரிக்கு உண்மையிலேயே ஒரு உயர்வைக் கொடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை RI நிர்வாகக்குழு ஒரு சவாலாகவே ஏற்று செயல் பட்டு வந்துள்ளது. நாம் ஒவ்வொரு இரண்டாவது மாதத்திலும் சில நேரங்களில் ஒவ்வொரு மாதமும் சந்தித்து வருகிறோம். இது மிகவும் பயனுள்ள சந்திப்பாகவும் அதிக செலவில்லாமலும் இருந்து வந்துள்ளது. RI எதிர் காலத்தில் இதுபோன்ற மெய்நிகர் சந்திப்புகள் பலவற்றை நடத்த திட்டமிட்டுள்ளது.

2013ம் ஆண்டில் நான் சென்னை வந்தபோது கின்னஸ் சாதனைக்காக ரோட்ராக்டர்கள் 12,000 பேர் ஒன்று கூடியதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். RID 3232 அதிக எண்ணிக்கையிலான அதாவது 25,000 ரோட்ராக்டர்களைக் கொண்டிருந்தது. சாதனை தான். ஆனாலும் அவர்கள் அனைவரையும் நாம் ரோட்டரி உறுப்பினர்களாக மாற்றவேண்டும். இளம்தலை முறையினருக்கு ஏற்ற வகையில் புதிய சங்கங்களை உருவாக்குவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பானில் உள்ள பெரிய



பிரச்னை என்னவென்றால் அங்குள்ள ரோட்டரியினருக்கு வயது அதிகரித்து வருகிறது என்பதுதான்.

ரோட்டரியிலிருந்து வெளியேறிய உறுப்பினர்களை இ-கிளப்பில் சேர அழைப்பது குறித்து, அவ்வாறு வெளியேறிய தரவுகளைத் தரமுடியுமா என்று கிரீஸ் நாட்டின் தென்பகுதியைச் சேர்ந்த இ-கிளப் உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு நாக் பதில் கூறுகையில், தனியுரிமை கொள்கை காரணமாக ரோட்டரியின் தரவுகளைப் பகிர முடியாது. நீங்கள் அருகில் உள்ள சங்கங்களை அணுகி, அதிலிருந்து வெளியேறியவர்கள் பற்றிய தகவலை தனிப்பட்ட முறையில் பெற்று அவர்களை இ-கிளப்புக்கு ஈர்க்கலாம் என்றார்.

கொவிட்-19 தடுப்பூசி வந்தால் அதைக் கையாள்வதற்கான திட்டம் என்ன? என்று இத்தாலியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கேட்டார். அதற்கு பதிலளித்த ஹோல்கர் நாக், போலியோ தடுப்பூசிக்கு என்ன உள் கட்டமைப்பு வசதிகளை பின் பற்றினோமோ அதே வசதிகளை, வழிகளை கொவிட்-19 தடுப்பூசி திட்டத்துக்கும் பயன்படுத்தலாம் என்றார். போலியோ மூலம் நாம் பல பாடங்களைக் கற்றுக்கொண்டோம். அதன் பிறகு அதற்கான பணிகளை சிறப்பாக செய்துமுடித்தோம். அதேபோல இப்போதும் நாம் செயல்பட முடியும் என்றார் நாக்.

"ஹலோ ஹோல்கர்" சிறப்பு அமர்வு நிகழ்ச்சியும் நடை பெற்றது. அப்போது 80 சங்கங்களின் தலைவர்களும் RI தலைவர் ஹோல்கர் நாக் மற்றும் அவரது மனைவி சூசன் இருவருக்கும் ஒருவர் பின் ஒருவராக வாழ்த்துத் தெரிவித்தனர். இந்த அமர்வுக்காக நாங்கள் பலமுறை ஒத்திகைகள் நடத்தினோம் என்றார் நிகழ்ச்சித் தலைவர் ஜெயந்தி ராஜா சீனிவாசன். இது பற்றி ரோட்டரி செய்திக்குழுவிடம் பேசிய அவர், இது ஒரு வேடிக்கையான அனுபவம். நல்ல வேளையாக நாங்கள் எந்த தொழில்நுட்ப பிரச்னைகளையும் எதிர்கொள்ளவில்லை. நாங்கள் பல்வேறு நேர மண்டலங்களைச் சேர்ந்த ரோட்டேரியன்களை ஒருங்கிணைக்க வேண்டியிருந்தது. அவர்கள் அனைவரும் நன்கு ஒத்துழைத்தனர் என்றார்.

ஒரு ஆஸ்திரேலிய இ-கிளப் உறுப்பினர் பற்றி குறிப்பிட்டு பேசிய ஜெயந்தி, அந்த உறுப்பினர் ஜூம் சந்திப்பு ஒத்திகையின்போது ஆஸ்திரேலிய நேரப்படி அதிகாலை 1 மணிக்கு உள்நுழைவார். அவரது பெயர் அழைக்கப்பட்டதும் அவர் எழுந்திருந்து "ஹலோ ஹோல்கர்" என்று சொல்லிவிட்டு மீண்டும் தூங்கச் சென்றிடுவார் என்று தெரிவித்தார்.

சூசனுக்கும் எனக்கும் வணக்கம் சொல்வதை நான் பார்த்தது இதுவே முதல்முறையாகும் என்று ஹோல்கர் நாக் புன்னகையுடன் தெரிவித்தார்.

ஜெர்மனியில் உள்ள ஹாம்பர்க் கனெக்ட் இ-கிளப்பின் உறுப்பினராக இருக்கிறார் சூசன். நான் இங்கு உறுப்பினராக இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். 2014ம் ஆண்டு கேரி ஹுவாங் RI தலைவராக இருந்த போது, ரோட்டரி இயக்குநர் களின் வாழ்க்கைத் துணையை ரோட்டரியில் ஈடுபட வலியுறுத்தினார். அப்போது இயக்குநராக இருந்த ஹோல்கர், இளைஞர்களுக்காகவும், மதிய உணவுக்கு மேல் சந்திக்க முடியாதவர்களுக்குமாக இ-கிளப்பை தொடங்கும் யோசனையை முன்வைத்தார். நாங்கள் 2014 டிசம்பரில் எங்கள் கிளப்பை உருவாக்கினோம். அன்று முதல் இது ஒரு மறக்க முடியாத அனுபவமாக இருந்து. வருகிறது. என்றார் அவர்.

1996ம் ஆண்டு முதல் அவர் ரோட்டரியின் ஒரு அங்கமாக இருக்கிறார். RYE திட்டத்தின் கீழ் ஸ்லவோகியா மற்றும் சுவிட்சர்லாந்தை சேர்ந்த இரண்டு இளைஞர்களுக்காக நாங்கள் எங்கள் வீட்டை திறந்தோம். 2013ம் ஆண்டு ஹோல்கர் நாக் ரோட்டரி இயக்குநராகும் வரை 40 இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சிகளை எங்கள் வீட்டில் நடத்தியுள்ளோம் என்றும் சூசன் குறிப்பிட்டார்.

ஹோல்கரை எப்படி சந்தித்தேன் என்பதை நிகழ்வுகளுடன் ஒழுங்கு படுத்தி பார்வையாளர்களை சந்தோஷப்படுத்தினார் சூசன். நாங்கள் இருவரும் ஒரே கல்லூரியில் படித்தோம். முதல் மாணவர் பேரவையில் என்னை சந்தித்ததாக அவர் (ஹோல்கர்) கூறுகிறார். ஆனால், அப்படி சந்தித்ததாக எனக்கு நினைவில்லை. அப்போது 94 ஆண்கள் என்றால் நாங்கள் மூன்று பேர் பெண்கள் என்றார் சூசன்.

முன்னாள் மாவட்ட ஆளுநர் சீனிவாசன் கூறுகையில், ரோட்டரி முதன் முதலாக 2002ல் இ-கிளப்பை தொடங்கியது. ரோட்டரி இ-கிளப் ஒன்-யு.எஸ்.ஏ. இது தான் எதிர் கால மாதிரியாக இருக்கும் என்று நினைத்தோம். ஆனால், பெரும் பாலானவர்கள் கொவிட் வைரஸ் அச்சுறுத்தல் காலம் வரும்வரை அது பற்றி சிந்திக்கவில்லை. இப்போது எல்லோருமே மெய்நிகர் முறையில் கூட்டங்களை நடத்த கற்றுக் கொண்டு விட்டோம். ஹவாய் மாநாட்டுக் கூட்டம் கூட அப்படித்தான் நடந்தது. இந்த சந்திப்பு இ- கிளப்புக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும்.

2013ம் ஆண்டு மாவட்ட ஆளுநர் என்ற முறையில் சென்னையில் ரோட்டரி இ-கிளப்பை சீனிவாசன் நிறுவினார். இந்த ஆண்டு ஜூலையில் RIPE சேகர் மேத்தா. ஒரே நாளில் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 11 உறுப்பினர்களை கிளப்பில் சேர்த்தார் என்றார் சீனிவாசன். மாவட்ட ஆளுநர் முத்துபழனியப்பன், இ-கிளப்பு களின் இந்த தனித்துவமான மற்றும் புதுமையான இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்து அனைவரையும் ஒருங்கிணைத்ததற்காக கிளப் தலைவர் தேவபிரசாத்தை பாராட்டினார்.

தொழில்நுட்பம் ஒரு செயல்பாட்டு கருவியாக இருந்து வருகிறது. கொரோனா தொற்று காலத்தில் பாரம்பரிய ரோட்டரி சங்கங்களும் மெய்நிகர் கூட்டங்களை நடத்தி வருகின்றன. வரும் காலங்களில் இது ரோட்டரியின் வளர்ச்சிக்கு உதவும் என்றார். இந்தியா முழுவதும் பார்வை இழப்பைத் தவிர்க்கச் செய்யும், மாவட்டத்தின் ஆரஞ்சு திட்டம் குறித்து அவர் பேசினார். சென்னையில் தொடங்கி 104 இடங்களில் பார்வை பராமரிப்பு மையங்கள் நிறுவப்படும் என்றும் இத்திட்டத்திற்காக TRF 1.7 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஏழு மானிய உதவிக்கு ஒப்புதல் அளித்துள் ளதாகவும் குறிப்பிட்டார். இந்நிகழ்ச் சிக்கு ஏற்பாடு செய்திருந்த சங்கத்தின் செயலர் சரவணன் பாலமுருகன் நன்றியுரை வழங்கினார்.■

# படங்கள் பேசும்போது...

ரஷீதா பகத்

RID 3040, அதன் DIR அவ்ஹான் நாரங்க் தலைமையில் நடத்திய பன்னாட்டுப் பசுமைப் புகைப்படப் போட்டியின்போது, எங்கு பார்த்தாலும் வண்ணங்கள் நிறைந்திருந்தன, இயற்கை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்தப் போட்டி, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் சேவஸ் இதழுடன் இணைந்து நடத்தப்பட்டது.

இந்த இளைஞர்கள் எடுத்த பல புகைப்படங்கள் மிகச் சிறந்த தரத்துடன் அமைந்திருந்தன. ஓர் அழகுக் கணத்தை நீங்கள் பதிவு செய்து, இனி வரும் தலைமுறைகளுக்காக அதைச் சேமிக்கிற மிக உயர்ந்த கலையான புகைப்படக் கலையைப் பின்பற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சி உள்ளது என்றார் நாரங்க்.

இந்தக் கூட்டத்தில் பேசிய RID 3040 DG கஜேந்திர நாரங்க், இந்தப் போட்டிக்காக உலகெங்குமுள்ள இன்டராக்டர்களிடமிருந்து 160 நுழைவுகள் வந்திருந்தன என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். சேவஸ் இதழின் மேலாண்மைக் கூட்டு அலுவலரும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ரோட்டரியனுமான சந்தீப் மல் தலைமையில் சேவஸ் இதழ் ஒரு சிறந்த நடுவர் குழுவை அமைத்திருந்தது. இந்தக் குழுவினர் பரிசுகளைப் பெறும் மூன்று சிறந்த புகைப்படங்களையும், ஐந்து கௌரவக் குறிப்புப் புகைப்படங்களையும் தேர்ந்தெடுத்தார்கள்.

தன்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த இன்டராக்ட் சங்கங்கள் நடத்தும் இந்த நிகழ்ச்சிக்கு அறிவுக் கூட்டாளரான சேவஸ் இதழின் CEOவும் ரோட்டரியனுமான ஸ்ரீ நந்தி அவர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஸ்ரீ நந்தி, தங்களுக்கும் இது ஒரு சிறந்த அனுபவமாக இருந்தது என்றார்.



*இன்டராக்டர் தியா சஜிதின் புகைப்படம்.*

வருங்காலத்திலும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான அவசரத் தேவையைப்பற்றிய செய்தியை இந்நாட்டு இளைஞர்களுக்குக் கொண்டுசெல்வதற்காக ரோட்டரியுடன் இணைந்து பணியாற்றுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

### மிகச் சிறந்த தரம்

போட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்களின் தரம் மிகச் சிறப்பாக இருந்தது'' என்றும், புகைப்படங்களைப் பல நிலைகளில் வடிகட்டவேண்டியிருந்தது என்றும் மல் குறிப்பிட்டார். ஒரு சிலந்தி வலையில் சிக்கிக்கொண்ட ஒரு தட்டாரப் பூச்சியை மிகச் சிறப்பான முறையில் கருப்பு வெள்ளைப் புகைப்படமாகப் பதிவுசெய்திருந்த ஆதித்ய கிருஷ்ண மேனன் முதல் பரிசு பெற்றார்.





## நல்ல புகைப்படம் எப்படி உருவாகிறது?

*ஒரு நல்ல புகைப்படம் என்பது, கேமெராவைவிட, கேமெராவுக்குப் பின்னால் இருக்கும் கண்ணைப் பொறுத்துதான் அமைகிறது என்று ரோட்டரி செய்திகள் ஆசிரியர் ரஷீதா பகத் விளக்கினார். இன்று யார் வேண்டுமானாலும் ஒரு மொபைல் தொலைபேசியைக் கொண்டு ஒரு நல்ல புகைப்படம் எடுத்துவிடலாம். ஆனால், தீவிரமான புகைப்படக் கலையில் ஆர்வமுள்ளவர்கள் கண்டிப்பாகக் கேமெராக்களைப் பயன்படுத்தவேண்டும்.*


*தொகுப்பு, ஒளி மற்றும் அதன் மூலத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றுடன், பொறுமையும் மிக முக்கியமான ஒரு தேவை, குறிப்பாக, இயற்கை மற்றும் கானுயிர்ப் புகைப்படங்களை எடுக்கும் போது பொறுமை கண்டிப்பாக வேண்டும்.*

*முன்பு வெளிவந்துகொண்டிருந்த லைஃப் என்ற இதழ் முழுப் பக்கங்களில் புகைப்படங்களை வெளியிட்டு அவற்றுக்கு முக்கியத்துவம் அளித்ததை அவர் நினைவுகூர்ந்தார்.*

*காந்திஜி கொல்லப்பட்டதற்கு ஒரு நாள் முன்னதாகப் பிர்லா ஹவுஸில் இருந்த மிகச் சிறந்த புகைப்படக் கலைஞரான ஹென்றி கார்ட்டியர்-ப்ரெஸ்ஸன்பற்றி அவர் பேசுகையில், ''ஒரு புகைப்படத்தைத் தீர்மானிக்கும் கணம்'' என்கிற அவருடைய கொள்கையை விளக்கினார். தொழில்முறைப் புகைப்படக் கலைஞர் என்பவர் எப்போதும் எச்சரிக்கையாக, கூர்மையுடன் இருக்கவேண்டும், விளையாட்டுத்துறைப் புகைப்படக் கலைஞர்கள் இதை மிக நன்றாக அறிவார்கள். அவர்கள் ஒரே ஒரு விநாடி கண் சிமிட்டினாலும், அந்த ஆட்டத்தின் மிகச் சிறந்த புகைப்படத்தை அவர்கள் இழந்துவிடக்கூடும்.*

*பொறுமையின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்திய அவர், சூரியன் மறையும் காட்சியை அழகாகப் புகைப்படம் எடுக்கும் போது, பெரும்பாலானோர் சூரியன் மறைந்தவுடன் தங்களுடைய கேமெராப் பொதிகளைப் பொட்டலம் கட்டிவிடுகிறார்கள் என்றார். உண்மையான மாயாஜாலம் சூரியன் மறைந்த பிறகு தான் தொடங்குகிறது. வானம் மிக விரைவாக வண்ணங்களை மாற்றுகிறது; சூரியன் மறைந்த பின்னர் ஒளிர்கின்ற வானத்தைப் பதிவு செய்யும் புகைப்படங்கள் வியக்க வைக்கிறவையாகவும் மகிழ்ச்சி அளிப்பவையாகவும் அமையலாம் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.*

பரிசு வென்ற புகைப்படத்தைத் தான் பதிவு செய்த கணத்தை மேனன் விவரிக்கையில், முடக்க த்தால் சலிப்படைந்திருந்த நான் வீட்டில் அமர்ந்திருந்தேன், கூரையிலிருந்த சிலந்தி வலையில் சிலந்தியையும் தட்டாரப்பூச்சியையும் கண்டேன். சிலந்தி வலை வெளிச்ச த்தில் ஒளிர்ந்துகொண்டிருந்தது, அந்த ஒளியால் ஈர்க்கப்பட்ட தட்டாரப்பூச்சியை நான் கண்டேன், அது சிலந்தி வலையை நோக்கி நகரத் தொடங்கியது. விரைவில் அது வலையில் சிக்கிக் கொள்ளும் என்பது எனக்குத் தெரியும், ஆகவே, நான் விரைவாக என்னுடைய கேமெராவைக் கையில் எடுத்துக் கொண்டேன், காத்திருந்தேன் என்றார்.



*முதல் பரிசு பெற்ற புகைப்படம்.*

பரிசு பெற்ற இளைஞர்கள் எல்லாரும் கேமெராக்களைப் பயன்படுத்தி மிகச் சிறந்த படங்களை எடுத்துள்ளார்கள், தங்களுடைய மொபைல் தொலைபேசிகளைப் பயன்படுத்தவில்லை என்பது மகிழ்ச்சியளிக்கிறது. அவர்களுடைய தீவிரப் புகைப்படக் கலை ஆர்வத்தை இது காண்பிக்கிறது, இன்றைக்குப் பொழுதுபோக்காக இருக்கிற இந்தக் கலை, நாளைக்குத் தொழிலாகவும் ஆகலாம்.

ஆனால், நான் தலைமை தாங்கிய இந்த நிகழ்ச்சியில் பரிசு பெற்ற புகைப்படங்களில் எனக்கு மிகவும் பிடித்தது, இரண்டாம் பரிசை வென்ற விஷால் நவீனுடைய புகைப்படம்தான். ஒரு குரங்கையும் அதன் குட்டியையும் பதிவு செய்திருந்த இந்தப் புகைப் படம், இந்த இதழின் அட்டைப் படத்தில் இடம் பெற்றுள்ளது. என்னைப் பொறுத்தவரை, இந்தப் படம் பல விஷயங்களைப் பேசுகிறது.அதன் தொகுப்பு, கூர்மை, பின்னணி ஒளி, மற்ற தொழில்நுட்ப அம்சங்கள் என அனைத்தும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. அதே நேரம், ஒரு புகைப்படம் 1,000 சொற்களுக்குச் சமம் என்கிற பழமொழியையும் இது நிரூபிக்கிறது.

பார்வையாளர்கள் மனத்தில் இந்தப் புகைப்படம் உருவாக்கக்கூடிய உணர்வுகள்தான் இங்கு முதன்மையானவை. குறிப்பாக, 2020ஐப் போன்ற ஒரு மோசமான ஆண்டு முடிவடைந்து, ஒரு புதிய ஆண்டு தொடங்கும் நேரத்தில் இந்தப் புகைப்படம் மிகுந்த நம்பிக்கையை அளிக்கிறது. அன்பு, மென்மை, நம்பிக்கை, பாதுகாப்பு ஆகிய உணர்வுகளை இந்தப் படம் பேசுகிறது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய PDG பிரமோத் ஜெஜ்ஹூரிகர், உலகெங்கு முள்ள இன்டராக்ட் சங்கங்களை இணைத்துள்ள இந்த மிகச் சி றந்த முன்னெடுப்பு''க்காக DIR அவ்ஹான் நாரங்கைப் பாராட்டினார். சில வாரங்களுக்கு முன்னால், பள்ளிக் குழந்தைகளுக்காக ரோட்டரி இந்தியா நடத்திய ஒரு கானுயிர் நிகழ்ச்சியை இவர் நினைவுகூர்ந்தார். RIPE சேகர் மேத்தா பேசிய இந்த நிகழ்ச்சி 95,000 பங்கேற்பாளர்களைப் பெற்றுச் சாதனை படைத்தது.

இன்டராக்ட் மாவட்டத் தலைவர் லோகேஷ் ஜவார், இப்போது இயங்கி வரும் 14 இன்டராக்ட் சங்கங்களுடன், ஒரு வாரத்தில் 10 இன்டராக்ட் சங்கங் கள் திறக்கப்படுவதாக அறிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின் திட்டத் தலைவரான DGE மகேந்திர மிஷ்ரா, DGN தீரேந்திர ஜெயின் மற்றும் மாவட்டப் பயிற்சியாளர் அதுல் கார்கவ் இதில் பங்கேற்றார்கள்.■



DIR *அவ்ஹான் நாரங் மற்றும்* DG *கஜேந்திர நாரங்.*

# பேசும் படங்கள்: RID 3131ன் பயிற்சி நிகழ்ச்சி

ரோட்டரி செய்திக்குழு




**இடதிலிருந்து:** *முக்கேஷ் குப்தா, ஜிக்னேஷ் பாண்ட்யா,* DG *ரஷ்மி குல்கர்னி,* RIPC *தீபக் ஷிகார்பூர் மற்றும் மாவட்ட* PI *இயக்குனர் விவேக் தீஷித்.*

என்னால் இவ்வளவு சிறப்பான வீடியோக்களை உருவாக்க இயலும் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை. மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது!

ரோட்டரியை முன்னிறுத்துவதற்காக நல்ல சுவரொட்டிகள் மற்றும் வீடியோக்களை உருவாக்குவதுதான் இன்றைய தேவை, அதை எப்படிச் செய்வது என்று இப்போது எங்களுக்குத் தெரியும்!

இந்த ஆண்டின் முதல் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கலந்துகொள்வது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ரோட்டரி மாவட்டம் 3131ன் பொதுத் தோற்றக் குழு நடத்திய பேசும் படங்கள் என்ற பயிற்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களில் சிலரிடமிருந்து பெறப்பட்ட எதிர்வினைகள் இவை என்கிறார் பொதுத் தோற்ற இணைத் தலைவர் மோகன் சௌபால். புணே-யில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி, ரோட்டரி சங்கங்கள் தங்களுடைய திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளைப்பற்றிய உயர் தரத்திலான முன்னிறுத்தல் வீடியோக்கள் மற்றும் சுவரொட்டிகளைத் தயாரிப்பதற்கு அவற்றின் பொதுத் தோற்றக் குழுக்கள் மற்றும் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது.

DG ரஷ்மி குல்கர்ணி மற்றும் மாவட்ட PI இயக்குநர் விவேக் தீக்ஷித் ஆகியோர், உறுப்பினர் எண்ணிக்கையை வளர்த்தல் மற்றும் நிதி திரட்டலுக்கு, இதுபோன்ற தகவல்களைப் பொதுமக்களிடையே பரப்புவது முக்கியம் என்று உறுதியாக நம்புகிறார்கள். 2020–21ன் மாவட்ட PI குழு இந்த ஆண்டு டிஜிட்டல் ஊடகத்தைத் தீவிரமாகப் பயன்படுத்துகிறது, மாவட்டத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை முன்னிறுத்துவதற்காகப் பல ஆர்வமூட்டும் வீடியோக்கள், சுவரொட்டிகள், சிற்றேடுகள் மற்றும் அறிவிப்புப் பலகைகளை உருவாக்கியுள்ளது.

சங்கங்கள் செயல்திறன் மிக்க தகவல் தொடர்புக் கருவிகளை உருவாக்க விரும்புகின்றன, ஆனால், அதை எப்படிச் செய்வது என்று அவர்களில் பெரும்பாலானோருக்குத் தெரியவில்லை என்பதை PI குழு விரைவில் தெரிந்துகொண்டது. ஆகவே, செயல்திறன் மிக்க சுவரொட்டிகள் மற்றும் வீடியோக்களை உருவாக்குவதுபற்றிச் சங்க அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கிற ஒரு பயிலகம் அறிவிக்கப்பட்டது.

டிஜிட்டல் ஊடகத்துறை வல்லுனரும் மாவட்ட டிஜிட்டல் ஊடக முன்னெடுப்புகளின் முதுகெலும்பாக இருப்பவருமான ஜிக்னேஷ் பாண்ட்யா இந்தப் பயிலகத்தின் பயிற்றுநராகச் செயல்பட்டார், அவரும் அவருடைய குழுவினரும் சேர்ந்து, பங்கேற்பாளர்களுக்கு மிகச் சிறந்த பயிற்சியளித்தார்கள். இரண்டரை மணி நேரங்களுக்கு எல்லாரும் அவர்களுடைய தொலைபேசிகளில் மூழ்கியிருந்தார்கள்.

பேசும் படங்களை DG ரஷ்மி தொடங்கிவைத்தார், PDG தீபக் ஷிகர்பூர் முதன்மைப் பேச்சாளராகச் சொற்பொழிவாற்றினார். மாவட்ட அலுவலர்களான மன்ஜூ ஃபட்கே, ஷித்தல் ஷா மற்றும் சுதின் ஆப்தே ஆகியோர், ரோட்டரியைச் செயல்திறனோடு முன்னிறுத்துவதன் முக்கியத்துவத்தைப்பற்றிய தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். ரோட்டரி நியூஸ் ஆசிரியர் ரஷீதா பகத் மற்றும் RI தெற்கு ஆசிய அலுவலகத்தின் தகவல் தொடர்புகள் மற்றும் பொது உறவுகள் மூத்த ஒருங்கிணைப்பாளர் ஜோதி ராய் ஆகியோர் புகைப் படங்களை எடுத்தல் மற்றும் செயல் விளைவு மிக்க தகவல் தொடர்புக் கலை பற்றிய வீடியோச் செய்திகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

கோவிட் நோய்ப்பரவலின் போது அனைத்துக் கட்டாயப் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளையும் பின்பற்றிய இந்த நிகழ்ச்சி, விவேக் தீக்ஷித் மற்றும் முகேஷ் குப்தா தலைமையில் நடத்தப்பட்டது. ■



# பாதிப்பு ஏற்படும் முன் மாற்றத்தை தழுவுவோம்! RID பாண்ட்யா

ஜெய்ஸ்ரீ

மாற்றம் என்பது எங்கிருந்தோ அல்லது யாரோ ஒருவரிடமிருந்தோ தொடங்குவதில்லை. அது நம்மிடம் இருந்து தான் தொடங்க வேண்டும் RI இயக்குநர் பரத் பாண்ட்யா தெரிவித்தார். RI மகளிர் குழு (RIW), Be the change என்னும் தலைப்பில் உலகளாவிய மெய்நிகர் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில் 400க்கும் மேலானவர்கள் பங்கேற்றனர். இதில் உரையாற்றிய போது தான் பரத் பாண்ட்யா மேற்கண்டவாறு கூறினார்.

நீங்கள் மாற்றத்தை விரும்பினால் அர்ப்பணிப்பு, திறன், துணிச்சல் மற்றும் தன்னம்பிக்கை உங்கள் கொள்கையாக இருக்க வேண்டும். மாற்றத்தை தழுவுவது நல்லது. இல்லாவிட்டால் அது உங்களை பிரித்து, பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்றார்.

**சரியான நேரம்:** ரோட்டரி இப்போது முக்கியமான இடத்தில் இருக்கிறது. கடந்த காலங்களில் செய்த மிகப் பெரிய சாதனைகள் குறித்து நாம் பெருமைப்படுகிறோம். நமது வெற்றி, புகழ் நாளையும் தொடர வேண்டுமானால் இன்னும் நிறைய பணிகளைச் செய்யவேண்டும். நம் ஒவ்வொருவரிடமும் ஆற்றல் உள்ளது. அதை உணர்ந்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்றார்.

ரோட்டரியில் பெரும்பாலான பதவிகள் ஒரு வருடம்தான். இந்த பாரம்பரியத்தின் காரணமாக நாம் மாற்றத்தை தழுவுகிறோமா? அல்லது உண்மையிலேயே மாற்றத்தை விரும்புகிறோமா? என்று ஆச்சரியத்துடன் குறிப்பிட்டார், நீண்ட காலமாக நமது உறுப்பினர்களின் எண்ணிக்கை 1.2 மில்லியன் என்ற அளவிலேயே உள்ளது. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் இது 1.18 மில்லியனாகக் குறைந்துவிட்டது. அதாவது கொரோனா தொற்றுக்கு முன்பே உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டது. நாம் நமக்குள்ளேயே சிந்தித்துப் பார்த்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி ரோட்டரியை சரியான திசையில் கொண்டு செல்வதற்கான நேரம் வந்துவிட்டது.

ரோட்டரியின் நிறுவனர் பால் ஹாரிஸின் வார்த்தைகளை மேற்கோள் காட்டினார் பரத் பாண்ட்யா. ரோட்டரி எல்லா நேரங்களிலும் பரிணாம வளர்ச்சி பெறவேண்டும். சில சமயங்களில் புரட்சிகரமாக இருக்க வேண்டும் என்றார். ரோட்டரி தலைவர்கள் புரட்சிகரமான மாற்றங்களைச் செய்த நிகழ்வுகளை நினைவுகூர்ந்தார். இந்த 115 ஆண்டுகளில், அதாவது 1905ம் ஆண்டில் வெறும் நான்கு உறுப்பினர்களாக இருந்த அமைப்பு இப்போது 1.2 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இது நண்பர்கள் இணைந்து கூட்டாகச் செயல்படும் அமைப்பாக தொடங்கப்பட்டது. நமது சேவையில் மாற்றம் ஏற்பட்டு இப்போது நாம் தன்னலமற்ற சேவையையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். இது ஒரு புரட்சிகரமான மாற்றமாகும்.

ஆர்ச் கிளம்ப் 50 டாலர்களில் ரோட்டரி அறக்கட்டளையை ஏற்படுத்திய போது அது ஒரு புரட்சியாக இருந்தது. இன்று அது உலகின் முன்னணி அறக் கட்டளைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. சேவையின் நான்கு வழிகளையும் ஹெர்பர்டின் நான்கு வழி சோதனை களையும் வரைவு செய்தது. இதுதான் அனைத்து ரோட்டேரியன்களும் கடைப்பிடிக்க வேண்டிய அளவு கோலாகும். ரோட்டரியின் நாடாளு

மன்றமான CoL அந்த நேரத்தில் புரட்சி கரமான மாற்றமாகும். இப்போது அந்த கொள்கையை மறுசீரமைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. விதிகளையும் கொள்கைகளையும் மாற்றியமைக்க CoL சந்திப்புக்காக நாம் மூன்றாண்டுகள் காத்திருக்க வேண்டுமா? ஒவ்வொரு ஆண்டும் கூட்டம் நடத்தி தீர்மானங்களை நிறைவேற்றுவது என்ற கவுன்சிலின் புதிய அறிமுகம் அந்த திசையில் புரட்சி என்று சொல்லலாம் என்று அவர் விளக்கினார்.

TRF மானியங்களைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், உலகில் எங்காவது உங்களின் ஒரு டாலர் பங்களிப்பு பன்மடங்காகப் பெருகுமா? என்று கேள்வி எழுப்பிய அவர், இது அந்த நேரத்தல் புரட்சிகரமானது என்று தெரிவித்தார். இப்போதைய புரட்சி என்ன தெரியுமா? புதிய செயல் திட்டமும், கண்ணோட்டமும். ரோட்டரியின் எதிர்கால கண்ணோட்டத் திட்டம் மற்றொரு புரட்சிகரமான திட்டம். இது மானியங்களை அடுத்த கட்டத்துக்கு கொண்டு சென்றுள்ளது. ரோட்டேரியன்கள் சர்வதேச அளவில் சிந்திக்கவும், உள்நாட்டு அளவில் செயல்படவும் வழிகாட்டியுள்ளது என்றார்.

மாவட்ட மானியங்கள் உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன, சர்வதேச அளவிலான மானியங்கள் சமூகத்தில் பயனுள்ள திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த உதவுகின்றன. எனவே நாம் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்குவது, பள்ளிச் சீருடைகள் வழங்குவதுடன் நம் செய்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டாம். பெரிதாக கனவு காண் போம். முன்னோக்கிச் செல்வதற்கான வழி கூட்டுறவு. அரசாங்கங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு புதிய தாக்கத்தை ஏற்படுத்துவோம்.

இணைந்து செயல்படுவதற்கு போலியோ பிளஸ் ஒரு சிறந்த உதாரணம். நாம் பெரிதாக சாதித்து விட்டோம் என்று நமது காலரை தூக்கிவிட்டுக்கொண்டாலும், உலகில் உள்ள அரசாங்கங்கள், உலக சுகாதார நிறுவனம், யுனிசெப், கேட்ஸ் அறக் கட்டளை ஆகியவற்றின் கூட்டாகச் செயல்பட்டது தான் போலியோ பிளஸ் வெற்றிக்கு முழு காரணம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ரோட்டரியின் எல்லையை விரிவு படுத்துவது குறித்து பேசிய அவர், 2019–20ல் RIல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ரோட்டரியின் வளர்ச்சி திட்டத்தை அவர் வலியுறுத்தினார். ரோட்டரி ஒரு சேவை அமைப்பு அல்ல, அது உறுப்பினர்கள் கொண்ட அமைப்பு. உறுப்பினர்கள் தான் வாடிக்கையாளர்கள். ரோட்டரியின் சர்வதேச அளவிலான வளர்ச்சி, அதன் பெருமை, சுய வளர்ச்சி, தலைமை குறித்து சக உறுப்பினர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். அப்போது தான் ரோட்டரி வளரும்.

தரமான உறுப்பினர்களை ஈர்ப்பது பற்றி பேசிய பாண்ட்யா, “நீங்கள் ஒருவர் மீது ஒரு விரலைக் காட்டும்போது மூன்று விரல்கள் உங்களை நோக்கி இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. ரோட்டேரியன்கள் முதலில் தங்களை சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் சங்கம் தரமான உறுப்பினர்களை ஈர்க்கும்.” ஆண்-பெண் உறுப்பினர்களுக்குச் சமமான வாய்ப்பு இருக்க வேண்டும். 2023ம் ஆண்டுக்குள் ரோட்டரி 30 சதவீதப் பெண்களைத் தலைமைப் பதவியில் வைத்திருக்க வேண்டும் என்று ரோட்டரி தலைமை இலக்கு நிர்ணயித்துள்ளது.

**பெண்கள் பற்றிய கண்ணோட்டம் மாறவேண்டும்:** பல தலைமுறை களாகப் பெண்களிடம் பாகுபாடு காட்டப்பட்டு வந்துள்ளது. இந்த கண்ணோட்டம் மாறவேண்டும். இது தொடர்பாக மருத்துவ ஆய்வு ஒன்றையும் அவர் உதாரணமாகக் குறிப்பிட்டார். நெஞ்சுவலி ஏற்பட்டவுடன் மருத்துவமனையை அடைவதற்கு ஆண்களும், பெண்களும் எடுத்துக்கொள்ளும் நேரத்தை அந்த ஆய்வு ஒப்பிடுகிறது. அதாவது நெஞ்சு வலி ஏற்பட்ட இரண்டு மணி நேரத்தில் ஆண்கள் மருத்துவமனைகளை அடைகிறார்கள். ஆனால், பெண்கள் 22 மணி நேரத்துக்கு பிறகுதான் மருத்துவ உதவியைப் பெறுகிறார்கள். தங்கள் தனிப்பட்ட பிரச்னைகளைப் புறக்கணித்து தங்கள் குடும்பத்திற்கு முதலிடம் கொடுக்க பெண்கள் விரும்புவதே இதற்கு காரணமாகும். இந்த மாறுபட்ட மனநிலை உங்களிட மிருந்து தொடங்க வேண்டும் என்று பெண்களிடையே உரையாற்றினார்.

மேலும் அவர், 60 சதவீத ரோட்டேரியன்களுக்கு ரோட்டரி என்றால் என்னவென்று சரியாகத் தெரியவில்லை. நாம் ரோட்டரி உறுப்பினர்களுக்கு ரோட்டரியின் செயல்பாடுகள் குறித்து சொல்ல வேண்டும். நம் அமைப்பு பற்றி நாம் முதலில் பெருமை கொள்ளவேண்டும். அதன் பிறகுதான் வெளி உலகிற்கு ரோட்டரியின் செயல்பாடுகளைப் புரியவைக்க வேண்டும், என்றார்.

நல்ல உடல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் குறித்து பேசிய அவர், நோய்களை குணப்படுத்தும் நிலையிலிருந்து நாம் நோய்த் தடுப்புக்கான சுகாதாரத்தை நோக்கி கவனம் செலுத்த வேண்டும். கொரோனா வைரஸ் தொற்று நமக்கு இரண்டு முக்கியமான பாடங்களைச் சொல்லிக்கொடுத்துள்ளது. நல்ல உடல் ஆரோக்கியம் தான் ஒருவரின் மிகப்பெரிய சொத்து என்பதையும், நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் போது பல்வேறு சிக்கல்களால் இறப்பவர்களின் விகிதம் அதிகரித்து வருவதையும் அவர் குறிப்பிட்டார்.

**மாதவிடாய் ஆரோக்கியம்:** ஸ்பெயின் நாட்டிலுள்ள இபிஸா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரும் ரோட்டரி சர்வதேச மகளிர் குழுவைச் சேர்ந்த வருமான டெனிஸி கில்ஸ்சன் பேசு கையில், மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதார திட்டத்தை சர்வதேச திட்டமாக ரோட்டரி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று யோசனை தெரி வித்தார். இது தொடர்பான செயல் திட்டத்துக்காக RIல் மகளிர் குழு ரோட்டரி தலைமையின் ஒப்புதலுக்கு காத்திருப்பதாகவும் கூறினார். இந்த விஷயத்தில் மகளிர் குழுவை பாண்ட்யா பாராட்டினார். வளரும் நாடுகளில் உள்ளதைப்போலவே மேற்கத்திய நாடுகளிலும் இப்பிரச்னை உள்ளது என்றார். முன்னதாக RIல் மகளிர் குழுவின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரான வித்யா சீனிவாசன் வரவேற்புரையாற்றினார். B தாட்சாயிணி நன்றி கூறினார்.■

# கிராமப்புறப் பெண்களுக்கு பசுக்களை அளிக்கும் RC ராசிபுரம்

V முத்துக்குமரன்

தமிழ் நாட்டின் நாமக்கல் மாவட்டத்திலுள்ள ராசிபுரத்துக்கு அருகிலிருக்கும் காட்டூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ரத்தினம் (60). இவர் நோய்ப்பரவலின்போது வேலையை இழந்தார், உறுதியற்ற தன்மை மற்றும் அச்சத்தின் இருள் மேகங்கள் அவரைப் பற்றிக்கொண்டன. என்னுடைய வயதில்,பண்ணை வேலை செய்வதற்கு யாரும் என்னை வேலைக்குச் சேர்க்க மாட்டார்கள். நான் மிகுந்த அச்சத்தில் இருந்தபோது, ரோட்டரியன்கள் சினையாக இருந்த இந்தப் பசுவை எனக்கு அளித்தார்கள், இந்தப் பசு ஒரு நலமான கன்றை ஈன்றது. இப்போது நான் வீடுகளுக்கு 10–12 லிட்டர் பால் வழங்குகிறேன், என் வருவாய் பலமடங்காகி விட்டது, என்னுடைய மிகப் பெரிய கனவுகளையெல்லாம் தாண்டிவிட்டது'' என்று விளக்குகிறார் இவர்.

மசக்காளிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பத்மாவதி (38) என்பவரிடமிருந்து, இதயத்தைக் கதகதப்பாக்கும் இன்னொரு கதை வருகிறது; ஒரு நலமான, சினையாக இருக்கிற பசுவைத் தனக்குத் தந்ததற்காக இவர் ரோட்டரியைத் தொடர்ந்து பாராட்டிக் கொண்டே இருக்கிறார். ரோட்டரிக்கு நன்றி, நாங்கள் வறுமையிலிருந்து வெளியில் வந்துவிட்டோம், எங்கள் பால் தொழிலை விரிவாக்குவதற்கு ஆவலாக இருக்கிறோம்'' என்று புன்னகை செய்கிறார் இவர்.

இந்தியாவில் ரோட்டரியின் 100 ஆண்டுகளைக் கொண்டாடுவதற்காக, RC ராசிபுரம், RID 2982, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிற பெண்களுக்குச் சினையாக உள்ள 108 பசுக்களை நன்கொடையாக அளித்தது. RC கேம்போ மௌராவ், பிரேசில், RID 4630ஐத் தன்னுடைய கூட்டு அமைப்பாகக் கொண்டு, அவர்களுடன் இணைந்து செய்யப் பட்ட, ரூ.53.68 லட்சம் மதிப்புள்ள ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்தின் வழியாக இந்தப் பசுக்கள் வழங்கப் பட்டன.

சென்ற ஆண்டு, IPP A திருமூர்த்தி அவர்களுடைய பதவிக்காலத்தின் போது இந்தத் திட்டம் சிந்திக்கப் பட்டது, சங்கத் தலைவர் S கதிரேசன் தலைமை தாங்கிய ஒரு பெரிய விழாவில், பலன் பெறுவோர் தங்களுடைய கறவைப் பசுக்களைப் பெற்றார்கள், இந்த விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் K மேக்ராஜ் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார்.

முன்னதாக, இந்தச் சங்கத்தின் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட GG குழு ஒன்று, ஒரு சமூக மதிப்பீட்டுத் தேவையை நடத்துவதற்காகவும், நீடித்திருக்கும் ஒரு வருவாயைப் பெற மக்களுக்கு உண்மையில் என்ன தேவை என்பதைக் கண்டறிவதற்காகவும்'' 8–9 கிராமங்களுக்குப் பயணம் சென்றது. VAOக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் எங்களுக்கு வழிகாட்டினார்கள், உதவினார்கள்'' என்கிறார் காமதேனு பசுத் திட்டத்தின் இரண்டாம் நிலைத் தொடர்பு நபரான Rtn N P ராமஸ்வாமி.

குறிப்பாக, அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப்பற்றி நாங்கள் அவர்களைக் கேட்டோம், தைத்தல் போன்ற அவர்களுடைய தொழில் சார்ந்த திறன்களை மேம்படுத்துவதற்கான அறிவுரைகளை



RC *ராசிபுரம் தலைவர்* S *கதிரேசன், திட்ட பயனாளி ரத்தினம்,* DGE P *சரவணன் மற்றும்* IPP A *திருமூர்த்தி.*



*நாமக்கல் மாவட்ட கலெக்டர் K மேகராஜ், திட்டத்தலைவர் K கந்தசாமி, திட்ட முதன்மை செயலர் S பாலாஜி பசு வழங்கும் விழாவில்.*

முன்வைத்தோம். ஆனால், அவர்கள் கறவைப் பசுக்களை வாங்குவதற்கான உதவியை நாடினார்கள்'' என்கிறார் இவர்.

கணக்கெடுப்புக் குழு, பலன் பெறுவோருடைய சமூகப் பின்னணியை உறுதிப்படுத்தியபின் அவர்களைத் தேர்ந்தெடுத்தது, இவர்களில் பெரும்பாலானோர் 30 வயதுக்கு மேற்பட்ட, ஏழைக் குடும்பங்களிலிருந்து வருகிற பெண்கள் மற்றும் கைம்பெண்கள்.

## பயிற்சி வகுப்பு

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு சங்கம் நான்கு நாள் பயிற்சி வகுப்பு நடத்தியது; பலன் பெறுவோருக்குப் பால் பண்ணைத் தொழில் மற்றும் நிதி அறிவு ஆகியவை கற்றுத்தரப் பட்டன; இதில், மதிப்புக் கூட்டப்பட்ட பால் பொருட்களைப் பதப்படுத்துதல், அவற்றை நேரடியாக அல்லது ஆவின் சமூக அமைப்பு மற்றும் தனியார் விற்பனையாளர்கள் வழியாக விற்பது போன்ற தலைப்புகள் இடம்பெற்றன என்கிறார் ராமஸ்வாமி.

இதன் மூலம் மாதம் ரூ.13,000இலிருந்து 14,000வரை சம்பாதிக்கலாம் என்று மதிப்பிடுகிறார் இவர். கால்நடைகளைக் கவனித்துக் கொள்வதற்காக அந்தப் பெண் ஒரு நாளைக்கு வெறும் மூன்று மணிநேரம் முதலீடு செய்தால் போதும் என்றும் தொடர்ந்து கூறுகிறார்.

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்னால், இந்தச் சங்கம் ராசிபுரம் வட்டத்துக்கு அருகிலுள்ள 7–8 கிராமங்களில் வாழும் 150 ஏழைப் பெண்களுக்கு ஆடுகளைச் சுழற்சி முறையில் நன்கொடையாக வழங்கியது, இதற்கான பணம் உறுப்பினர்களுடைய பங்களிப்புகளின் வழியாகப் பெறப்பட்டது. பல்கலைக் கழக அலுவலர்களுடைய ஒரு பாராட்டு அறிக்கையைத் தொடர்ந்து, அரசாங்கம் தன்னுடைய சொந்த நிதியுடன் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டது.

எங்கள் சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டில், எங்களுடைய முதல் பன்னாட்டு நல்கையான காமதேனுத் திட்டம் செயல்படுத்தப்பட்டதை எண்ணி நாங்கள் இருமடங்கு மகிழ்ச்சியடைகிறோம் என்கிறார் கதிரேசன்.

பலன் பெறுவோர் தேர்ந்தெடுக்கப் படும் முறை, அவர்களுடைய பயிற்சி மற்றும் வருவாய்ச் சாத்தியம் போன்ற பல அம்சங்களை உறுதி செய்த பிறகுதான் TRF இந்தப் பன்னாட்டு நல்கையை அனுமதித்தது. இந்தப் பகுதியில் இது ஒரு முன்னோடித் திட்டமாகும்'' என்கிறார் IPDG A K நடேசன். திட்டத்துக்கு அனுமதி பெற 12 மாதங்களாகின, ஏனெனில், தொலைநோக்கில் அதன் நீடித்திருத் தலைப்பற்றித் தொடக்கத்தில் ஐயங்கள் இருந்தன.

## குறிப்பிடக்கூடிய திட்டங்கள்

2005யிலிருந்து, இந்தச் சங்கம் 117 இலவச இதய அறுவைச் சிகிச்சைகளுக்கு வழி செய்துள்ளது. இந்தச் சங்கத்தின் உறுப்பினர் S பாலாஜி இதற்காகத் தனியார் மருத்துவ மனைகளுடன் கூட்டணி அமைத்துள்ளார்.

இன்னொரு முன்னெடுப்பில், புனித இதயம் HS பள்ளியில் இந்தச் சங்கம் பெண்களுக்காக ஒரு கழிப்பறையைக் கட்டும், ஒரு கணினி ஆய்வகம், RO நீர்த் தூய்மைப் படுத்தியை அமைக்கும், மேசைகள், இருக்கைகளை, அவற்றுடன் பிற வசதிகளை வழங்கும்.

இதற்கான நிதி, ரூ.25 லட்சம் மதிப்புள்ள ஒரு GG வழியாகக் கிடைக்கும், இது இப்போது அங்கீகரிக்கப்படும் செயல் முறையில் உள்ளது என்கிறார் கதிரேசன்.

DG K S வெங்கடேசன், PDG A K நடேசன், ARRFCகள் S வாசு, கோபாலகிருஷ்ணன், RID 3000, DRFC K பாபு, கால்நடை மருத்துவக் கல்லூரிக் கல்வித் தலைவர் Dr B மோகன் மற்றும் கால்நடை வளர்ப்புப் பிராந்திய இணை இயக்குநர் Dr V P பொன்னுவேல் ஆகியோர், கால்நடைகளைப் பலன் பெறுவோருக்கு வழங்குவதைக் குறிக்கும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.■

## இது எங்கள் செயல் திட்டம்

# நம் முக்கியத்துவம்: நாம் பங்கேற்பாளர் பங்கெடுத்தலை மேம்படுத்துகிறோம்

Rotary

**நம் பங்கேற்பாளர்களை முதன்மையாகக் கருதுகிறோம்.**
ரோட்டரி பங்கேற்பாளர்கள் எல்லாரும் (நம் உறுப்பினர்கள், ரோட்டரி செயல்பாடுகளின் வழியாக இணைகிற மற்றவர்கள் அனைவரும்) தங்களுடைய அனுபவத்தின்மூலம் பங்கேற்றதாகவும் முழு நிறைவு அடைந்ததாகவும் உணரவேண்டும், அவர்கள் நம்முடன் ஒரே ஒரு நாள் இருந்தாலும் சரி, பல பத்தாண்டுகள் இருந்தாலும் சரி. ஆனால், இது எப்போதும் நடப்பதில்லை என்று நமக்குத் தெரியும். நாம் செயல்படவேண்டிய நேரம் இது.

நம் பங்கேற்பாளர்கள் ரோட்டரியில் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று அவர்களைக் கேட்போம், அதன்படி, மதிப்பை வழங்கும் வாய்ப்புகளை வழங்குவோம். நாம் இப்படிச் செய்தால்தான் மக்கள் தொடர்ந்து பங்களிப்பார்கள், மேலும் அனுபவங்களுக்காகத் திரும்பத் திரும்ப நம்மிடம் வருவார்கள்.

**நாம் என்ன செய்யப்போகிறோம்?**

பங்கேற்பை அளவிடவும், சங்கங்களின் மேம்பாட்டுக்கு ஊக்கமளிக்கவும் புதிய வழிகளை உருவாக்குவோம்

கூடுதலான மற்றும் மேம்பட்ட மதிப்பை வழங்கும் புதிய தயாரிப்புகள் மற்றும் வழங்கல்களை உருவாக்குவோம்

டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல் போன்ற பிற அமைப்புகளுடன் பணியாற்றுவதன்மூலம் தலைமைப்பண்புத் திறன்களை வளர்ப்போம்

புதிய தனிநபர் மற்றும் தொழில்முறைப் பங்கேற்பு வாய்ப்புகளை வழங்குவோம்

### உங்கள் சங்கம் என்ன செய்யலாம்?

**தேடுங்கள்**
ரோட்டரி பங்கேற்பாளர்கள் மற்றும் உங்கள் சமூகத்திலிருந்து கருத்துகளை நாடலாம்

**நடத்தை**
சங்கத்துக்கான நலப் பரிசோதனை ஒன்றை நடத்தலாம், இடைவெளிகள் அல்லது பிரச்சனைகளைச் சரிசெய்யலாம்

**தத்தெடுக்க**
பங்கேற்பாளர்களை மையமாகக் கொண்ட ஓர் அணுகுமுறையைப் பின்பற்றலாம்


**கண்டுபிடி**
சங்கச்செயல்பாடுகள், சேவைத் திட்டங்களில் அனைவரையும் சேர்ப்பதற்கான புதிய வழிகளைக் கண்டறியலாம்

## மேலும் அறிய வேண்டுமா?
முழு செயல்திட்டத்தை rotary.org/actionplanல் படிக்கவும்


15-16-17 JANUARY (4pm to 8pm)
Rotary
THE ODYSSEY
A VIRTUAL JOURNEY
ROTARY INSTITUTE 20-21
ZONES 4, 5, 6, 7
RIPE Shekhar Mehta
RI President Elect
RID Kamal Sanghvi
Convenor
PDG Sanjay Khemka
Chairman
PDG John Daniel
Secretary
RIPN Jennifer Jones
RID Bharat Pandya
PRIP K R Ravindran
Chair, TRF
Kumar Mangalam Birla
Chair Aditya Birla Group
Dr. Yasmin Ali Haque
UNICEF Country Representative
Amitabh Kant
Chief Executive Officer – NITI Aayog of India
Nandan Nilekani
Non-Executive Chairman of Infosys
Soumya Swaminathan
WHO, Chief Scientist
Nitin Nohria
Dean, Harvard Business School
Shashi Tharoor
MP
Vijay Advani
Executive Chair, Nuveen
Gaur Gopaldasji
Motivational Speaker & Spritual Leader
Vandana Shiva
Scholar
Sandeep Mathrani
CEO, WeWork
Sonu Sood
Actor
REGISTER AT : WWW.ROTARYINSTITUTE2020.ORG
OPEN FOR ALL THE ROTARIANS ON FIRST COME FIRST SERVE BASIS




Habil Khorakiwala
*Founder Chair of Wockhardt Ltd*



Pankaj Patel
*Chairman and Managing Director - Zydus Cadila Limited*



Dr Prathap C Reddy
*Founder Chair, Apollo Group of Hospitals*



Ajit Ranade
*President & Chief Economist- Aditya Birla Group*



Dr Randeep Guleira
*Director -AIIMS, New Delhi*



Kiran Mazumdar Shaw
*Chairperson, Biocon*



Nasir Shaikh
*Atos Head of Human Resources: India*



Philippe Mareine
*Chief Digital & Transformation Officer, Head of CSR at Atos, France*



Ashok Vaswani
*CEO Barclays Bank*




Anish Sarkar
*CEO, Sodexo BRS India*




Varun Sridhar
*CEO, Paytm*



Bhupesh Daheria
*CEO, Aegis School of Data Science*



Vallabh Bhansali
*Thought Leader & Investment Banker*



Ayaz Memon
*Consulting Editor and Columnist*



Rahul Dravid
*Former Captain, Indian National Cricket Team*



Arthur Mattli
*Swiss Ambassador*



Judge Silvia Fernandis
*Chair, Intl Criminal Law*



Liberata Mulamula
*Former Ambassador of Tanzania to USA and currently Secretary , Ministry of Foreign Affairs*



Riddhima Pandey
*Climate Change Activist*




PRID Bryn Styles
*Aide to President-Elect Rtn Shekhar Mehta*



RID Peter Kyle
*RI Director*



Trustee Larry Lunsford
*Chair – Rotary Peace Centres*



Trustee Gulam Vahanvaty



RIDE Mahesh Kotbagi



RIDE A S Venkatesh

**HELPLINE DETAILS: SNEHLATA, CONTACT NO: +91 8521613250,**

**EMAIL ID: INFO.INSTITUTE2020@GMAIL.COM**

# ஆப்கானிஸ்தான்: பதிலைவிட கேள்விகள்தான் அதிகம்!

ரஷீதா பகத்

2005 ஆம் ஆண்டில் நான் ஹிந்து குழுமத்தின் "பிஸினஸ் லைன்" பத்திரிகைக்காக பணிபுரிந்த போது போரினால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானுக்கு பயணம் செய்து செய்தி அளிக்க வாய்ப்பு கிடைத்தது. அப்போது ஆப்கானிஸ்தான் தாலிபான்களின் கொடூர இருண்ட ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. ஆப்கானிஸ்தானை மறுநிர்மாணம் செய்யும் பணிகளும் நடைபெற்று வந்தது. ஆனால், பல ஆண்டுகளாக கலவரம், வன்முறை, மோதல், சண்டை உள்ளிட்டவை காரணமாக அந்த தேசமே உருக்குலைந்து போனதுதான் நெஞ்சை உருக்கியது. இதனால் பெண்கள்தான் அதிக பாதிப்புக்குள்ளானார்கள். பாலின பிரச்னைகளில் அதிக அக்கறை கொண்டிருந்ததால், தாலிபான் ஆட்சிக் காலத்திலும், அதற்கு முந்தைய காலத்திலும் பெண்கள் அனுபவித்த சித்ரவதை மற்றும் கொடுமைகளை கண்டறிவதில்தான் எனது முதல் கவனம் இருந்தது.

காபூலில் உள்ள பிரெஞ்சு தூதரகத்தில் தங்களுக்கு நல்ல நண்பர்கள் இருப்பதாக உமாவும், நாராயணனும் கூறி, உள்ளூர் வழிகாட்டிகளாக இருப்பதாக உறுதியளித்ததன் பேரில் இந்தப் பயணம் முடிவானது. இதையடுத்து நான், உமா, நாராயணன்



ஆப்கான் குழந்தைகளுடன் ஒரு பேட்டி.

மற்றும் அவரது நண்பரும் புகைப்பட கலைஞருமான மாயா ஜெயபால் ஆகியோர் தில்லியிலிருந்து விமானம் மூலம் காபூலுக்கு புறப்பட்டோம். அங்குள்ள இன்டர் கான்டினென்டல் ஹோட்டலில் தங்கினோம். இந்த ஹோட்டல் 1990-களில் உள்நாட்டுப் போரின்போது பல்வேறு தீவிரவாத குழுக்களுக்கிடையே நடைபெற்ற சண்டையில் சேதமடைந்தது. ஆனாலும் அவற்றையெல்லாம் கடந்து செயல்பட்டு வந்தது. அது பாதுகாப்பான, தங்குவதற்கு ஏற்ற ஹோட்டல் என்பதால் அதில் தங்கினோம்.

9/11 தாக்குதல் சம்பவத்துக்குப் பிறகும், ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க படையெடுப்பின் போதும் சர்வதேச ஊடகவியலாளர்கள் இங்குதான் தங்கியிருந்தனர். காபூல் விமான நிலையத்திலிருந்து ஹோட்டலுக்கு செல்லும் வழியில் என் மனம் உடைந்துபோனது. ஹமீத் கர்சாய் அரசாங்கத்தைவிட ஐ.நா. அமைப்புகள்தான் நாட்டை நடத்திச் செல்வதைப்போல் தோன்றியது.



ஆப்கானிஸ்தானில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின் கல்வி நிலைதான் எனது கட்டுரைக்கு முதுகெலும்பாக இருக்கும் என் மனதுக்குப்பட்டது. மிகுந்த ஆவலுடன் எனது தோழர்களுடன் நான் காபூலின் பிரசித்திபெற்ற வர்த்தக பகுதியான சிக்கன் தெருவுக்குச் சென்றேன். அங்குள்ள உணவகங்கள் மற்றும் தெருவோரக் கடைகளிலிருந்து அசைவ உணவுகளின் மணம் மூக்கை துளைத்தது. ஆனால், என்னுடன் வந்த நண்பர்கள் சைவ உணவு சாப்பிடுபவர்கள் என்பதால் நாங்கள் காரை இடைநிறுத்தவில்லை. அந்த தெருவில் நகைகள், ஆபரணங்கள், தோல் பொருட்கள், ஆயத்த ஆடைகள், கலைப்பொருட்கள் எல்லாவற்றுக்கும் மேலாக கைகளாலும், இயந்திரங்கள் மூலமும் தயாரிக்கப்பட்ட தரை விரிப்புகள். விலையுயர்ந்த கற்கள், காதணிகள், நெக்லேஸ்கள், பிரேஸ்லெட்ஸ் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் கிடைக்கும்.

இயற்கையாகவே இந்த தெரு வெளிநாட்டினரை கவர்ந்திழுக்கும் வகையில் இருந்தது. சினிமாவில் அல்லது செய்திகளில் படித்தது பார்த்தது போலவே இங்கு அழகுமிளிர்ந்த பெண்களை வண்ண வண்ண உடைகளில் காணமுடியும். ஆனால், இப்போது அவை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. பெண்கள் வெளிர் நீலநிற உடை களை அணிந்து நிழல்கள் போல சென்றனர்.

காபூலில் பெண்கள், தாலிபானின் நீண்ட ஆட்சிக்குப் பிறகும் நீலநிற பர்கா அணிந்து தலை முதல் கால் வரை முழுமையாக மூடியபடி செல்கின்றனர். ஒரு காலத்தில் இந்த பெண்கள் விதவிதமான டிசைன்கள் கொண்ட ஆடைகளை அணிந்துவிட்டு இப்போது நீலநிற புர்காவுக்குள் தங்கள் உடலை மறைந்துக் கொண்டது கண்டு நான் மனம் உடைந்துபோனேன். ஐரோப்பாவின் அழகுசாதனப் பொருள்கள் விற்பனையாளர்கள் பாரீஸ், லண்டன், நியூயார்க்கில் உள்ளவர்களுடன் இணைந்து தங்கள் தயாரிப்புகளை காபூலுக்கு வந்து இங்குள்ள இளம் பெண்களை முன்னிறுத்தித்தான் விளம்பரம் செய்வார்களாம். நீலநிற புர்கா அணிந்து சென்ற பெண்கள் இருவரிடம் உரையாட நான் முற்பட்டேன். ஆனால், அவர்கள் அந்நியர்களுடன் பேசுவதற்கு பயந்து வேகமாக சென்றுவிட்டனர்.

காபூலை சுற்றி வருகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தூதரகங்கள், பள்ளிகள், மக்கள் சமூகத்தினர் மற்றும் பெண் ஆர்வலர் களை சந்திக்க முயற்சித்தோம். பெண்களுக்கான தோட்டத்தை (பாகேஸனானாவை) புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நிஷான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவரிடம் நான் அறிமுகம் செய்யப்பட்டேன். ஷாவின் ஆட்சிக்காலத்தில் பெண்கள் தங்களுக்கு என பிரத்யேகமான மணம் வீசும் தோட்டத்தை வைத்திருந்தனர். அங்கு அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து ஓய்வெடுத்துக்கொள்வார்கள். ஆனால், ரஷிய படையெடுப்புப் பின்னர், குறிப்பாக 1995 முதலான தாலிபான் ஆட்சியில் பெண்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்ததால் இந்த தோட்டங்கள் களையிளந்து புதர்கள் மண்டி, பூச்சிகள் நிறைந்த தரிசு நிலமாக மாறிவிட்டது. ஆகா கான் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் முயற்சியால் இவை இப்போது புதுப்பிக்கப்பட்டு சில மாதங்களுக்கு முன்னர் பெண்களுக்காக திறந்துவிடப்பட்டது. ஆனால், பெண்கள் பெரும்பாலும் வெள்ளிக்கிழமை மதியம் மட்டுமே இங்கு வருகிறார்கள்.

மறுநாள் வெள்ளிக்கிழமை

என்பதால் நான் அன்று பாகேஸனானாவுக்குச் சென்றேன். என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை. அங்கே இளம் பெண்கள், நடுத்தர வயது பெண்கள் என 200-க்கும் மேலானவர்கள் புர்கா அணியாமல் தங்கள் அழகை வெளிப்படுத்தியபடி சிரித்துப் பேசிக் கொண் டிருந்தனர். பெண்கள் வட்டமாக உட்கார்ந்து கொண்டு பிக்னிக் வந்தவர்கள் போல் நண்பர்களுடன் அரட்டை அடித்து, கூடைகளிலிருந்து உணவுகளை எடுத்து சாப் பிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் குழந்தைகளோ அருகில் உள்ள பூங்காக் களில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இங்கு கூடும் பெண்களும் குழந்தைகளும் தங்கள் தலை முடியை அலங்கரித்துக் கொண் டிருந்தனர். தாலிபான் ஆட்சி முடிந்து மூன்று ஆண்டுகள் ஆனதை அவர்கள் நினைவு படுத்தினர். மதத்தின் பெயரால் தாலிபான்கள் பல்லாயிரக்கணக்காண பெண்களின் வாழ்க்கையை நாசமாக்கிவிட்டனர். அவர்களை கௌரவமாகவும் நடத்தவில்லை. புர்கா அணியுமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். பலர் தங்கள் வேலையை விட்டு வெளியேறினர். பள்ளி, கல்லூரிகளில் படித்து வந்த பெண்களும் அதை கைவிட்டு வீட்டிலேயே முடங்கியிருந்தனர். ஆண்களின் துணை இல்லாமல் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வரமுடியவில்லை. பெண்கள் குடும்பக்கட்டுப் பாட்டு முறைகளையும் பின்பற்ற முடியவில்லை.

இதெல்லாம் இப்போது வரலாறாகிவிட்டது. சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பு மற்றும் முஜாஹிதீன்களின் ஆட்சியின் கீழ் ஏறக்குறைய 15 ஆண்டுகால மோதல் மற்றும் வன்முறைகளை சகித்துக்கொண்டிருந்த பல படித்த தகுதிவாய்ந்த பெண்கள், தாலிபான்களின் 6 ஆண்டு ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மோசமான சட்டங்களை சகித்துக்கொள்ள முடியாமல் வெளிநாடு சென்று விட்டனர்.

கடந்த பத்து ஆண்டு களுக்கு மேலாக ஜெர்மனியில் வாழ்ந்து வரும், டாக்டர்களாகப் பணிபுரிந்து வரும் 3 ஆப்கான் நாட்டு பெண்கள்,



ரஷீதா பகத்

**மேலே:** *தாலிபன் ஆப்கான் பெண்களின் சுயநம்பிக்கையை அழித்து விட்டனர். அவர்கள் அந்நியர்களிடம் பேசவே தயங்குகின்றனர்.*



ரஷீதா பகத்

**இடது:** *காபூலின் லிசி எஸ்டெக்லால் பள்ளி குழந்தைகள்.*

இங்குள்ள பாகே ஸனானாவுக்கு சிறப்பு விருந்தினர்களாக வந்திருந்தனர் என்றார் உற்சாகத்துடன் நிஷான். தங்கள் சொந்த நாட்டில் இப்போது நிலைமை எப்படி யிருக்கிறது என்பதை பார்ப் பதற்காகவே அவர்கள் இங்கு வந்துள்ளனர். தோட்டத்துக்கு வருவதற்கு முன் அவர்கள் காபூலில் உள்ள இடிந்துபோன, குறைந்தபட்ச மருத்துவ வசதியைக்கூட அளிக்க முடியாத நிலையில் இருந்த மருத்துவமனைகளைப் பார்வையிட்டனர். மோசமான கட்டடங்கள், போதிய அடிப்படை வசதி யில்லாமல், காலாவதியான மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் பற்றாக்குறை இவற்றுக்கிடையில் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த மருத்துவர்கள் பலரது உயிரை காப்பாற்றும் வகையில் பணிபுரிந்து வருவதைப் பார்த்தனர்.

தோட்டத்தில் ஏராளமான பெண்கள் கூடியிருப்பதை அவர்கள் பார்த்தனர். பெண்கள் குழந்தைகள் ஒருவருக்கொருவர் பேசிகொண்டும், சிரித்துக் கொண்டும், சாப்பிட்டு கொண்டும், பாடிக் கொண்டும் இருந்ததை பார்த்த அவர்கள் ஒரு முக்கிய முடிவுக்கு வந்தனர். இனி நாங்கள் ஆப்கானிஸ்தானை விட்டுச் செல்ல மாட்டோம். ஆப்கானிஸ்தானிற்கு நங்கள் தேவை என்று சொல்லியபடியே தங்கள் பையிலிருந்த ஜெர்மன் பாஸ்போர்ட்டை எடுத்து

**சினிமாவில் அல்லது செய்திகளில் படித்தது பார்த்தது போலவே இங்கு அழகுமிளிர்ந்த பெண்களை வண்ண வண்ண உடைகளில் காணமுடியும். ஆனால், இப்போது அவை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.**



மாயா ஜெயபால்

சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டனர்.

நான் ஆப்கானிஸ்தான் சென்று வந்த பிறகு தாலிபான்கள் மீண்டும் குழுவாக சேர்ந்து கொண்டு வன்முறையில் இறங்கி, குழப்பத்தை விளைவித்தனர். அது தொடர்கிறது. அன்று தைரியமாக முடிவெடுத்த பெண் டாக்டர்கள் இப்போது தங்கள் செயலுக்கு வருந்துவார்களோ என நான் நினைத்ததுண்டு. எது எப்படியிருந்தாலும் ஆப்கானிஸ்தான் இன்று ஏராளமான சவால்களை எதிர்கொள்ளும் நிலையில் இருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் இன்னும் ஸ்திரமற்ற நிலைமையே நீடிப்பதாக ஆப்கானிஸ்தானுக்கான ஸ்வீடன் நாட்டுக் குழுவின் திட்ட இயக்குநர் கரோல் மார்டின் கூறுகிறார். இது சோவியத் ஆக் கிரமிப்புக்கு எதிராக ஆப்கானிய மக்களை ஆதரிப்பதற்காக ஒரு மனிதாபிமான முறையில் ஆதரவு தெரிவிக்கும் விதத்தில் 1980ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் உள்ள 21 மாகாணங்களில் ஆண்டுதோறும் 22



மில்லியன் டாலர் பட்ஜெட்டில் செயல்பட்டு வரும் சர்வதேச உதவி அமைப்பாகும் இது. கடந்த 20 ஆண்டுகளில் நாட்டை நிர்வகிப்பதில் முக்கிய பங்கை இந்த அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது என்றுகூட சொல்லலாம். என்றார் கரோல் மார்டின்.

ஆப்கானிஸ்தானை புனரமைக்க நீண்டகாலம் ஆகலாம். ஏனெனில் அந்த நாடு முற்றிலும் அழிந்து விட்டது. அங்கு உண்மையான சட்டத்தை உருவாக்கும் ஆட்சி இல்லை. இதுதான் ஆப்கன் மக்களை விரக்தி அடையச் செய்துள்ளது.

உலக வங்கியின் ஆப்கன் நாட்டுத் தலைவராக அப்போது இருந்த ஜீன் மஸ்ருல்லே, அங்கு அமைதி திரும்ப வழியில்லை என்று தெளிவாகக் கூறினார். ஆப்கானிஸ்தானில் ஆள் கடத்தல் அபாயம் இருப்பதால் அங்குள்ள வெளிநாட்டினர் எல்லோரும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கின்றனர். ஒரு முறை உலக வங்கியைச் சேர்ந்த இரண்டு ஆண்கள், தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே வழிப்பறிக்கு ஆளானார்கள். மேலைநாடு களைச் சேர்ந்தவர்கள் நிச்சயம் ஆபாசப் படங்களை பார்ப்பவர்களாக இருப்பார்கள். எனவே உங்களிடம் உள்ள ஆபாசப் படங்களை கொடுங்கள் என்று பஷ்டூன்கள் துப்பாக்கி முனையில் மிரட்டியுள்ளனர். தங்களிடம் ஆபாச விடியோக்கள் எதுவும் இல்லை என்று நம்பவைக்க அவர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள் என்றார் ஜீன் மஸ்ருல்லே. ஆனால், ஆப்கானிஸ்தானில் பதவியில் இருந்த மஸ்ருல்லே, ஆப்கன் அரசும், சர்வதேச சமூகமும் மறுசீரமைப்புப் பணிகளை துரிதப்படுத்தாவிட்டால் மக்கள் பொறுமை இழந்து விடுவார்கள் என்று குறிப்பிட்டார். சர்வதேச சமூகம் ஏன் முன்கூட்டியே ஆப்கன் மீது கவனம் செலுத்தவில்லை என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. சோவியத் ஆக்கிரமிப்பு மற்றும் தாலிபான்கள் ஆதிக்கம் வரும் வரை ஏன் நாம் காத்திருந்தோம்? ஆப்கானிஸ்தான் மீது சர்வேதச சமூகம் கவனம் செலுத்துவதற்கு 9/11 சம்பவம் வரை காத்திருந்தது ஆப்கானிஸ் தானியர்களிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. 9/11 சம்பவம் எங்களுக்கு லாட்டரி சீட்டு மாதிரி. அதை நாங்கள் விட்டுத் தரமாட்டோம் என்று ஆப்கானிஸ்தானியர் ஒருவர் என்னிடம் கூறினார். இதைக் கேட்டு நான் வருத்தமடைந்தேன். ஆனால், அவர்களின் மனக்கசப்பை நான் புரிந்துகொண்டேன்.

என்னைப் பொருத்த வரை ஆப்கானிஸ்தானுக்கான 10 நாள் பயணம் மனதைத் தொடுவதோடு அல்லாமல் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள உதவியது. கடந்த 25 ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானில் படித்து கல்வியில் சிறப்பிடத்தை பெற்றவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று விட்டனர். மூன்றாண்டு தாலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு அவர்கள் ஒரு சிறு



ரஷீதா பகத்

பகுதியினர், அதாவது மேலே குறிப்பிட்ட ஆப்கனைச் சேர்ந்த ஜெர்மன் டாக்டர்கள் போன்றவர்கள் நாடு திரும்பத் தொடங்கினர். ஆனால், ஐரோப்பாவில் தாங்கள் சம்பாதித்த பணத்தின் ஒரு சிறிய பகுதியைத்தான் அவர்களால் இங்கு சம்பாதிக்க முடிந்தது. ஆப்கானிஸ்தானுக்கு திரும்பியவர்களில் பிரான்ஸிலிருந்து வந்த மஜீத் நபிஜதாவாவும் ஒருவர். பிரான்ஸில் மாதம் ஒன்றுக்கு 2,200 யூரோக்களை அவர் சம்பாதித்தார். ஆனால், இங்கு காபூல் நகரின் மையப்பகுதியில் லிஸிஎஸ்டேக்லால் உயர்நிலைப் பள்ளியில் பணி புரிகிறார். இந்தப் பள்ளி பல ஆண்டுகள் நடந்த போரினால் பாதிக்கப் பட்டது. இப்போது புனரமைக்கப்பட்டு பிரெஞ்சு நாட்டவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அவரது தற்போதைய சம்பளமும் 60 டாலர்கள் தான். அவர் தங்கியிருக்கும் இடத்துக்கு மாத வாடகை 250 டாலர். அதற்கு ஒருவருட வாடகையை அட்வான்ஸாக கொடுக்க வேண்டும். பிரான்ஸில் 22 ஆண்டுக்காலம் தங்கியிருந்தபோது சேமித்து வைத்திருந்ததை இப்போது செலவிடுகிறார். வேறு ஒரு பள்ளி ஆசிரியரை நான் சந்தித்தேன். அவர் வீட்டு வாடகை கொடுக்கவும் உணவுக்காகவும் ஆசிரியர் வேலை தவிர டாக்ஸி டிரைவராகவும் பணிபுரிய வேண்டியிருந்தது.

ஆசிரியர்களின் அவல நிலை இப்படியென்றால், மாணவர்கள் கல்வி கற்க முடியாமல் வருடங்கள் வீணாவதைக் கேட்டால் நமக்கு அழுகையே வந்துவிடும். குறிப்பாக தாலிபான் ஆட்சியில் பெண்கள் பள்ளிப்படிப்பை கைவிடும்படி கட்டாயப் படுத்தப்பட்டார்கள். நாட்டின் பெரும்பாலான பள்ளிகள் நீண்டகால வன்முறையால் அழிக்கப்பட்டன. ஆப்கானிஸ்தானின் உள்பகுதிகளில் வகுப்புகள் பாழடைந்த கட்டிடங்களில் நடந்தது. வகுப்பறைகளுக்கு கதவுகளோ, ஜன்னல்களோ இருக்காது. சில இடங்களில் பள்ளிக்கு மேற்கூரையே இருக்காது. கடும் குளிர் அல்லது கடும் வெயில் காலங்களில் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். தாலிபான்கள் தங்களின் ஆறு ஆண்டு ஆட்சியில் பெண்கள் கல்வி கற்பதற்கு தடை விதித்ததுடன் பெண்களுக்கான பள்ளிகளையும் மூடிவிட்டனர்.



டீ கடையில்
ஒரு ஆப்கான் இளைஞன்.

மாயா ஜெயபால்

உயர்நிலைப் பள்ளிகளின் இயக்குநர் வாலி முகமது என்பவரை நாங்கள் சந்தித்துப் பேசினோம். அப்போது அவர், தாலிபான்கள் எங்களது கல்வி முறையையே அழித்து விட்டார்கள். தகுதியான ஆசிரியர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் கட்டாயம் ஏற்பட்டது என்றார். பள்ளி நூலகத்தில் நேர்த்தியான உடையணிந்த, பிரகாசமான கண்களை உடைய இளம் பெண்களைப் பார்த்தது மனதுக்கு ஆறுதலாக இருந்தது. ஆனால், இந்த இஸ்லாமிய நாட்டில் ஆண்கள்-பெண்கள் சேர்ந்து பள்ளியில் படிப்பது அரிதாகவே இருந்தது. ஆண்களும் பெண்களுமாக 5,000 பேர் இலவச கல்வி பயில்கின்றனர். மூன்றாவது வகுப்பு முடித்தவுடன் பெண் குழந்தைகள் இனி பெண்களுக்கான பிரத்யேக பள்ளியில்தான் படிக்க முடியும்.

பெண் குழந்தைகள் பள்ளிக்குத் திரும்பி விட்டார்கள். ஆனால், பதின்ம வயதில் உள்ள பெண்கள் மீண்டும் பள்ளிக்குச் செல்ல தயங்குகிறார்கள். பள்ளிக்கு வந்தால் தங்களைவிட 6 வயது குறைந்த பெண்களுடன் சேர்ந்து படிக்க வேண்டுமே என்பது தான் இதற்குக் காரணம். இத்தகைய பெண்களை மீண்டும் பிரதான கல்வியில் சேர்ப்பதற்கு ஆப்கன் நிர்வாகம் என்ன செய்யப்போகிறது என்ற கேள்வியுடனேயே நான் அங்கிருந்து விடைபெற்றேன். அவர் களுக்காக ஏதாவது சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுமா? இப்படி ஆப்கானிஸ்தானில் பதில்களை விட கேள்விகள் தான் நிறைந்திருந்தன.

(தொடரும்)

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்


# மாண்ட்வி சங்கத்தின் எழுச்சிப் பயணம்!

கிரன் ஜெஹ்ரா

குஜராத் மாநிலம், கட்ச் பகுதியில் உள்ள சிறிய கடலோர நகரத்தில் நிலையான திட்டங்களைச் செயல்படுத்த ரோட்டரி அறக்கட்டளையிழ் நிதி ஆதாரங்களை எப்படி பயன்படுத்தினோம் என்பதை ரோட்டரி மாவட்டம் 3054-க்கு உட்பட்ட மாண்ட்வி ரோட்டரி சங்கம் தனது 41-வது சாசன தினத்தில் நினைவலைகளை பகிர்ந்துகொண்டது.

எங்கள் திட்டங்களின் பயனாளிகளுடன் தொடர்புகொள்வதன் மூலம் எங்கள் சமூகத்தில் நாங்கள் ஏற்படுத்திய தாக்கத்தை காண விரும்பினோம் என்றார் சாசன தின கொண்டாட்டங்களின் தலைவர் தர்ஷனா ஷா.

எங்களது முக்கிய திட்டங்களில் ஒன்று மாண்ட்வியிவிலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ள கோத்ரா கிராமத்தில் வீடற்ற ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து ரோட்டரி காலனியை உருவாக்கியதே இதற்கு சான்று. 2000-ஆம் ஆண்டில் ரோட்டரி அறக்கட்டளை மற்றும் பத்து ஜப்பானிய சங்கங்கள் உதவியுடன் 17 வீடுகளை நாங்கள் கட்டி வீடற்ற ஏழைகளிடம் ஒப்படைத்தோம். இந்த வீடுகளைப் பெற்ற சில பயனாளிகள் இறந்துவிட்டனர். அவர்களின் குடும்பத்தினர் இன்னும் அந்த வீடுகளில் வசித்துவந்தாலும் அவர்களுடன் பேசுவதற்கு நான் தயங்கினேன் என்கிறார் தர்ஷனா. ஆனாலும் நான் அலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது, எதிர்முனையிலிருந்து அவர்கள் மிகுந்த மரியாதையுடனும் நன்றிப்பெருக்குடனும் என்னை வரவேற்றனர். எனது தந்தை பான் விற்பனையாளர். சொந்தமாக வீடு அமையும் என்று அவர் கனவில்கூட நினைத்ததில்லை. இப்போது எங்களுக்கு சொந்தவீடு உள்ளது.



*2000ல் கட்டப்பட்ட ஒரு ரோட்டரி வீடு.*

அதற்கு மாண்ட்வி ரோட்டரி சங்கத்துக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் என்கிறார் 54 வயதான ஹஸீனா. இவரது தந்தை முகமது அலி சுலைமான், குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டத்தின் பயனாளிகளில் ஒருவர். இந்த திட்டத்தின் தலைவர் சந்தீப் ஷாவுடன் தொடர்புகொண்டு தனது தந்தை பெயரை இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதை நினைவுகூர்ந்தார் ஹஸீனா.

சர்வதேச அளவிலான மானிய உதவியான ரூ.7.36 லட்சத்தில் 15 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டது என்றாலும் நாங்கள் 17 வீடுகளைக் கட்டினோம். 2001 இல் ஏற்பட்ட பூகம்பத்திலும் இவை தாங்கி நின்றன என்கிறார் திட்ட செயற்பாட்டாளர்களில் ஒருவரான வினய் டோப்ரானி. 20 அடிக்கு 45 அடி என்ற கணக்கில் கட்டப்பட்ட இந்த வீடுகள் இரண்டு அறைகள், ஒரு சமையலறை, ஒரு தண்ணீர் தொட்டி, மேற்கூரை மற்றும் கிராமப் பஞ்சாயத்து திட்டத்தின்கீழ் குடிநீர் குழாய் இணைப்பு என்ற அளவில் இருந்தது. கண்ணியமான வாழ்க்கை நடத்த இது போதுமானது. இது எங்கள் அடுத்த தலைமுறையினருக்கும் கிடைத்த ஆசிர்வாதம் என்கிறார் ஹஸீனா.

### உதவித்தொகை

டாக்டர் ஜெய் மேத்தா, சங்கத்தின் முன்னாள் உறுப்பினர் விமலா ரமேஷ் ஷா பெயரில் நிறுவப்பட்ட உதவித்தொகை பெற்றவர். இவர் மாண்ட்வியில் உள்ள டிரஸ்ட் மருத்துவமனை மற்றும் பாரதிய மருத்துவமனையில் மருத்துவத் தொழில்புரிந்து வருகிறார். கட்ச் பிராந்தியத்தில் நடைபெற்ற 300-க்கும் மேலான மருத்துவ முகாம்களில் பங்கேற்றிருக்கிறார். 2005ம் ஆண்டு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்ததை அவர் நினைவுகூர்ந்தார். 12ம் வகுப்புத் தேர்வில் 93 மதிப்பெண்கள் பெற்றது

டன் அறிவியல் பாடத்தில் நகரத்தில் முதல் இடத்தை பிடித்தேன். ஆனால், BMHS வகுப்பில் படிக்க இடம் கிடைக்குமா என்று கவலைப்பட்டேன். ஒரு துணிக்கடையில் பணிபுரிந்துவந்த எனது தந்தை, மனம் தளர்ந்துவிடாமல் கல்லூரி சேர்க்கைக்கு விண்ணப்பிக்கச் சொன்னார்.

சில நாள்களுக்குப் பிறகு கல்லூரியிலிருந்து அழைப்பு வந்தது. உள்ளூர் ரோட்டரி சங்கம் எனக்கு உதவித்தொகை அளிக்க முன்வந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டது. இதையடுத்து எனக்கு தகுதியின் அடிப்படையில் இடம் கிடைத்தது. மேலும் எனது கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணத்தை உள்ளடக்கி ரூ.5,000 உதவித்தொகையும் கிடைத்தது என்று புன்னகையுடன் தெரிவித்தார் டாக்டர் மேத்தா.

இந்த உதவித்தொகை மற்றும் மாண்ட்வி ரோட்டரி சங்க கல்வி விருது பல ஏழை மாணவர்களுக்கு பயனுள்ளதாக இருந்தது. 1981ம் ஆண்டு தொடங்கப் பட்டதிலிருந்து சங்கத்தின் உதவித் தொகை மற்றும் விருதுகள் குஜராத்தில் நடுத்தரப் பள்ளிகளைச் சேர்ந்த 350 மாணவர்களுக்கு பயன்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



*பள்ளி மாணவராக* Dr *ஜெய் மேத்தாவை* RC *மாண்ட்வி உறுப்பினர்கள் கௌரவிக்கின்றனர்.*

### புதிய முயற்சிகள்

C J மேத்தா தடுப்பூசி மையம் எங்களது மற்றுமொரு மைல்கல் திட்டமாகும். 2003ம் ஆண்டு முதல் போலியோ, ஹெபடைடிஸ் பி, அம்மை உள்ளிட்ட தடுப்பு நோய்களுக்கு எதிராக 5,000 குழந்தைகளுக்கு தடுப்பூசி கள் போடப்பட்டுள்ளன. 2001ம் ஆண்டு பூகம்பத்துக்குப் பிறகு ரோட் டரியின் குஜராத் பூகம்ப நிவாரண அறக்கட்டளை நிதி மற்றும் உள்ளூர் நன்கொடைகள் மூலம் தரம்ஸே நென்ஸே ரோட்டரி சமூகக் கூடம் கட்டப்பட்டு ஏழை பெண்களின் திருமணங்களுக்கு உதவிடுகிறது. மேலும் மாநாடுகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், சமூக நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்படுகிறது. இதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கிறது.

மாண்ட்வி நகரத்தின் மையத்தில் லட்சுமிபென் ஹன்ஸ்ராஜ் லாத்வாலாபால் உத்யன் என்னும் பெயரில் குழந்தைகள் பூங்கா நிறுவப்பட்டு 2002ம் ஆண்டிலிருந்து சங்கத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை தவிர மாணவர்களுக்கு கணினி பயிற்சி வகுப்புகள், பழங்குடியின பெண்களுக்கு வயதுவந்தோர் கல்வி, மரம் நடும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூக நலத்திட்டங்களும் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. எங்கள் சங்கம் சிறியதாக இருக்கலாம், ஆனால் நாங்கள் மற்றவர்களைவிட வித்தியாசமான முறையில் செயல்படுகிறோம் என்கிறார் தர்ஷனா.

ஷாம்ஜி கிருஷ்ண வர்மா தொடக்கப்பள்ளியில் ரூ.85,000 செலவில் கழிப்பறைகள் கட்டப்பட்டு, கைகழுவும் நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. பொது முடக்கத்தின்போது சங்கத்தின் உறுப்பினர்கள், ரோட்ராக்டர்கள் உதவியுடன் வீடற்றவர்களுக்கு உணவுப்பொட்டலங்களையும் முகக்கவசங்களையும் வழங்கினர். மேலும் சுகாதார ஊழியர்களுக்கும் காவல்துறை ஊழியர்களுக்கும் முகக்கவசம், கைகழுவும் திரவம் உள்ளிட்டற்றவற்றை வழங்கினர்.■



# ரோட்டரியின் கொரோனா நிவாரணத் திட்டங்கள்

V முத்துகுமரன்

ரோட்டரி மாவட்டம் 3240க்கு உட்பட்ட ரோட்டரி கிரீன் லேண்ட் சில்ச்சார் சங்கத்தைச் சேர்ந்த சந்தீப் வாலியா, தனது வாட்ஸ்ஆப் குழுவில் உள்ள செய்தியை கவனிக்கிறார். அதில் விஜய் சௌத்ரி என்பவர், பரீதாபாதில் உள்ள மருத்துவ மனையில் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வரும் வயதான தந்தைக்கு பிளாஸ்மா தானம் செய்பவர் தேவை என்று குறிப்பிட்டுள்ளார்.

விஜய் சௌத்ரியால் பிளாஸ்மா தானம் செய்ய விரும்புவரை அடையாளம் காண முடியாததை கவனித்த நான், உடனடியாக அவருக்கு உதவ நினைத்தேன். உடனடியாக ரோட்டரி மாவட்டம் 3011ன் பரீதாபாத் சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஜெகதீஷ் சச்தேவின் தொலைபேசி எண்ணை சங்கத்தின் வலைத்தளம் மூலம் கண்டுபிடித்து அவருடன் தொடர்பு கொண்டு பேசினேன். நோயாளி பற்றிய விவரங்களையும் விஜய் சௌத்ரியின் தொடர்பு எண்ணையும் அவருடன் பகிர்ந்து கொண்டேன். என்றார் வாலியா.

இதையடுத்து ஜெகதீஷ், சம்பந்தப் பட்டவரிடம் சௌத்ரியிடம் தொடர்பு கொள்வதற்கான அனைத்து ஏற்பாடு களையும் செய்தார். ஜெகதீஷ் மருத்துவ மனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு நோயாளியின் நிலைமையை அவ்வப்போது தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். இவையெல்லாம் ஒரு மணி நேரத்துக்குள் வரிசையாக நடைபெற்றது என்கிறார் வாலியா.

பரீதாபாத் துணை ஆணையர் ஏற்படுத்தியிருந்த பிளாஸ்மா குழுவின் உறுப்பினராக ஜெகதீஷ் இருந்ததால் உடனடியாக தனது செல்வாக்கை பயன்படுத்தி உள்ளூர் செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் பிளாஸ்மா யூனிட்டுக்கு ஏற்பாடு செய்தார். இதற்காக விஜய், ரோட்டரிக்குத்தான் நன்றிசொல்ல வேண்டும் என்றார் வாலியா. நோயாளி இப்போது வீட்டிலேயே குணமடைந்து வருவதால் பிளாஸ்மா யூனிட் அவசர தேவைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ரோட்டரி மாவட்டம் 3292க்கு உட்பட்ட பாகமதி காத்மாண்டு ரோட்டரி, திரிபுரேஸ்வர் ரோட்டரி, காத்மாண்டு மெட்ரோ ரோட்டரி, காந்திபுர் மற்றும் காத்மாண்டு டவுன்டவுன் ரோட்டரி சங்கங்கள் இணைந்து 400க்கும் மேலான முக கேடயங்கள், முகக்கவசங்கள், 20 பெட்டிகளில் கையுறைகள் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்களை லலித்பூரில் உள்ள பதான் மருத்துவ மனைக்கு நன்கொடையாக வழங்கி யுள்ளனர். முன்னாள் மாவட்ட ஆளுநர்

*இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் ரோட்டரியினர் வெண்டிலேட்டர்கள் அளித்தனர்.*



சிந்தாமணி பட்டராய், பாதுகாப்பு உபகரணங்களை பதான் மருத்துவ மனை இயக்குநர் டாக்டர் ரவி ஷாக்யாவிடம் வழங்கினார்.

### ஆரோக்யா திட்டம்

RID 3190க்கு உட்பட்ட RC பிரிகேட்ஸ், தங்களது ஆரோக்யா திட்டத்தின் கீழ் துணை மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் ஏழை மக்களுக்கு 1.1 லட்சத்துக்கும் மேலான கொவிட் நோய் எதிர்ப்பு சக்தி அளிக்கும் மருந்துப் பைகளையும், 50,000 முகக்கவசங்களையும் விநியோகம் செய்தனர். சங்கத்தின் தலைவர் அஸ்வனி கிங்கர், உறுப்பினர்கள் பிந்து செரியன் மற்றும் சாம்பமூர்த்தி ஆகியோரின் யோசனையில் பேரில் இவை வழங்கப்பட்டன.




*RC சேலம் சவுத் தலைவர் மங்கேஷ்வர் சேலம் அரசு மருத்துவமனையிற்கு சவக்கிடங்கு பைகளை அளித்தனர்.*

பாரூச் ரோட்டரி சங்கம், RID 3060 42,143 டாலர் சர்வதேச நிதியுதவி திட்டத்தின் மூலம் கைகளால் தொடாமல் கால்களை அழுத்தினால் கைகழுவும் திரவம் வெளிவரும் இயந்திரம், N 95 முகக்கவசங்கள், ஆக்ஸி மீட்டர்கள், எலெக்ட்ரானிக் தெர்மோமீட்டர்கள், முகத்தில் அணியும் பாதுகாப்பு கேடயங்கள், கைகழுவும் திரவங்கள் ஆகியவற்றை மருத்துவமனைகள், பொது சுகாதார நிலையங்கள் மற்றும் போலீஸ் நிலையங்களுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்த மெகா திட்டத்திற்காக முன்னாள் மாவட்ட ஆளுநர் அசோக் கபாடியா, மணிஷ் பொதார், சங்கத்தின் தலைவர் தால்கின் ஜமீன்தார் ஆகியோர் தங்கள் சர்வதேச கூட்டாளியான அமெரிக்காவில் உள்ள எமோரி ட்ரூயிட் ஹில்ஸ் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து செயல்பட்டுள்ளனர்.

### கொவிட் தகன மையம்

கொவிட் நோய்த் தொற்று மற்றும் அது தொடர்பான சிக்கல்களால் உயிரிழக்கும் நோயாளிகளைத் தகனம் செய்வதற்காக தாற்காலிக தகன மையத்தை அங்கலேஷ்வர் ரோட்டரி மையம் ஏற்படுத்தியுள்ளது. பாரூச், அங்கலேஷ்வர் மற்றும் போர்பதா பகுதியில் உள்ள தகன மையங்களுக்கு அருகில் வசிக்கும் உள்ளூர் மக்கள் கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களுக்கு இறுதிச் சடங்கு நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் நிர்வாகம் இந்த முடிவை எடுத்தது.

RID 3030க்கு உட்பட்ட RC அகோலா மிட்டவுன், ஆரம் அறக் கட்டளையுடன் சேர்ந்து மாவட்டத்தில் உள்ள கொவிட் பணியில் உள்ள ஆஷா ஊழியர்களுக்கு முகக்கவசங்கள், முகக் கேடயங்கள் உள்ளிட்டவற்றை வழங்கியது.

### சுவாசக் கருவிகள்

ராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு RID 3212ன் கீழ் உள்ள ராமநாதபுரம் மற்றும் RC ராமநாதபுரம் ராயல்ஸ் சார்பில், மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் முன்னாள் மாவட்ட ஆளுநர் சின்னதுரை - அப்துல்லா முன்னிலையில் நான்கு வென்டிலேட்டர்கள் (சுவாசக்கருவிகள்) நன்கொடையாக வழங்கப்பட்டன. அமெரிக்காவின் RID 6980ன் கீழ் உள்ள லேக் லோனா லஞ்ச் உதவியுடன் சர்வதேச மானியத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

கோயம்புத்தூர் வடவள்ளி ரோட்டரி சங்கத்தின் ஆதரவுடன் (RID 3201) உள்ளூர் காவல் நிலையத்துக்கு இரண்டு அக்ரிலிக் கொவிட் கேடயங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.



*கோயம்புத்தூர் வடவள்ளி ரோட்டரியினர் காவல்துறை அலுவலகத்தில் கோவிட் பாதுகாப்பு கேடயங்கள் அளித்தனர்.*

# டெட்ராய்ட் நகருக்கு தொற்று நிவாரணம்

*அமெரிக்காவில் மிச்சிகன் மாநிலத்தில் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்க 15 ரோட்டரி சங்கங்கள் மற்றும் ரோட்டரி மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு சர்வேதச கூட்டுத் திட்டம் RC ஆன் அர்பார் நார்த், (RID 6380) தலைமையில் செயல்படுத்தப்பட்டது.*

*டெட்ராய்ட் நகர தொற்று நிவாரண உதவித் திட்டம் 73,000 டாலர் மதிப்பிலானது. பல மாவட்டங்கள், புனேயிலிருந்து 5 சங்கங்கள், RC பெங்களூர் பிரிகேட்ஸ், புனேயில் உள்ள பயோனீர் மருத்துவ ஆராய்ச்சி அறக்கட்டளை, அண்மையில் அறிவிக்கப்பட்ட TRFன் இணை சர்வதேச நிதியுதவி ஆகியவையும் இதில் அடங்கும்.*

*டெட்ராய்ட் நகரில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டு நிறுவனங்கள் மற்றும் 25க்கும் மேலான சுகாதார நிலையங்களுக்கு உதவி அளிப்பதே எங்கள் நோக்கமாக இருந்தது என்றார் திட்டத்தின் இணை தலைவரும் RC ஆன் அர்பார் நார்த் சேர்ந்தவருமான மணீஷ் மேத்தா. இரு முனை முயற்சியாக இத்திட்டத்தின் கீழ் உள்ளூர் மருத்துவ மனைகள், கிளினிக்குகள், நர்ஸிங் ஹோம்கள் ஆகியவற்றுக்கு PPEக்கள் விநியோகித்தோம் என்றார். இரண்டாவது கட்டமாக டெட்ராய்ட் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சேவை செய்து வந்த உணவு வங்கிகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது.*

*சர்வதேச அளவிலான ரோட்டேரியன்கள் கொடுத்த 15,000 டாலர் நன்கொடை கிளீனர்ஸ் சமூக உணவு வங்கிக்கு நன்கொடையாக டிசம்பர் 15ம் தேதி நடைபெற்ற மெய்நிகர் கூட்டத்தில் வழங்கப் பட்டது. அமெரிக்காவின் சில்லறை விற்பனையாளரான குரோகர், நன்கொடை தின நடவடிக்கைகளை இரட்டிப்பாக்குங்கள் திட்டத்தின் கீழ் இதற்கு ஈடான தொகையை வழங்கினார். இதன் மூலம் கிளீனர்ஸ் 90,000 பேருக்கு உணவு வழங்க முடியும் என்றார் மேத்தா.*

*வழக்கமாக அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள ரோட்டரி சங்கங்கள் தான் இந்தியா மற்றும் இதர வளரும் நாடுகளுக்கு நிதியுதவி செய்யும். ஆனால், இந்த முறை நாங்கள் ஒன்று சேர்ந்து அவர்களுக்கு உதவ முன்வந்தோம். இப்போது புனே ரோட்டரி சங்கங்கள் ஒன்று சேர்ந்து டெட்ராய்ட் திட்டத்துக்கு தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர் என்றார் புனே மெட்ரோ ரோட்டரி சங்கத்தின் தலைவர் மகரந்த் பட்கே. இந்திய ரோட்டரி சங்கங்களின் இந்த பங்களிப்பை RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ பெரிதும் பாராட்டினார்.*

**சவக்கிடங்கு பைகள்**

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையின் டீன், வேண்டுகோளை அடுத்து RID 2982 ஆளுநர் K S வெங்கடேசன் தனது ஆறு உதவி ஆளுநர்களிடம் சேலத்தில் உள்ள ரோட்டரி சங்கங்களிடம் தொடர்பு கொண்டு “சவக்கிடங்கு பைகள்” நன்கொடையாக வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இதைத் தொடர்ந்து சேலத்தில் உள்ள 13 சங்கங்கள் மூலம் 806 சவக்கிடங்கு பைகள் மற்றும் பிளாஸ்டிக் ரோல்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. கொரோனாவுக்கு பலியான 500 நோயாளிகளின் உடலை மூடி எடுத்துச் செல்வதற்கு இவை பயன்படுத்தப்பட்டன. இதற்கு ரூ.3.5 லட்சம் செலவிடப்பட்டது.



*ரோட்டரி பெங்களூர் பிரிகேட்ஸ் தலைவர் அஷ்வனி கிங்கர் மருந்துகளை வழங்குகிறார்.*

மாவட்ட கோவிட் தலைவர் முகமது இலியாஸ் ஒவ்வொரு வாரமும் அரசு மருத்துவமனைக்குச் சென்று எவ்வளவு சவக்கிடங்கு பைகள் உள்ளன என்று கணக்கெடுத்து தேவைப்பட்டால் அவற்றை ரோட்டரி, இன்னர்வீல் சங்கம், மற்றும் இதர சேவை நிறுவனங்கள் உதவியுடன் விநியோகம் செய்யவும் ஏற்பாடு செய்தார் என்றார் RC சேலம் சவுத் தலைவர் R மங்கேஷ்வர். கோவிட் வைரஸ் பரவிவிடாமல் இருக்க தக்க சமயத்தில் சவக்கிடங்கு பைகள் கொடுத்து உதவியதற்காக ரோட்டரியினரை மருத்துவமனை டீன் மருத்துவர் பாலாஜி நாதன் பாராட்டினார்.■

# RID 2981ல் 1 மில்லியன் சதுர அடிக்குமேல் மியாவாகிக் காடுகள்

ரோட்டரி செய்திக்குழு



DG *பாலாஜி பாபு (இடதிலிருந்து 2வது, உட்கார்ந்து கொண்டு)* RC *திருவாரூர் கிங்ஸ் உறுப்பினர்களுடன்.*

RID 2981 ஒரு மிகப் பெரிய பசுமைத் திட்டத்தை நிறைவேற்றியுள்ளது, இந்த மாவட்டத்திலுள்ள 119 ரோட்டரி சங்கங்களின் பங்களிப்புகளுடன், 101 நாள் எல்லையில், மியாவாகிக் காடுகளை உருவாக்குவதற்காக ஒரு மில்லியன் சதுர அடிக்குமேல் மரக் கன்றுகளை நட்டுள்ளது. இச்சங்கங்கள் நில உரிமையாளர்கள், அமைப்புகள், வளாகங்கள் மற்றும் நிறுவனங்களை அணுகி எல்லா முயற்சிகளையும் எடுத்தார்கள்'' என்கிறார் DG R பாலாஜி பாபு.

அடிப்படையில் விவசாய நிலமாகிய இப்பகுதி, கஜா, தானே மற்றும் சமீபத்திய நிவர் போன்ற புயல்களால் தாக்கப்பட்டது, மேலும் சுற்றுச்சூழல் பெரும் இழப்பைச் சந்தித்தது'' என்று இவர் நினைவுகூர்கிறார்.

RC தஞ்சாவூர் பிக் டெம்பிள், தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 20,000 சதுர அடிக்குமேல் மரக் கன்றுகளை நட்டது; RC திருவாரூர், தமிழ் நாடு மையப் பல்கலைக்கழகம் வழங்கிய 80,000 சதுர அடியைப் பயன்படுத்தியது; RC தஞ்சாவூர் சோழா, பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்திலுள்ள 20,000 சதுர அடியைத் தன்னால் இயன்ற அளவு நன்கு பயன்படுத்தியது; RC நாகப்பட்டினம் மிட்-டவுன் இடுகாட்டு நிலத்தைக்கூட விட்டுவைக்கவில்லை, அங்கிருந்த புதர்ச்செடிகளை அகற்றி, 60,000 சதுர அடிக்குமேல் ஒரு சிறு காட்டை உருவாக்கினார்கள்.

கும்பகோணத்திலுள்ள 15 சங்கங்களும் சேர்ந்து 50,000 சதுர அடிக்குமேல் சிறு காடுகளை உருவாக்கினார்கள். RC குத்தாலம், திருவாடுதுறை மடத்தை அணுகி 10,000 சதுர அடியைப் பெற்றது; RC மயிலாடுதுறை பிரைட், 1.08 லட்சம் சதுர அடியைப் பயன்படுத்தியது மற்றும் காரைக்காலில் உள்ள இரண்டு சங்கங்கள் 36,000 சதுர அடியைப் பசுந்தளிர்களால் நிரப்பியது.

மரக்கன்றுகளை பாதுகாப்பதற்காக, முள் வேலி எழுப்பப்படுகிறது. குழாய்க் கிணறுகளின் வழியாகச் சொட்டு நீர்ப் பாசனத்துக்கு வழி செய்யப்படுகிறது. செடிகளுக்கு 33 ஆண்டுகள் முழுப்பாதுகாப்பு அளிப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது'' என்றார் பாபு.

தோட்ட வேலையானது கால் ஏக்கரில் செய்யப்பட்டால், சுற்றியுள்ள 52 ஏக்கர் பரப்பு பலன் பெறுவது உறுதி என்பதால், மக்கள் தங்களுடைய கிராமத்து வீடுகளின் கொல்லைப்புறங்களில் கூட மரக் கன்றுகளை நடுவதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள்.■

# சுயதொழிலில் முன்னேறி வரும் மைசூரு பெண்கள்!

ஜெய்ஸ்ரீ

மைசூருவில் சொந்தமாக ஒரு தையலகத்தைத் தொடங்குவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறார் சவிதா. “நான் ரூ.1,000 கட்டணத்தில் தையல் மற்றும் அழகுக்கலை பயிற்சியில் சேர்ந்து படித்தேன். வேறு எங்காவது இந்த தையல் பயிற்சி வகுப்பில் சேர்ந்திருந்தால் ரூ.15,000மும், அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கு ரூ.20,000மும் நான் செலவழித்திருக்க வேண்டியிருக்கும்,” என்றார் ரோட்டரி மூலம் பயனடைந்த சவிதா.

மற்றொரு பயனாளியான ராஷ்மி, இப்போது கம்ப்யூட்டர் தொழில்நுட்பம் தெரிந்தவராக இருக்கிறார். “இப்போது என்னால் மின்னஞ்சல்கள் அனுப்ப முடிகிறது. இணையதளத்தை உபயோகிக்க முடிகிறது. கணினியில் எளிதாக தட்டச்சு செய்யமுடிகிறது என்கிறார்.



பால் ஹாரீஸ் நிலையத்தில் தையல் பயிற்சி பெறும் பெண்கள்.

மைசூருவில் உள்ள 1500க்கும் மேலான ஏழ்மைநிலையில் உள்ள பெண்கள் இப்போது தையலகம், அழகுக்கலை நிலையம், கணினி தரவு மையங்கள் போன்றவற்றை சொந்தமாக நடத்திவரும் சிறிய தொழில்முனைவோராக உள்ளனர். 500க்கும் மேலானவர்கள் இதே போன்ற சிறிய நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர் அல்லது பகுதி நேர ஊழியராகச் செயலாற்றி வருகின்றனர். இதற்கெல்லாம் கடந்த 17 ஆண்டுகளாக தொழில் பயிற்சி அளிக்கும் திட்டத்தைத் தொடங்கி நடத்தி வரும் ரோட்டரி மாவட்டம் 3181க்கு உட்பட்ட மைசூரு வெஸ்ட் ரோட்டரி சங்கத்துக்குத்தான் நாம் நன்றி சொல்ல வேண்டும்.

காகித பைகள் செய்ய கற்று தரப்படுகிறது.



பெண்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும். அவர்களுக்கு நிலையான வருமானத்தை உருவாக்க வேண்டும், அவர்களிடையே தன்னம்பிக்கையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த திட்டம் தொடங்கப்பட்டது என்கிறார் சங்கத்தின் செயலாளர் D K தினேஷ் குமார். எங்கள் தொழிற்பயிற்சிக் கூடத்தில் பயிற்சி பெற்ற பெண்கள் பலர் இப்போது ஒன்று சேர்ந்து சுயஉதவிக் குழுக்கள் அமைத்து செயல்பட்டு வருகிறார்கள் என்றும் அவர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

மைசூருவில், தட்டகள்ளி என்னும் குடியிருப்புப் பகுதியில் எங்கள் சங்கம் அமைத்துள்ள பால் ஹாரிஸ் தொழிற் பயிற்சி நிலையம் உள்ளது. இங்கு தையல் பயிற்சி, ஆடை வடிவமைப்பு, எம்பிராய்டரி, அழகுக்கலை, காகிதப்

பைகள் தயாரித்தல், கணினி இயக்கம் பற்றிய அடிப்படைக் கல்வி, ஆங்கில பேச்சுப் பயிற்சி உள்ளிட்டவை கற்றுக்கொடுக்கப்படுகின்றன. பயிற்சி வகுப்பின் காலம் 6 மாதம். முன்பு நாங்கள் இலவசமாக இந்த பயிற்சி வகுப்புகளை நடத்தி வந்தோம். இப்போது ஒரு வகுப்புக்கு பயிற்சிக் கட்டணமாக ரூ.1,000 வசூலிக்கிறோம். ஒவ்வொரு வகுப்பிலும் 30 பேர் வரை சேர்ந்து படிக்கலாம் என்றார் அவர்.

எங்கள் சங்கம் இந்த பயிற்சி வகுப்புகளில் படித்து முடித்தவர்களின் பெயர் உள்ளிட்ட விவரங்களைத் தரவுகளாகப் பராமரித்து வருகிறது. அவர்களுக்கு வேலை கிடைக்கவோ அல்லது சொந்தமாக தொழில் தொடங்குபவர்களுக்கு வங்கிக்கடன் கிடைக்கவும் உதவி செய்து வருகிறது. பொருளாதார ரீதியில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள பெண்களுக்கு ரோட்டேரியன்கள் தையல்மெஷின் வாங்கித்தந்தும் உதவுகிறார்கள். சொந்தமாக தொழில் தொடங்க விரும்புபவர்களுக்கு விற்பனைத் துறையில் சிறப்பு பயிற்சி தரப் படுகிறது. நாங்கள் நடத்தும் பயிற்சி



நிலையத்துக்கு மாதம் ரூ.2 லட்சம் வரை செலவாகிறது. பயிற்சி பெறும் பெண்களிடமிருந்து கட்டணமாக ரூ.60,000 வரை கிடைக்கிறது. மீதித் தொகையை சங்க உறுப்பினர்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் மூலம் பெறப்படுகிறது.■

## சிவகாசியில் புதிய அனைத்து பெண்கள் ரோட்டரி சங்கம்

ரோட்டரி செய்திக்குழு

பெண்களைமட்டும் கொண்ட RC சிவகாசி டைமண்ட்ஸ், RID 3212, என்ற சங்கத்தை நவம்பரில் DG PNB முருகதாஸ் பதிவுசெய்து தொடங்கி வைத்தார். இந்தப் புதிய சங்கம், ரூ.30,000 மதிப்புள்ள ஒரு கணினி அமைப்பை CSI ஞான பாக்கியம் தொடக்கப் பள்ளிக்கு நன்கொடையாக அளித்தது. குமாரபுரத்தி லுள்ள பஞ்சாயத்து ஒன்றியத் தொடக்கப் பள்ளி யில் நிறுவப்பட்டுள்ள RO அமைப்பு ஒன்று, 60 மாணவர்களுக்குத் தூய குடிநீரை வழங்கும்.




*DG PNB முருகதாஸ் RO கருவியை பள்ளி தலைமையாசிரியரிடம் சங்கத்தலைவர் ஜோதிலஷ்மி (வலது) மற்றும் திட்டத்தலைவர் S யோகசித்ரா (இடது) முன்னிலையில் அளிக்கிறார்.*

இவர்களுடைய மற்ற திட்டங்களில் சில, சிவகாசியிலுள்ள VSKD பள்ளியில் 5ம் வகுப்பு படிக்கும் P ரிதீஸ் என்ற மாணவருக்கு ரூ.3,000 ரொக்கப்பண உதவி, மற்றும், 40 முறைகளுக்குமேல் குருதியை நன்கொடையாக வழங்கியதற்காக Rtn வேல்முருகன் என்ற சமூகச் செயல்பாட்டாளரைப் பெருமைப்படுத்துதல்.■

Rotary PEOPLE OF ACTION

# வயதுவந்தோருக்கு ரோட்டரி எழுத்தறிவு மையங்கள்

ரோட்டரி செய்திக்குழு

2025க்குள் இந்தியாவை முழு எழுத்தறிவு பெற்ற நாடாக ஆக்க வேண்டும் என்கிற இலக்குடன் ரோட்டரி இந்தியா பணியாற்றிவரும் இந்த நேரத்தில், மேற்கு வங்காளத்தின் பிர்பம் மாவட்டத்திலுள்ள செஹலாய் மற்றும் பித்யாதர்பூர் கிராமங்களில் வயதுவந்தோர் எழுத்தறிவு மையங்கள் இரண்டைத் திறந்துள்ளது RC போல்பூர் சாந்திநிகேதன், RID 3240. ஓராண்டில், எழுத்தறிவற்ற வயதுவந்தோர் 100 பேரை, பெரும்பாலும் பெண்களை எழுத்தறிவுள்ளோராக மாற்றவேண்டும் என்று நாங்கள் இலக்கு நிர்ணயித் துள்ளோம்'' என்கிறார் சங்கத் தலைவர் டாக்டர் பிஸ்வதேப் சாட்டர்ஜீ.

டாக்டர் சாட்டர்ஜீ தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், எழுத்தறிவு மையங்களைத் தொடங்கும் இந்தக் கனவை வளர்க்கத் தொடங்கினார்; சரியான இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கிராமங்களுக்குச் சென்றுவரத் தொடங்கினார். இந்த ஆய்வில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இரு கிராமங்களும் (செஹலாய் மற்றும் பித்யாதர்பூர்) கிட்டத்தட்ட சம அளவு பாலின விகிதம் கொண்டவை; இவற்றின் மக்கள் தொகையில் 60 சதவிகிதத் துக்கு மேல் பழங்குடியினர் இடம் பெற்றுள்ளார்கள். இந்த இரு கிராமங்களின் மக்கள் தொகையில் சுமார் 90 சதவிகிதத்தினர் SC/ST வகையைச் சேர்ந்தவர்கள், ஏழைகள், எழுத்தறிவு அற்றவர்கள், விவசாயக் கூலியைச் சார்ந்துள்ளவர்கள். ஆனால், ஆண்டின் பெரும் பகுதியில் இந்தப் பணிகள் இவர்களுக்கு எளிதில் கிடைப்பதில்லை என்கிறார் சாட்டர்ஜீ.

முடக்கம் மற்றும் நோய்ப்பரவல் அச்சம் இருந்தபோதும், கஸ்பா கிராமப் பஞ்சாயத்தின்கீழ் வருகிற இந்தக் கிராமங்களுக்கு இவர் நேரில் சென்றார், பஞ்சாயத்துப் பிரதான் (தலைவர்), கிராமமன்றப் பிரதிநிதி மற்றும் பிற தலைவர்களுடன் பேசி, எழுத்தறிவு மையத்துக்கான யோசனையை நாங்கள் முன்வைத்த போது, அவர்கள் ஆர்வத்துடன் அதை ஏற்றுக் கொண்டார்கள். கிராமவாசிகள் தங்கள் பிள்ளைகளைப்போலவே படிக்கவேண்டும், எழுதவேண்டும், கணக்குப் போடவேண்டும் என்று ஆர்வம் காட்டுகிறார்கள்'' என்று தொடர்ந்து கூறினார் அவர்.

செஹ்லாய் மையம் தொடக்கப் பள்ளியின் திறந்த வராண்டாப் பகுதியில் அமைந்துள்ளது; பித்யாதர்பூரில் வகுப்புகள் ஒரு பண்ணை வீட்டின் திறந்த





பகுதியில் நடத்தப்படுகின்றன, மழை நேரத்தில் இந்த மையம் ஒரு வீடுக்கு மாற்றப்படும்.

### புதிய RCCகள்

தன்னார்வலர்கள் பெண்களை வீடுகளில் இருந்து அழைத்து வந்து, வயது வந்தோருக்கான எழுத்தறிவு வகுப்புகளை நடத்துவதற்காக, ஜூலை மாதத்தில் இந்த இரு கிராமங்களிலும் ரோட்டரி சமூகப் படைகள் திறக்கப் பட்டன. முதலில், கற்போருக்குச் சிலேட்டுப் பலகை மற்றும் சாக்பீஸ்களைக் கொண்ட எழுத்தறிவுப் பொதிகளை வழங்கியது இச்சங்கம். அந்தந்த RCCகளைச் சேர்ந்த இரண்டு இளநிலைப் பட்டதாரி மாணவர்கள் ஆசிரியர்களாக ஆக்கப்பட்டார்கள். படிப்படியாக, சாந்தி நிகேதன் இன்னர் வீல் சங்கம் மற்றும் அனைத்திந்தியப் பெண்கள் மாநாட்டு உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தில் பங்கேற்றார்கள்'' என்றார் இவர்.

கல்வி கற்கும் வயதுவந்தோர், வகுப்புகளில் கலந்துகொள்ளத் தொடங்கி முதல் மூன்று மாதங்களுக்குள், வங்காள மொழி எழுத்துகளைப் படித்தல், எழுதுதல், அடிப்படைக் கணக்குகளைப் போடுதல் ஆகியவற்றில் மிகச் சிறந்த முன்னேற்றத்தைக் காண்பித்தார்கள். DG சுபாசிஸ் சாட்டர்ஜீ இங்கு வந்திருந்த போது, அவர்களின் ஒருவர் தன்னுடைய பெயரை நேர்த்தியான, தெளிவான எழுத்துகளில் எழுதியதைக் கண்டு மகிழ்ச்சியுடன் வியந்தார்.■

---

## செல்லப்பிராணிகள் பராமரிப்பில் அலாகாபாத் மிட்டவுன் ரோட்டரி சங்கம்

விலங்குகளை மீட்பது அவற்றுக்கு மறுவாழ்வு அளிப்பது என்கிற பொதுவான கண்ணோட்டத்தில் RID 3120க்கு உட்பட்ட அலாகாபாத் மிட்டவுன் ரோட்டரி சங்கம் PAWCO என்ற அமைப்புடன் கூட்டணி அமைத்து ள்ளது. செல்லப்பிராணிகளின் துன்பங்களை குறைத்து அவற்றை பாதுகாப்பதுதான் இதன் நோக்கம். இதற்காக உருவானதுதான் விலங்குகளுக்கு முறையான சிகிச்சை அளிப்பதற்கான ரோட்டரி அமைப்பு (RETA).

விலங்குகளை பாதுகாத்து அவற்றுக்கு புகலிடம் அளிக்கும் இந்த திட்டத்தின் முதல் கட்டமாக சங்கத்தின் தலைவர் டாக்டர் திவ்யா பர்தாரியா மற்றும் திட்டத்தின் தலைவர் கீதிகா அகர்வால் இருவரும் 150 கிலோ தானியங்கள், கஞ்சி மாவு, ராஜ்மா, நாய் சாப்பிடும் உணவுகள், போர்வைகள் உள்ளிட்டவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

எங்களின் அடுத்த கவனம் விலங்குகளுக்கு கருத்தடை செய்வதுதான். PAWCO ஏற்கெனவே நூற்றுக்கும் மேலான நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை அளித்துள்ளது. தெருக்களில் நாய்கள் சுற்றித்திரியாமல் தடுப்பதற்கான ஒரே வழி இதுதான். 2017ம் ஆண்டு அத்வைத் மோகன் மற்றும் சமர் ரஹ்மான் இருவரும் தடுப்பூசி முகாமில் சந்தித்துப் பேசினர். அதன்பின் உருவானதுதான் ''பாவ்கோ'' (PAWCO) என்று அழைக்கப்படும் விலங்குகள் நல சங்கம். இதுவரை இந்த தொண்டு நிறுவனம் 500க்கும் மேலான விலங்குகளுக்குச் சிகிச்சை அளித்துள்ளது. அதுமட்டுமல்ல 20க்கும் மேலான நாய்களை பராமரிப்பதற்காக தத்தெடுத்துக் கொண்டுள்ளது.123 நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை அளித்துள்ளது. நாய்களைப் பராமரிக்க 30க்கும் மேலான நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்ல 24 மணி நேரமும் செயல்படும் உதவி எண் வசதியையும் ஏற்படுத்தியுள்ளது.■




RC *அலகாபாத் மிட்டவுன் தலைவர்* Dr *திவ்யா பர்தாரியா மற்றும் சங்கத்தினர் நாய்களுக்கான உணவுகளை* PAWCO *என்னும் விலங்குகள் நல சங்கத்திற்கு வழங்குகின்றனர்.*

# 40 நிலையங்களில் 25,000 பேரைப் பரிசோதிக்கவுள்ளது RID 3190

ரோட்டரி செய்திக்குழு

கர்நாடகம் முழுவதுமுள்ள முதன்மை நல மையங்கள், தனியார் மருத்துவமனைகள் கோவிட் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதில் சுறுசுறுப்பாக இருக்கிற நேரத்தில், DG நாகேந்திர பிரசாத், RID 3190, நோய்த்தடுப்புக்கான மாவட்ட இயக்குநர் S ஜெயராமன் மற்றும் நேர்வித நலன் திட்டத்தின் இயக்குநரான Dr சுமுக் ஆகியோரிடம் ஆலோசனை பெற்று, "உங்கள் எண்களை அறிந்துகொள்ளுங்கள்: NCDஐத் தடுப்போம்" திட்டத்தின் கீழ் 25,000 குடிமக்களுக்குத் தொற்ற இயலாத நோய்களுக்கான பரிசோதனைகளை நடத்தத் திட்டமிட்டார்.




*இடதிலிருந்து:* Rtn *பழனி லோகநாதன், ரோட்டரி பெங்களூர் மிட்–டவுன் தலைவர் ரவி நெடுங்காடி, மாவட்ட நோய் தடுப்பு இயக்குனர்* S *ஜெயராமன்,* DG B L *நாகேந்திர பிரசாத், மெர்சி மிஷனின் முகமது உமர் ஆகியோர் ஒரு மெர்சி பூத்தில்.*

தொடக்கத்தில், சேரிப் பகுதியில் வாழ்வோருக்காக ஓர் NGO கூட்டணியுடன் நடத்தப்படும் காய்ச்சல் மருந்தகங்களான 40 மெர்சி பூத்களின் சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. இங்கு வெப்பநிலை, ஆக்ஸிஜன் செறிவு மற்றும் BP ஆகியவை சரிபார்க்கப் படுகின்றன, தேவைப் பட்டால், நோயாளிகள் கோவிட் பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறார்கள்.

ரோட்டரி பெங்களூர் மிட்-டவுன் (அதன் தலைவராகிய ரவி நெடுங்கடி தலைமையில்) முன்னணிச் சங்கமானது. விரைவில் மேலும் 15 சங்கங்கள் இணையவுள்ளன.

நோயாளிகளைப் பரிசோதிப்பதற்காக, ஒவ்வொரு மெர்சி பூத்-துக்கும் ஒரு குளுக்கோமீட்டர், 500 கீற்றுகள், லான்செட்கள், மது ஸ்வாப் துணிகள், ஒரு டிஜிட்டல் BP மற்றும், டிஜிட்டல் எடை இயந்திரம், உயரத்தை அளக்கும் ஒரு ஸ்டாச்சர் மானி மற்றும் ரோட்டரி சின்னத்துடன் கூடிய 500 நல அட்டைகள் ஆகியவற்றைக் கொண்ட நாற்பது பரிசோதனைப் பொதித் தொகுப்புகள் அளிக்கப்பட்டன. ஒவ்வொரு நிலையத்திலும், சமூகத்திலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டு, இந்தக் கருவிகளைப் பயன் படுத்தப் பயிற்சி பெற்ற நான்கு நலப் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

இந்த 40 நிலையங்களில் நவம்பர் 9 அன்று பரிசோதனைகள் தொடங்கின; உடல் பருமன், ஆஸ்துமா, நீரிழிவு மற்றும் மரபியல் சூழ்நிலைகள் போன்ற இணை நோய்களைக் கொண்ட 40 வயதுக்கு மேற் பட்டோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. பரிசோதனைச் செயல்முறையில் ரோட்டரியன்களும் தன்னார்வலர்களாகப் பங்கேற்றார்கள். ரோட்டரியன்கள், பொதுமக்களுக்கு நீரிழிவு பற்றிய பயனுள்ள தகவல்களை வழங்குவதற்காக Dr சுமுக் ஓர் இணையக் கருத்தரங்கை நடத்தினார். இந்த மருந்தகங்களுக்கு வரும் மக்களுக்கு நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் பற்றிய ஆங்கில, கன்னடச் சிற்றேடுகள் வழங்கப்படுகின்றன.

500 மூத்த குடிமக்களுக்கு மூன்று மாதங்களுக்கு நீரிழிவு மற்றும் BP மருந்துகளை வழங்குவதற்காக, ரோட்டரி பிரிகேட்ஸ் தலைவர் அஷ்வனி கிங்கரும், காய்ச்சல் மருந்தகங்களில், தேவையுள்ள மக்களுக்கு இலவச மருந்துகளை அளிப்பதற்கு வழி செய்துள்ளார்" என்றார் ஜெயராமன்.

நவம்பர் 15 வரை, 6,000 பேர் பரிசோதிக்கப் பட்டார்கள். சென்ற ஆண்டு, நாங்கள் 5,000 பேரைப் பரிசோதித்தோம்" என்றார்.■

# District Wise TRF Contributions as on November 2020

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus | Endowment Funds | Other Funds | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 23,438 | 2,206 | 5,000 | 0 | 30,644 | 129 | 2.6 |
| 2982 | 11,156 | 11,894 | 20,770 | 43,060 | 86,881 | 51 | 1.7 |
| 3000 | 16,286 | 12,764 | 10 | 10,800 | 39,859 | 36 | 0.7 |
| 3011 | (6,826) | 7,645 | 40,450 | 176,584 | 217,854 | 60 | 1.7 |
| 3012 | 10,606 | 2,357 | 0 | 8,532 | 21,495 | 46 | 1.3 |
| 3020 | 56,198 | 32,056 | 5,000 | 2,726 | 95,980 | 130 | 3.2 |
| 3030 | 9,889 | 2,284 | 0 | 128,275 | 140,448 | 47 | 0.9 |
| 3040 | 3,159 | 98 | 0 | 50 | 3,307 | 15 | 0.7 |
| 3053 | 9,733 | 404 | 0 | 60,668 | 70,804 | 27 | 1.0 |
| 3054 | 69,683 | 1,617 | 0 | 96,779 | 168,079 | 253 | 4.2 |
| 3060 | 33,758 | (411) | 27,141 | 57,727 | 118,215 | 619 | 14.2 |
| 3070 | 6,843 | 100 | 0 | 22,596 | 29,538 | 60 | 1.9 |
| 3080 | 17,953 | 11,908 | 0 | 0 | 29,861 | 69 | 2.1 |
| 3090 | 17,978 | 500 | 0 | (736) | 17,742 | 38 | 1.7 |
| 3100 | 13,857 | 252 | 0 | 4,224 | 18,333 | 17 | 0.8 |
| 3110 | 11,626 | 0 | 0 | 0 | 11,626 | 28 | 0.8 |
| 3120 | 1,055 | 1,769 | 0 | (1,769) | 1,055 | 3 | 0.1 |
| 3131 | 44,536 | 22,622 | 109,000 | 278,823 | 454,981 | 250 | 4.9 |
| 3132 | 7,453 | 2,042 | 0 | 3,801 | 13,297 | 32 | 1.0 |
| 3141 | 235,065 | 36,008 | 40,865 | 682,417 | 994,355 | 435 | 8.2 |
| 3142 | 109,624 | 6,923 | 101 | 4,693 | 121,342 | 312 | 9.7 |
| 3150 | 22,886 | 1,838 | 47,667 | 23,374 | 95,764 | 305 | 9.2 |
| 3160 | 7,949 | 5,811 | 16 | 0 | 13,775 | 29 | 1.2 |
| 3170 | 10,145 | 16,649 | 2,253 | 112,431 | 141,479 | 54 | 1.0 |
| 3181 | 13,425 | 2,027 | 0 | 7,050 | 22,501 | 48 | 1.4 |
| 3182 | 21,812 | 4,054 | 0 | 7,265 | 33,131 | 41 | 1.3 |
| 3190 | 50,631 | 17,449 | 25,000 | 112,219 | 205,299 | 356 | 7.1 |
| 3201 | 20,101 | 18,330 | 0 | 128,172 | 166,604 | 246 | 4.4 |
| 3202 | 27,110 | 15,762 | 8,468 | 20,272 | 71,613 | 97 | 1.8 |
| 3211 | 1,137 | 3,414 | 0 | 70,927 | 75,478 | 10 | 0.2 |
| 3212 | 14,566 | 22,351 | 14 | 76,733 | 113,664 | 17 | 0.4 |
| 3231 | (386) | 245 | 0 | (212) | (354) | 3 | 0.1 |
| 3232 | 13,226 | 28,409 | 2,000 | 197,280 | 240,916 | 97 | 1.7 |
| 3240 | 41,699 | 15,347 | 0 | 43,955 | 101,001 | 118 | 3.9 |
| 3250 | 7,944 | 703 | 0 | 93 | 8,741 | 118 | 3.2 |
| 3261 | 10,578 | 1,108 | 0 | 2,833 | 14,520 | 24 | 0.9 |
| 3262 | 8,709 | 2,099 | 0 | 0 | 10,808 | 29 | 0.8 |
| 3291 | 9,384 | 1,467 | 0 | 50,950 | 61,802 | 30 | 0.8 |
| **India Total** | **983,986** | **312,103** | **333,757** | **2,432,592** | **4,062,438** | **4,279** | **2.9** |
| 3220 Sri Lanka | 58,491 | 16,930 | 1,000 | 15,015 | 91,436 | 139 | 7.3 |
| 3271 Pakistan | 1,006 | 1,035 | 0 | 70,091 | 72,132 | 0 | 0.0 |
| 3272 Pakistan | 18,593 | 9,890 | 0 | 1,063 | 29,546 | 93 | 5.6 |
| 3281 Bangladesh | 69,485 | 3,980 | 29,000 | 136,397 | 238,862 | 327 | 4.6 |
| 3282 Bangladesh | 31,611 | 4,195 | 0 | 7,770 | 43,576 | 46 | 1.1 |
| 3292 Nepal | 80,451 | 8,563 | 0 | 155,123 | 244,138 | 1119 | 22.6 |
| **South Asia Total** | **1,243,623** | **356,696** | **363,757** | **2,818,051** | **4,782,127** | **6,003** | **3.5** |
| **World Total** | **40,560,901** | **10,051,004** | **11,030,042** | **12,299,694** | **73,941,642** | | |

Source: RI South Asia Office

# குரல் வளத்தால் உச்சம் தொட்ட முகமது ரஃபி

S R மது

"மன் தர்பத் ஹரி தர்ஷன் கோ ஆஜ்" என்ற பாடலைக் கேளுங்கள். 1952-ஆம் ஆண்டு பைஜுபாவ்ரா என்ற படத்தில் வெளிவந்த பாடல். எழுதியவர் ஷகீல் பதாயுனி. இசையமைத்தவர் நௌஷத். பாடலைப் பாட்டியவர் முகமது ரஃபி. குரல், உச்சரிப்பு, பாடல் காட்சியின் ஒருமித்த கலவை. பாலிவுட்டின் மிகச் சிறந்த பஜனைப் பாடல். ஒருங்கிணைத்தவர்கள் மூன்று முஸ்லிம்கள்.

ரஃபியின் மற்றொரு சிறந்த படைப்பு, பக்தி இசை கலந்தது. பாடல் "ஆயே துனியாகே ரக்வால்" இதில் "ரக்வாலே" என்ற வார்த்தையை பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லும்போது அவரது குரல் உயர்ந்துகொண்டே போகிறது.



பைஜுபாவ்ராவுக்கு முன்னரே ரஃபியின் சினிமா வாழ்க்கையும் உயர்ந்தது. 1950களிலும் 1960களிலும் அவர் பின்னணி பாடுவதில் கொடிகட்டி பறந்தார். பின்னணி பாடலுக்கு புதிய அர்த்தத்தை கொடுத்தவர் முகமது ரஃபி என்கிறார் ஜாவித் அக்தர். 1990களில் வானொலியில் நடைபெற்ற ஒரு நேர்காணலில் இசையமைப்பாளர் நௌஷத்திடம், உங்கள் வாழ்க்கையில் சிறந்த இசையை நீங்கள் இசையமைக்க விரும்பினால், நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று கேட்கப் பட்டதற்கு அவர் அளித்த பதில், முகமது ரஃபியை ஒரு மணி நேரம் திருப்பியனுப்பும்படி அல்லாவிடம் பிரார்த்தனை செய்வேன் என்றாராம் மன்னாடே, ரஃபியை ஒரு நிறுவனமாகவே கருதினார்.

பாலிவுட் இசை உலகில் முகமது ரஃபி, தரத்தில் தங்கமாக கருதப் பட்டார். இதற்கு முதல் காரணம் அவரது குரல் வளம். குரலை வெளிப்படுத்தும் தன்மை, குரலின் ஏற்ற இறக்கங்கள். எங்கு நிறுத்திப் பாடவேண்டும், எங்கு அழுத்தி பாடவேண்டும். எங்கு இடைவெளி விடவேண்டும் என்பது அவருக்கு

நன்றாகத் தெரியும் என்பார் இசையமைப்பாளர் பியாரே லால்.

உணர்ச்சிகளை வெளிப்படுத்தி பாடுவதும் ரஃபிக்கு கைவந்த கலை. திலிப்குமார். ஷம்மிகபூர், ரிஷிகபூர் அல்லது ஜானிவாக்கர் என நடிகர்களின் குரலுக்கு ஏற்ப பாடுவார். ரஃபி குரலை மாற்றி பாடமாட்டார். ஆனால், ஸ்டைலை மாற்றிப் பாடுவார் என்பார் மறைந்த தென்னகத்தின் பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்.



*குத்துசண்டை வீரர் முகமது அலியுடன்.*

### ரஃபியின் பயணம்

1924ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் தேதி, பஞ்சாப் மாநிலம், அமிருதசரஸ் அருகே கோட்லா சுல்தான் சிங் கிராமத்தில் பிறந்தார் முகமது ரஃபி. அவரது தந்தை ஹாஜி அலி ஒரு சமையல்காரர். சமூக மற்றும் மத நிகழ்ச்சிகளுக்கு உணவு சமைக்க வேண்டுமானால் அவரைத்தான் பலரும் கூப்பிடுவார்கள். 1926ல் பத்து பேர் கொண்ட அலியின் குடும்பத்தினர் லாகூருக்கு இடம் பெயர்ந்தது. அங்கு ஹாஜி அலி, தாபா (உணவகம்) நடத்தி வந்தார். ரஃபியின் சகோதரர் முகமது தீன் முடிதிருத்தகத்தை நடத்தி வந்தார். பக்கீர் என்பவர் ஒவ்வொரு கடைக்கும் சென்று பாடல்களைப் பாடி காசு கேட்பார். அவரது பாடல்களால் ஈர்க்கப்பட்ட சிறுவனான முகமது ரஃபி அவர் பின்னாடியே சென்று அந்த பாடல்களை ரசித்துக் கேட்பார். பின்னர், அந்த பாடல்களை தமது சகோதரின் முடித்திருத்தகத்துக்கு வந்து பாடுவார். சகோதரின் கடைக்கு வரும் நண்பர் ஹமீது, ரஃபியின் பாடல் திறமையைக் கண்டு வியந்து அவருக்கு உதவ முன்வந்தார்.

ரஃபிக்கு 13 வயதாக இருக்கும் போது, பிரபல நடிகர் கே.எல். சைகால் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்று மின்தடை காரணமாக தாமதமானது. அந்த சமயத்தில் சிறுவனான ரஃபி மைக் இல்லாமல் பாடுவதற்காக மேடைக்கு அழைக்கப்பட்டார். இனிமையான குரலில், மைக் இல்லாமல் எந்த தடையும் இல்லாமல் ரஃபி சிறப்பாக பாடியதைக் கண்டு பார்வையாளர்கள் ஆச்சர்யம் அடைந்தனர். அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த இசையமைப்பாளர் ஷியாம் சுந்தர், ரஃபி, ஹமீது இருவரையும் தம்மை மும்பையில் வந்து சந்திக்குமாறு கூறினார்.

1944ஆம் ஆண்டில் ஹமீது மற்றும் ரஃபி (அப்போது அவருக்கு 20 வயது இருக்கும்) மும்பைக்கு வந்தனர். பெண்டி பஜாரில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு இசையமைப் பாளர்கள் பலரின் வீட்டுக் கதவுகளைத் தட்டி வாய்ப்புக் கேட்டனர். பஸ், ரயிலில் செல்ல டிக்கெட் எடுக்க கையில் காசு இல்லாததால் கடலையை வாங்கி கொரித்துக்கொண்டே தாங்கள் போகவேண்டிய இடத்துக்கு ரயில்பாதையில் நடந்து செல்வார்களாம்.

ஷியாம் சுந்தர் உதவியுடன் ரஃபி மற்றும் ஹமீது இருவரும் லக்னௌவில் உள்ள நௌஷத்தின் தந்தையை பார்க்கச்சென்றனர். அவரிடம் பரிந்துரை கடிதமும் பெற்றனர். அந்த கடிதத்தில், நௌஷத், இந்தப் பையன் நன்றா கப்பாடுகிறான். தகுதியானவன் என நினைத்தால் அவனுக்கு ஒரு வாய்ப்புக் கொடு என்று பரிந்துரை கடிதத்தில் தந்தை எழுதியிருந்தார். அந்த ஒற்றை வரிதான் பாலிவுட்டில் நுழைய ரஃபிக்கு பாஸ்போர்ட்டாக மாறியது.

ஆனால், அவருக்கு அங்கீ காரம் கிடைக்கவும், அவரது முன்னேற்றத்துக்கும் நீண்ட காலமானது. ஒரு கட்டத்தில் பாந்த்ராவில் ஒரு நெரிசலான பகுதியில் குடியிருந்த ரஃபி, அதிகாலை 4.30 எழுந்து ரியாஸ் செய்வதற்காக மரைன் டிரைவ் செல்ல வேண்டியிருந்தது. ரஃபியின் இனிமையான குரலால் ஈர்க்கப்பட்ட மற்றொரு பாடகரான சுரையா, அவருக்கு தன்னுடைய வீட்டில் தங்கி பயிற்சி செய்ய இடம் கொடுத்தார்.

ரஃபியின் முதல் சூப்பர் ஹிட் பாடல் நூர்ஜஹானுடன் பாடியது. பாடல் – “யஹான்பத்லா வாஃபா கா” (1947ல் வெளிவந்த ஜுக்னு படம்). 1948ம் ஆண்டு காந்திஜி படுகொலை செய்யப்பட்டபோது ரஃபி பாடிய “சுனோசுனோ



*முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியுடன்.*

யே துனியாவாலோ பாபு கி யே அமர்கஹானி'' என்னும் காலத்தால் அழியாத பாடலைப் பாடினார். (இந்தப் பாடலை எழுதியவர் ராஜிந்தர் கிருஷன்-இசையமைப்பாளர் ஹுஸுன்லால்பகத்ராம்.) பண்டித நேரு, முகமது ரஃபியை தமது வீட்டிற்கு அழைத்து அந்தப் பாடலை பாடுமாறு கேட்டுக் கொண்டாராம். 1948ம் ஆண்டு சுதந்திர தினத்தன்று இந்த பாடலுக்காக முகமது ரஃபிக்கு பதக்கம் வழங்கினார் பிரதமர் நேரு. அதே ஆண்டு, ரஃபி பாடிய ''சுஹானி ராத் தல் சுக்கி'' (துலாரி, 1949) என்ற காதல் பாட்டு அனைவரையும் கவர்ந்தது.

1950, 1960களிலும் முகமது ரஃபி, தனது இனிமையான குரலால் ஹிந்தி திரையுலகில் கொடிகட்டி பறந்தார். 1951ல் வெளியான படம் தீதர். திலீப்குமாரின் சிறந்த நடிப்பு, நௌஷத்தின் சிறந்த இசையமைப்பு, ரஃபியின் கணீர் குரல் ஆகியவை ஒன்றிணைந்தது. இந்தப் படத்தில் வரும் மேரி கஹானிபூலனேவாலா மற்றும் ஹ்யூ ஹம் ஜிங்கேலியேபர்பாத் ஆகிய இரு பாடல்களும் ரசிகர்களின் இதயத்தை துளைக்கும் இனிமையான பாடல்களாக இருந்தது. 1952ல் பைஜுபாவ்ரா படம் வெளிவந்ததிலிருந்து பாலிவுட்டின் முடிசூடா மன்னனாக விளங்கினார். அவர் ஒரு பந்தயக் குதிரையைப்போல வேகமாக முன்னேறினார். ''நீங்கள் ஏன் நோய் வாய்ப்படக்கூடாது? அதனால் மற்றவர்களுக்கு பாடுவதற்கு வாய்ப்புக் கிடைக்குமே'' என்று முகேஷ், ரஃபியிடம் வேடிக்கை யாகச் சொல்வாராம்.

பாலிவுட்டின் 100 சிறந்த நடிகர்கள், பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள் இவர்களின் பின்னணியில் முகமது ரஃபியின் திறமை பளிச்சிட்டது குறித்து ஒரு முழு புத்தகமே எழுத முடியும். நான் இங்கு ஒரு நடிகரை மட்டுமே உதாரணமாகக் குறிப்பிடுகிறேன்.

1957ம் ஆண்டு வெளியான தும்ஸா நஹின்தேகா என்ற படத்தின் மூலம் நடிகர் ஷம்மி கபூர் பிரபலமானதற்கு முகமது ரஃபி பாடிய மூன்று பாடல்களே காரணம். அப்படம் வெளியாவதற்கு முன்னர் ஷம்மி கபூர் நடித்த படங்கள் தோல்வியையே தழுவின. ரஃபியின் அழுத்தமான கணீர் குரல் ரசிகர்களை மெய்மறக்கச் செய்தது என்றால் ஷம்மி கபூரின் நடிப்பாற்றலும் வெற்றிக்கு உதவின. ஜங்லீ படத்திலும் ஷம்மி கபூருக்கு தனது இனிமையான குரல் மூலம் பின்னணி கொடுத்தார் ரஃபி. சைரா பானு-ஷம்மி கபூருக்காக இரண்டு பாடல்களை அவர் பாடியுள்ளார். சாஹேகோயி முஜ்ஹேஜங்கிலாகே, யாஹூ மற்றும் எஹ்ஷன் தேரா ஹோகாமுஜேபார் ஆகிய பாடல்கள் வெற்றி நடைபோட்டன. நடிகர் ஷம்மி கபூருக்காக முகமது ரஃபி 190 பாடல்களைப் பாடியுள்ளார்.

தனது திரையுலக வாழ்க்கை யில் முகமது ரஃபி 5,063 பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றில் 4,225 பாடல்கள் ஹிந்தி படப்பாடல்கள். 1967ம் ஆண்டு முகமது ரஃபிக்கு பத்மஷ்ரீ விருது வழங்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டில் சிறந்த பின்னணி பாடகருக்கான தேசிய விருது கிடைத்தது. இது தவிர 6 பிலிம்பேர் விருதுகளையும் அவர் பெற்றுள்ளார். ''சௌத்வின் கா சந்த்'', ''தேரி பியாரிபியாரிசூரத் கோ'', ''சாஹுங்கா மைன் துஜேஸான்ஞ்சவேரே'', ''பஹரோன்பூல்பர்ஸாவ்'', ''தில்கேஜாரோகேமின்'', ''க்யாஹுவா தேரே வாதா'' ஆகிய பாடல்களுக்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

2001ம் ஆண்டில் ஹீரோ ஹோண்டா மற்றும் ஸ்டார்டஸ்ட் பத்திரிகையின் சார்பில் இந்த நூற்றாண்டின் (மில்லேனியம்) சிறந்த பின்னணிப் பாடகராக அறிவிக்கப்பட்டார்.

1970களின் தொடக்கத்தில் மற்றொரு பின்னணிப் பாடகர் கிஷோர் குமார் முதல் நிலைக்கு வந்தபோது முகமது ரஃபியின் சினிமா வாழ்க்கையில் பின்னடைவு ஏற்பட்டது. அந்த சமயத்தில் பெரும்பாலான ஹிந்தி பட தயாரிப்பாளர்களும்,

இசையமைப்பாளர்களும் கிஷோர் பின்னால் சென்றனர். பின்னர் 70களின் நடுப்பகுதியில் ரஃபி மீண்டும் எழுச்சி பெற்றார். ஆனால், 1980ல் அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

### ரஃபியின் சில முக்கிய நிகழ்வுகள்

ஓ.பி.நய்யாரின் கவர்ச்சியான, விறுவிறுப்பான, துடிப்பான டியூன்களை ரஃபி நேசித்தார். நான் ஹிந்தி படஉலகில் நிறைய பாடகர்களை பார்த்திருக்கிறேன். ஆனால், O P நய்யார் போன்ற சிறந்த பாடகரை நான் பார்த்தில்லை என்பார் முகமது ரஃபி. ஆனால், 1966ம் ஆண்டில் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சங்கர் ஜெய்கிஷன் படத்துக்காக “சாவன் கி கதா” என்ற பாடல் பதிவுக்கு ரஃபி தாமதமாக வந்தார். தாமதத்தைவிட அவர் சொன்ன காரணம் நய்யாருக்கு கோபத்தை ஏற்படுத்தியது. உடனடியாக பாடல் பதிவை ரத்துச் செய்தார். இனி எனக்காக ரஃபி பாடத்தேவையில்லை என்றார். இதையடுத்து தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அவர்கள் இருவரும் சேர்ந்து பணியாற்றவில்லை. பின்னர் ஒரு நாள் O P நய்யாரை சந்தித்துப் பேசினார் ரஃபி. அது முதல் மீண்டும் இணைந்தனர்.

S D பர்மன் இசையமைப்பில் ரஃபி, பல படங்களில் தனது திறமையை வெளிப்படுத்தினார். இசைக்குயில் லதா மங்கேஷ்கரும் முகமது ரஃபியும் ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் ஒதுங்கி யிருந்தனர். 1967ம் ஆண்டு மும்பை ஷண்முகானந்தா அரங்கில் நடைபெற்ற S D பர்மன் இசை நிகழ்ச்சியில் இருவரும் மீண்டும் ஒன்று சேர்ந்தனர். அந்த நிகழ்ச்சியில் தொகுப்பாளராக இருந்த நர்கிஸ், மதன் மோகன் இருவரும் உங்களுக்கு எல்லாம் ஒரு ஆச்சர்யம் காத்திருக்கிறது என்று சொன்ன போது லதா, ரஃபி இருவரும் எதிர் எதிர் முனையிலிருந்து மேடைக்கு வந்தனர். உடனே ரசிகர்கள் ஆரவாரத்துடன் கைதட்டி அவர்களை வரவேற்றனர்.

1973ம் ஆண்டு “தர்மா” படத்துக்காக முகமது ரஃபியும் ஆஷாவும் சேர்ந்து பாடும் கவாலி பாடலை இசைமைப்பாளர் ஓமி பதிவுசெய்தார். ஓமி அந்த பாடலை மறு பதிவு செய்யவேண்டும் என்றபோது ரஃபி, தயக்கம் காட்டினார். அடுத்த நாள் காலையில் ரஃபி, அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இரண்டு பெரிய ஒலிப்பெருக்கிகளுடன் ஓமியைச் சென்று பார்த்து முதல்நாள் பதிவு செய்யப்பட்ட கவாலி பாடலை கேட்குமாறு கூறினார். முடிவு- மறுபதிவு இல்லை. இந்த ஒலிப்பெருக்கிகள் இரண்டும் உங்களுக்குத்தான் என்றார் ரஃபி. அந்த பாடலுக்காக ரஃபி வாங்கிய கட்டணம் மூவாயிரம் ரூபாய். ஆனால், அவர், ஓமிக்கு பரிசாகக் கொடுத்த ஒலிப்பெருக்கிகளின் விலை ரூ.20,000. இதுதான் ரஃபி என்றார் ஓமி.

### இந்தியாவிலும், வெளிநாட்டிலும் ரஃபியின் இசை நிகழ்ச்சிகள்

1960ம் ஆண்டு கிழக்கு ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டதன் மூலம் வெளிநாடுகளில் பாடல் நிகழ்ச்சிகளை நடத்தினார். 1962ல் இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் எல்லைப் பாதுகாப்பு படையினரை மகிழ்விக்க இசை நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை அவர் ஏற்றார். இந்த நிகழ்ச்சியில் கிஷோர் குமாரும் பங்கேற்றார். முதல் நாளில் கடுமையான



*லதா மங்கேஷ்கருடன்.*

ஜலதோஷம் மற்றும் தொண்டை கரகரப்பு காரணமாக. அவரது குரல் செயலிழந்தது. அவருக்கு கிஷோர் குமார் இஞ்சி மற்றும் வெதுவெதுப்பான வென்னீரில் தேன்கலந்து கொடுத்தார். அது வேலைசெய்தது. நிகழ்ச்சிநாளன்று காலையில் ரஃபிக்கு குரல் சரியாகிவிட்டது. அன்றைய நிகழ்ச்சியில் அவர் தனது இனிமையான குரலால் ஜவான்களை மகிழ்வித்தார்.

இது 1977ல் நடந்த நிகழ்வு. சஷிகபூர் தனது பிருதிவிராஜ் தியேட்டரை மீண்டும் தொடங்கினார். தனது தந்தை பிருதிவிராஜ் கபூரின் நினைவாக மேற்குவங்க மாநிலம், சிலிகுரியில் அடுத்தடுத்த மாலை நேரங்களில் இரண்டு இசை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார். முதல் நாள் முகமது ரஃபி பாடினார். அவருக்கு நல்ல வரவேற்பு இருந்தது. அமிதாப்பச்சன், ரேகா, ரண்தீர் கபூர் மற்றும் ஷாபனா ஆஸ்மி ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இரண்டாவது நாள் மாலை நிகழ்ச்சியை சுலக்ஷணா பண்ட் மற்றும் அவரது குழுவினர் நடத்துவதாக இருந்தது. ரஃபி காலையில் மும்பை செல்வதற்காக விமான நிலையத்துக்கு புறப்பட்டார். சுலக்ஷணாவும் அவரது குழுவினரும் தவிர்க்க முடியாத காரணங்களால் நிகழ்ச்சிக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது.



*முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவுடன்.*

நிகழ்ச்சிக்கான டிக்கெட் முழுவதும் விற்றுவிட்டதால் ஏற்பாட்டாளர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தனர். இந்த நிலையில் நடிகர் அமிதாப் பச்சன், உடனடியாக விமான நிலையத்துக்குச் சென்று முகமது ரஃபியிடம் நிலைமையைச் சொல்லி அவரை மீண்டும் பாட வருமாறு அழைத்தார். அதை ஏற்று முகமது ரஃபி இரண்டாவது நாள் நிகழ்ச்சியிலும் பாடினார். அவரது பாடலை கேட்டு பார்வையாளர்கள் பிரமித்துபோனார்கள்.



*கிஷோர்குமாருடன்.*

## தனிப்பட்ட வாழ்க்கை

முகமது ரஃபிக்கு நான்கு மகன்கள், மூன்று மகள்கள் என்று மொத்தம் 7 குழந்தைகள். அவரது ஒரே மகன் ஷாஹித் இப்போது உயிருடன் இருக்கிறார். மும்பையில் ஆயத்த ஆடைகள் விற்பனை தொழில் செய்து வருகிறார். ரஃபியின் வீட்டில் தங்கியிருக்கிறார். வீட்டில் ஒரு அறை ரஃபியின் அருங்காட்சியமாக உள்ளது. அதில் ரஃபியின் புத்தகங்கள், புகைப்படங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வைக்கப்பட்டுள்ளன.

சினிமா உலகில் பின்னணி பாடும் தொழிலுக்கு தமது மகன்கள் வருவதை ரஃபி விரும்பவில்லை. இன்னும் சொல்லப்போனால் சினிமாத்துறைக்கே வரக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்தார். அவர், தனது நான்கு மகன்களையும் லண்டனுக்கு அனுப்பி, அவர்கள் சொந்தமாக தொழில் செய்ய வேண்டும் என்று விரும்பினார்.

முகமது ரஃபி எளிமையானவர்,

சிகரெட், மதுபானம் என எந்த கெட்ட பழக்கமும் இல்லாதவர். அவர் எல்லோருடனும் சகஜமாக கலந்து பேசுவது அரிதானது. அவரது ஒரே பலவீனம் சாப்பாட்டுப் பிரியர். இனிப்புகளை விரும்பி சாப்பிடுவார். அவருக்கு சர்க்கரை நோய் இருந்தது. அதனால் இனிப்புகளை சாப்பிடக்கூடாது என்று மனைவி பில்குயிஸ் அவரை அவ்வப்போது கட்டுப்படுத்துவார். சூடான பாலில் பாதம், கிராம்பு, ஏலக்காய் கலவையுடன் மனைவியால் தயாரித்து கொடுக்கப் படும் தேநீரையே அவர் குடித்து வந்தார். எங்கு சென்றாலும் பிளாஸ்கில் தேநீர் கொண்டு செல்வது அவரது வழக்கமாக இருந்தது.

கேரம், பூப்பந்து விளை யாடுவது அவரது பொழுது போக்காகும். தவிர காத்தாடி பறக்க விடுவதில் அவருக்கு அலாதி பிரியம். குத்துச்ச ண்டைவீரர் முகமது அலியின் பரம ரசிகர். 1979ம் ஆண்டில் கென்டுகி மாகாணத்துக்கு பாட்டு கச்சேரிக்காக சுற்றுப்பயணம் செய்தபோது குத்துச்சண்டை வீர்ர முகமது அலியை நேரில் சந்திக்க விரும்பினார். ஆனால், இந்தியாவில் உள்ள பிரபல பாடகரான முகமது ரஃபி, தம்மை சந்திக்க விரும்பதை அறிந்த முகமது அலி, நேராக முகமது ரஃபி இருக்கும் ஹோட்டலுக்கே வந்துவிட்டார். முகமது அலியின் ஆலோசனையின் பேரில் இருவரும் குத்துச்சண்டை போடுவது போல புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர். விதம்விதமான கைக்கெடிகாரங்களை அணிவதில் ரஃபிக்கு நாட்டம் அதிகமாக இருந்தது. இதேபோல நவீன வசதிகள் கொண்ட கார்களை வாங்குவதிலும் அவருக்கு ஆர்வம் இருந்தது. லண்டனில் அவர் வாங்கிய நீல நிற ஆடி கார் அவருக்கு மிகவும் பிடித்தமானது.

ரஃபியின் மிகவும் தாராள குணம் படைத்தவர். ஒருமுறை பிச்சைக் காரர் ஒருவர் அவரிடம் காசு கேட்டபோது, ரஃபி,



அஷோக் குமாருடன்.

தன்கையிலிருந்து அத்தனை பணத்தையும் அவரிடம் கொடுத்துவிட்டார். “பணத்தை கொடுப்பதற்கு முன் அதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டாமா?” என்று நண்பர் கேட்டபோது, “கடவுள் எனக்கு பணம் கொடுக்கும்போது எண்ணியா கொடுக்கிறார். இல்லையே. அப்படியிருக்கும்போது நான் ஒருவருக்கு கொடுக்கும்போது ஏன் எண்ணிப் பார்க்க வேண்டும்” என்றார்.

கடந்த 1980ம் ஆண்டு ஜூலை 30ம் தேதி திடீரென ரஃபிக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. இரவு 10.25 மணிக்கு அவர் மரணமடைந்து விட்டார். இங்கிலாந்து நாட்டில் உள்ள பிர்மிங்ஹாமில் அவருக்கு கோயில் கட்டப்பட்டுள்ளது. ஆமதாபாதைச் சேர்ந்த ரசிகர் ஒருவர் தனது இல்லத்திலேயே ரஃபிக்கு கோயில் மற்றும் அருங்காட்சியகத்தை அமைத்துள்ளார். ஆனால், முகமது ரஃபி லட்சக்கணக்கான ரசிகர்களின் இதயங்களில் குடிகொண்டுள்ளார் என்கிறார் ஜாவித் அக்தர். உண்மைதானே!

கட்டுரையாளர் RC மெட்ராஸ் சவுத் உறுப்பினர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

## பெண்களை மட்டும் கொண்ட சங்கங்கள், உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதில் கவனம்

**ஹரீஷ் குமார் கௌர்**
HR கன்சல்டன்சி, RC பிவாடி, RID 3053



ஹரீஷ் கௌருடைய பதவிக்காலம் இரண்டாம் ஆண்டாக நீட்டிக்கப் படுகிற நேரத்தில் அவர் கூறுகிறார், கோவிட் தொடர்பான பிரச்சனைகள் காரணமாக, நான் உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதிலும், சரியான ரோட்டரியன்களை ஒரு நோக்குநிலைப் பொருத்தத்துக்குப் பின் சேர்த்து, அதன் மூலம் அவர்கள் சங்கங்களில் இருந்து விலகாதபடி செய்வதற்குச் சிறப்பு முயற்சிகள் எடுப்பதிலும் ஆர்வமாக உள்ளேன்.

64 சங்கங்களில் 2,800 உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கையை 10 சதவிகிதம் வளர்க்க இயலும் என்று இவர் நம்புகிறார். ராஜஸ்தானில் ஏற்கெனவே ஏழு "பெண்களைமட்டும் கொண்ட" சங்கங்கள் உள்ளன, அந்த எண்ணிக்கையில் இந்த மாவட்டம் இன்னொரு சங்கத்தைச் சேர்க்கும், ஒவ்வொரு சங்கமும் இந்த மாவட்டத்தில் குறைந்தது ஒரு ரோடராக்ட் சங்கத்தை ஆதரிக்கவேண்டும் என்பது என் விருப்பம். இந்த ஆண்டின் தொடக்கத்தில் 900 என அமைந்திருந்த ரோடராக்டர்களின் எண்ணிக்கையை, இந்த ஆண்டு நிறைவில் 1,500க்கு உயர்த்தவும் இவர் பணியாற்றிவருகிறார்.

குவாலியருக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் கௌர் தொடங்கிவைத்த ஒரு மிகப் பெரிய நீர் அணை (GG: $70,000) 25 கிராமங்களின் நீர்ப்பாசனத்தை மேம்படுத்தும், பிற நீர்த் தேவைகளை நிறைவேற்றும். நிலத்தடி நீரைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, இதன் கரைகளில் 1,000க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நாங்கள் நட்டுள்ளோம். இந்த அணையில் மீன் வளர்த்தலும் நடத்தப்படும்" என்கிறார் இவர்.

கௌர், CSR நிதியளித்தலுடன் 28 மகிழ்ச்சிப் பள்ளிகளையும் உருவாக்குவார், இதற்காக ஏற்கெனவே இரண்டு GGகள் ($155,000) அங்கீகாரம் பெறும் செயல்முறையில் உள்ளன. அஜ்மீரிலுள்ள அரசு மருத்துவ மனையில் ஒரு GG திட்டத்தின்கீழ் ($62,000) OT கருவிகள் நிறுவப்படுகின்றன.

RC பிக்கனெர், ஆறு இயந்திரங்களுடன் SDCL டாகா ரோட்டரி டயாலிசிஸ் மையத்தைத் தொடங்கியுள்ளது, நாங்கள் அரசு மருத்துவமனைகளுக்கு 20 செயற்கை மூச்சுவிடல் இயந்திரங்களை வழங்கினோம், என்கிறார். இவர் TRFக்கு $300,000 திரட்டுவார்.

ஒரு பண்பாட்டு NGOன் உறுப்பினர் என்றமுறையில், என் நண்பர்கள் மூலம் நான் ரோட்டரிக்குள் இழுக்கப்பட்டேன், 2006ல் RC பிவாடி-யின் உறுப்பினரானேன்.

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்



## நாங்கள் நேருக்கு நேர் சந்திக்கும் கூட்டங்களை மீண்டும் தொடங்க விரும்புகிறோம்

**தினேஷ் சந்திர சுக்லா**

**பட்டயக் கணக்காளர், RC கான்பூர் வெஸ்ட், RID 3110**

கோவிடால், RID 3110ன் உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி மற்றும் சமூகத் திட்டங்களில் உறுதியற்ற சூழ்நிலை மேலும் தொடர்கிறது என்கிறார் தினேஷ் சுக்லா. உறுப்பினர்கள் ஒருவழித் தகவல் தொடர்புகளைமட்டும் விரும்புவதில்லை, இருவழி உரையாடல்களையும் விரும்புகிறார்கள், ஆகவே, இதுபோன்ற இணையக் கூட்டங்களில் ஆர்வம் குறையத் தொடங்கியுள்ளது'' என்கிறார் இவர்.

இரண்டாவதாக, மத்திய UPல் பொருளாதாரச் செயல்பாடுகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன, நடுத்தர வகைத் தொழில் வல்லுனர்கள், தொழில்புரிவோர் மற்றும் வணிகர்கள் நேருக்கு நேர் சந்திப்பதையும், இணைந்து பணிபுரிதல் வாய்ப்புகள், வளர்ச்சியைப் புதுப்பிக்கும் பணிகளை ஆராய்வதற்கான பரிமாற்றங்களை ஒருவரோடொருவர் நிகழ்த்துவதையும் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், அடுத்த ஆண்டு ஜூன் மாதவாக்கில் 300 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து, உறுப்பினர் எண்ணிக்கையை 4,200க்குக் கொண்டுசெல்ல இயலும் என்று நான் நம்புகிறேன். நோய்ப்பரவல் குறைந்ததும், நேருக்கு நேர் சந்திக்கும் கூட்டங்களை மீண்டும் தொடங்கலாம் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்த மாவட்டத்தில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 சதவிகிதமாக உள்ளது. பெண்களில் பெரும்பாலானோர் இல்லத்தரசிகளாக உள்ளார்கள், தொழில்முனைவோராக இல்லை, ஆகவே, சங்கங்களில் கூடுதல் பெண்களைச் சேர்ப்பது கடினம். கான்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 10 இயந்திரங்களைக் கொண்ட ஒரு டயாலிசிஸ் மையத்தை சுக்லா தொடங்கிவைப்பார் (GG: சுமார் ரூ.75 லட்சம்).

அவர் TRF வழங்கலுக்கு $100,000 திரட்டுவார். கான்பூர், ஆக்ரா, அலிகர் மற்றும் காசிப்பூரில் (உத்தர்காண்ட்) நான் சுமார் 50 மகிழ்ச்சிப் பள்ளித் திட்டங்களை உருவாக்குவேன், என்கிறாரர். பட்டயக் கணக்காளராக ஆனபிறகு, 1987ல் இவர் RC கான்பூர் கங்காகட்டில் சேர்ந்தார், இதற்குக் காரணம் பலரைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகச் சமூகச் சங்கங்களில் சேரச்சொல்லி சக தோழர்களின் அழுத்தம்தான். மிக விரைவில், அவர் ரோட்டரியன் ஆனார், RC கான்பூர் வெஸ்டுக்கு மாறினார்.



## ஜாம்பியாவுக்கு ஒரு மருத்துவக் குழுவை அனுப்பத் திட்டமிடுகிறார்

**ஹரீஷ் மோத்வானி,**

**மருந்துப் பொருள் டிஸ்ட்ரிப்யுட்டர், RC பீட் மிட்-டவுன், RID 3132**

கோவிட் சவால்களுக்கிடையில் நான் பணியாற்றுகிற'' கவனப் பகுதிகளில் ஒன்று, உறுப்பினர்களைத் தக்கவைத்தல். ஆனால், குறைந்தது 600 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து, ரோட்டரி ஆண்டு நிறைவுக்குள் உறுப்பினர் எண்ணிக்கையை 4,000ஐத் தொடச்செய்ய இயலும், அதன்மூலம், 20 சதவிகித வளர்ச்சியைப் பெற இயலும் என்று நான் நம்புகிறேன்'' என்கிறார் ஹரீஷ் மோத்வானி. இவர் ஜூன் 2021க்குள் குறைந்தது 100 பெண் உறுப்பினர் களை இணைக்கவும் ஆவலாக உள்ளார், இதன் மூலம், அவர்களுடைய எண்ணிக்கை 10.8 சதவிகிதத்திலிருந்து 13.8ஆக உயரும்.

இந்த மாவட்டத்தின் ரோடராக்ட் சங்கங்கள் எண்ணிக்கையை 50க்குக் கொண்டு செல்லவுள்ளார், நாங்கள் ரோடராக்டர்களுடைய எண்ணிக்கையைக் கிட்டத் தட்ட இருமடங்காக்கிச் சுமார் 1,600ஐ எட்டவுள்ளோம். நான் 100 புதிய இன்டராக்ட் சங்கங்களைத் திறக்கவும் இலக்கு நிர்ணயித்துள்ளேன், இவற்றில் 18 ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு விட்டன என்றார். இந்த மாவட்டம் 100 கிராமங்களைத் தத்தெடுத்து, உள்ளது.

அகமத்நகரில் உள்ள மேக் கேர் மருத்துவமனையில் நான்கு இயந்திரங்களைக் கொண்ட ஒரு டயாலிசிஸ் மையம் திறக்கப்படும் (GG: $48,000). இவர் TRF வழங்கலுக்கு 180,000 இலக்கு நிர்ணயித்துள்ளார்.

இந்த மாவட்டம், ஜம்முவில் அல்லது ராஞ்சிக்கு அருகிலுள்ள ஒரு தொலைதூரக் கிராமத்தில் ஓர் அறுவைச் சிகிச்சை முகாமை நடத்தும். மே-ஜூன் மாதவாக்கில் 20 மருத்துவர்கள் மற்றும் ஐந்து தன்னார்வலர்களைக் கொண்ட மருத்துவக் குழுவை ஜாம்பியாவுக்கு அனுப்புவதற்கான பேச்சுகளை நாங்கள் நடத்திவருகிறோம்'' என்றார் மோத்வானி. உள்ளூர் ரோட்டரியன்கள் நடத்திய போலியோப்ளஸ் பரப்புரையால் இவர் ஈர்க்கப்பட்டார், மூத்த ரோட்டரி யனாகிய என் சகோதரர் தான் என்னுடைய வழிகாட்டி, தீர்மானமெடுப்பதில் அவர் எனக்கு வழிகாட்டுகிறார்'' என்றார்.



## மிகப் பெரிய GG திட்டங்களில் கோவிட் பராமரிப்பு மையங்கள்

**சங்க்ராம் விஷ்ணு படீல்**

**பொறியியல் ஏற்றுமதி, RC கோல்ஹாப்பூர் மிட்-டவுன், RID 3170**

கோல்ஹாப்பூரில் ஐந்து கோவிட் பராமரிப்பு மையங்களை அமைப்பது உள்ளிட்ட ரூ.4 கோடி மதிப்புள்ள பல கோவிட் தொடர்பான GG திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. $84,000 மொத்தச் செலவில் நிறைவேற்றப் படும் இந்த மிகப் பெரிய திட்டத்துக்காக, இந்த நகரில் உள்ள 14 சங்கங்களும் ஒன்றாகச் சேர்ந்துள்ளன. ஒவ்வொரு மையத்திலும் ICU படுக்கைகள், கோவிட் சிகிச்சைக்கான பிற கருவிகள் நிறைந்துள்ளன'' என்கிறார் சங்க்ராம் படீல்.

மகாராஷ்டிரத்தின் சங்க்லி மாவட்டத்திலுள்ள மிராஜிலிருக்கும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்கும், கோவா மருத்துவக்கல்லூரிக்கும் ஸ்வாப் (Swab) பரிசோதனைக் கருவி நன்கொடையாக அளிக்கப் பட்டது. பெல்காமில், KLE மருத்துவமனைக்குப் பத்துச் செயற்கை மூச்சுவிடல் கருவிகள் வழங்கப்பட்டன; ஹூப்ளி மருத்துவமனைகளில் இரண்டு டயாலிசிஸ் மையங்கள் அமைக்கப்பட்டன.

படீல் குறைந்தது 10 மகிழ்ச்சிப் பள்ளித் திட்டங்களை நிறைவேற்ற ஆர்வமாக இருக்கிறார், ஹோப் எக்ஸ்பிரஸ் என்ற பெயரில் புற்றுநோயைக் கண்டறியும் பேருந்து ஒன்று இயக்கப்படும். தன்னுடைய பதவிக்காலத் தின்போது 700 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து, உறுப்பினர் எண்ணிக்கையை 6,000ஐக் கடந்து வெகுதொலைவுக்குக் கொண்டுசெல்லலாம் என்று படீல் நம்புகிறார். ஏற்கெனவே உள்ள சங்கங்களின் எண்ணிக்கையான 133 உடன் ஏழு புதிய சங்கங்களை நான் சேர்ப்பேன். அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் அவர் 30 புதிய ரோடராக்ட் சங்கங்களைப் பதிவுசெய்வார், ரோடராக்ட் சங்கங்களின் எண்ணிக்கையை 95க்குக் கொண்டுசெல்வார். ரோடராக்டர்களுடைய எண்ணிக்கை சுமார் 2,000இலிருந்து குறைந்தது 2,700க்கு உயரவுள்ளது. TRF வழங்கலைப் பொறுத்தவரை, இவர் $1 மில்லியன் திரட்ட இயலும் என்று நம்புகிறார். படீல் நிலை-2இலிருந்து நிலை-3 மிகப் பெரிய நன்கொடையாளர் நிலைக்கு முன்னேறுவார்.

நான் என் தாயைப் பார்த்து ஊக்கம் பெற்றேன், அவருடைய அறிவுரைகளின் செல்வாக்கால் நான் 1993–94ல் RC கோகுல் ஷிர்காவ்னில் சேர்ந்தேன் என்கிறார் இவர்.

## மருத்துவ நல்கைகள், மகிழ்ச்சிப் பள்ளிகளுக்குதான் உயர்ந்த முக்கியத்துவம்



**கருணேஷ் K ஸ்ரீவஸ்தவா**

**மருத்துவச் சேவை, RC பராபன்கி, RID 3120**

இவருடைய முதன்மையான நோக்கம், உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொள்வது, ஜூன் மாதத்துக்குள் 500 புதிய ரோட்டரியன்களை இணைத்து, மாவட்டத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை 4,000க்குக் கொண்டுசெல்வது. நான் 7–8 சங்கங்களைத் தொடங்கத் திட்டமிடுகிறேன், முற்றிலும் பெண்களைக் கொண்ட இரண்டு சங்கங்களை ஏற்கெனவே நிறுவிவிட்டேன், இன்னொன்றும் இந்த வரிசையில் விரைவில் சேரவிருக்கிறது'' என்கிறார் கருணேஷ் K ஸ்ரீவஸ்தவா.

இந்த மாவட்டத்தில் 49 ரோட்டராக்ட் சங்கங்கள் உள்ளன, இவற்றில் 450 ரோட்டராக்டர்கள் உள்ளார்கள். ஜூன் 2021க்குள் இந்த எண்ணிக்கை 1,000ஐத் தொடும்.

இருபத்தாறு மகிழ்ச்சிப் பள்ளிகள் (GG: $120,000, இரண்டு CSR நல்கைகள்: $100,000) கோரக்பூரில் செயல் படுத்தப்படுகின்றன. நாங்கள் மின் கற்றல் வசதிகள், வயது வந்தோர் கல்வி மையங்கள் மற்றும் பிற RILM வசதிகளை அமைக்கிறோம். கை கழுவும் நிலையங்கள் நிறுவப்படுகின்றன, கழிப்பறைத் தொகுதிகள் புதுப்பிக்கப் பட்டு, பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட பகுதிகளாக ஆக்கப்படுகின்றன.

பிளாஸ்டிக் இல்லாத வாழ்க்கை முறையை வலியுறுத்தும் ஒரு மிகப் பெரிய பரப்புரை வாரணாசியில் தொடங்கப்பட்டது; வீணான பிளாஸ்டிக் பொருட்கள் மின்சார உற்பத்திக்காக ஒரு மறுசுழற்சி மையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. TRFக்கான இவருடைய இலக்கு, 150,000.

$100,000 மதிப்புள்ள மருத்துவக் கருவிகள் கோரக்நாத் அறக்கட்டளை மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது, இந்தத் தொகை, CSR நிதிகளின் வழியாகத் திரட்டப்பட்டது. அதே நேரம், $300,000 மதிப்புள்ள ஒரு GGன் கீழ், புற்று நோய்க்குச் சிகிச்சையளிக்கும் கருவி பெறப்பட்டது. கண் புரை அறுவைச் சிகிச்சைகள் மற்றும் வேறு 10,000 கண் அறுவைச் சிகிச்சைகளும் திட்டமிடப்படுகின்றன.

RC கோரக்பூர் கோவிட் பரிசோதனைக் கருவியை 2006ல், PDG அலோக் மர்வாஹா ஸ்ரீவத்சவா-வை RC பராபன்கியில் இணைத்தார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

### பள்ளிகளில்-WASH இலக்குச் சவால்

ஜூன்'20 அறங்காவலர்கள் கூட்டத்தில், அறங்காவலர்கள் வாரியம், பள்ளிகளில் WinS வழி நடத்தல் குழுவின் ஆலோசனை ஏற்றுக் கொண்டது, கோவிட் நோய்ப் பரவலால் WinS இலக்குச் சவால் வெள்ளோட்டத் திட்டத்தை ஓராண்டுக்கு நீட்டிப்பதை அங்கீகரித்தது. இந்த வெள்ளோட்டம் இப்போது ஜூன் 2021ல் நிறைவடையவுள்ளது, அனைத்து அங்கீகரிப்பு விண்ணப்பங்களும் பிப்ரவரி 20, 2021க்குள் TRFக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும், கூடுதல் தகவல்களுக்கு, SAOல் உள்ள reeti.mondal@rotary.orgஐ அணுகுங்கள்.

### இணையப் பங்களிப்பு: நினைவில் வைக்கவேண்டிய விஷயங்கள்

- பற்று அட்டைத் தெரிவு www.Rotary.org அல்லது www.rotaryfoundationindia.org வழியாக இணையப் பங்களிப்புகளை நிகழ்த்தும் போது, உறுப்பினர்கள் Credit card என்ற இணைப்பைப் பயன்படுத்தியே இந்த இரண்டு அட்டைகளிலிருந்தும் பணம் செலுத்தலாம்.
- உங்கள் சங்கம்/மாவட்டத்திலிருந்து ரோட்டரியன் இல்லாத இணையப்பங்களிப்பு செய்யப் படும் போது, இணைய உறுதிப் படுத்தல் எண்ணையும் சங்கத் தகவல்களையும் risao@rotary.org, முகவரிக்கு தெரியப்படுத்தவும். இதன்மூலம், அந்தப் பங்களிப்பு தொடர்புடைய சங்கத்துடன் இணைக்கப்படும்.

### கோவிட் நேரத்தில் பொதுத் தோற்றம்

- தொலைதூரக் கற்றலுக்கான மற்றும் RIன் இணையக் கருவிகள் மற்றும் வளங்களை அணுகுவதற்கான வளங்களில் மக்களுக்குப் பயிற்சி வழங்குங்கள்.
- உங்கள் சங்கத்தின் இணையத்தளம், குரல் மற்றும் ஒலி அடையாள வழிகாட்டுதல்களில் (என் ரோட்டரியில் உள்நுழைந்த பின் பிராண்ட் மையத்தில் கிடைக்கிறது) விவரிக்கப் பட்டுள்ள ரோட்டரி பிராண்ட் அடையாள வழிகாட்டுதல்களைப் பயன்படுத்திச் சமீபத்திய தகவல்களுடன் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- உங்கள் சங்கம் செய்கிற அனைத்து நல்ல பணிகளையும் மெய்நிகர் தொழில்நுட்பத்தின் வழியாகப் பொதுமக்களுக்குத் தெரிவியுங்கள்.
- உங்களுடைய சேவைப் பணிகளை ஃபேஸ்புக் லைவ், யூட்யூப் லைவ், அல்லது பெரிஸ்கோப் போன்ற கருவிகளைப் பயன்படுத்தி நீங்கள் நேரடியாகவும் ஒளிபரப்பலாம்.
- சேவைத் திட்டங்களைச் சமூக மற்றும் டிஜிட்டல் சானல்களில் முன்னிறுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்துங்கள்.■

---

# அடுஸ் கிராமத்தில் ஒரு மருத்துவ முகாம்

ரோட்டரி செய்திக்குழு




RC ஆக்ரா தாஜ் சிட்டி, RID 3110, ரெயின்போ மருத்துவமனை மற்றும் மயங்க் அமைப்புடன் சேர்ந்து, ஆக்ராவிலிருந்து 15கிமீ தொலைவிலுள்ள அடுஸ் என்ற கிராமத்தில் ஒரு மருத்துவமுகாமை நடத்தினார்கள். பெண்கள், குழந்தைகள் உள்பட 300க்கும் மேற்பட்ட கிராமவாசிகள் இந்த முகாமால் பயன் பெற்றார்கள். இவர்களுக்கு நோயெதிர்ப்பாற்றலை மேம்படுத்தும் மருந்துகளும் வழங்கப்பட்டன.

பெரும்பாலான பார்வையாளர்கள் கோவிடுடன் தொடர்புடைய கூடுதல் தகவல்களை விரும்பியதால், இந்தத் தலைப்பில் மருத்துவர்கள் ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தி னார்கள். கூடுதல் மருத்துவ ஆய்வு தேவைப் பட்டவர்கள் ஆக்ராவிலுள்ள மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக் கப்பட்டார்கள்.■

Wordsworld

# New year, old experiences

**Sandhya Rao**

History is a spinning wheel, the future lies ever-present in the past.

When *Schindler's List* the film was released, in 1993, it created a sensation. What many don't know is that the manner in which this true story was unearthed by a writer in Australia is even more sensational. Thomas Keneally then went on to publish the book, *Schindler's Ark*, in 1992. I was reminded of Oskar Schindler by the book I am currently reading: *The Last Train to London* by Meg Waite Clayton, published in September 2019. To quote from the book's blurb, it is: '…set in the pre-World War II era, based on the true story of the Kindertransport rescue of ten thousand children from Nazi-occupied Europe — and of one brave woman who helped them escape.'

This woman is Truus (Geertruida) Wijsmuller, a Dutchwoman, who dares to go into Germany over and over again, crossing its tightly secured borders to smuggle children out even as countries across Europe pull down their shutters, refusing to take in refugees desperate to escape the Nazi occupation. When the British government — alone among many countries — decides to open its doors to take in child refugees, Tante Truus — Aunty Truus — steadfastly remains true to her efforts to save as many children as she can despite the huge dangers her mission involves.

Clayton's story about this extraordinary woman and her even more extraordinary efforts is marvellously told. It's not just an account of the rescue missions, amazing in themselves. Woven into its fabric is a parallel story, that of young Stephan Neumann, whose father is a chocolatier proudly carrying on the family tradition. His mother is sick, dying in fact, his little brother Walter's best friend is a stuffed toy called Peter Rabbit, and he himself is a budding playwright, admirer of Stefan Zweig, among the most famous Austrian writers of his time. His family is Jewish, cultured and rich, a fact he's forced to come to terms with only when the Anschluss, the takeover of Austria by Hitler, becomes real. Apart from the danger his family is put into, Stephan experiences being 'distanced' from his best friend, Zofie-Helene, a mathematics genius whose mother is editor of an anti-Nazi newspaper.




Be warned: it's a slow read because the fine details take time and attention to comprehend, the nuances to absorb, and you begin to realise things you may not have in all your years of reading Jewish writers and writings about the Holocaust. Your heart is in your mouth when, on numerous occasions, Truus is called upon to negotiate tricky situations when crossing the border, or rather, borders, because there's the border out of Germany and there's the border into the Netherlands, where she lives and where she must first take the children. When she somehow manages to get visas for the children and the party of two adults and 30 children are ready to board the train, she finds a baby thrust into her arms. 'Take her,' the desperate mother tells Truus. When Nazi soldiers search her boot for contraband, live and otherwise, she must maintain a calm exterior while inside she is trembling like jelly because three children, little sisters, are hidden beneath her skirt and the floorboard of the car. On occasion she notices just how young these soldiers are, children themselves, almost innocent in their loyalty to the cause of the Third Reich. It is heartrending when Stephan discovers that Dieter, a friend who played so many roles in his plays, turns against him and dons the Nazi uniform without a second's thought.




He then accompanies soldiers into the Neumann household to destroy it in a show of strength. Dieter feels guilty but his loyalty to Hitler overrides everything and even as he expresses concern for Stephan's mother, he is desperate to catch Stephan who has disappeared. You see the tragedy, the injustice, the cruelty, the pathos, the exploitation. Everywhere you see dualities.

The idea of contradictions is brilliantly delineated in the style of writing and the language itself, and seems to bounce off the characters of Zofie and Stephan, so different from each other yet not apart. You not only find yourself drawn to the story, you stop every now and then to marvel at the images, especially the paradox of the real and the unreal, as in theatre, or the taste of chocolates, or watching a Jewish children's home burning in the snow. Tante Truus saves countless children; she herself is childless, having miscarried many times. All this surfaces delicately, like froth that leaves traces on the lips after they have smacked on a much-relished milkshake.

How did the author chance upon this story? From her own child! Her son was a member of a theatre group; its director had wanted his kids to write a play about the Kindertransport effort since few people seemed to know about it. She noticed how silent her son had become after he had interviewed some people who had been so transported. She writes how the 'book was inspired by and is meant to honour Truus Wijsmuller-Meijer and the children she rescued, as well as the many people who made the Kindertransports possible. I have done my best to remain true in spirit to the facts of the Anschluss, Kristallnacht, and the shockingly rapid change in Vienna society in the few months between the two, including the role of the then-young and ambitious Adolf Eichmann, and the British and Truus's efforts to bring about the first Kindertransport from Austria. But as this is fiction rather than a history, I have taken smaller liberties in the interest of story.'

It is true, though, that most of the rescued children never saw their parents again. *The Guardian* of November 6, 2018, has an article by Stephen Moss with a photograph of Jewish children arriving in London in 1938. The article speaks of an exhibition opening at the Jewish Museum in London that featured the stories of six children who had come like this to the UK from Germany. 'I visited each one of them [then in their 80s and 90s] in their homes and heard their remarkable, moving, often tragic testimonies,' writes Moss. 'Some never saw their parents again; all suffered the pain of separation; some were so traumatised they couldn't speak of what had happened to them for decades afterwards — not even to their children. But in each the light of defiance, humour and commitment to life shines through. And each now goes into schools to talk to young people about what they and their parents suffered, testifying both as an act of remembrance towards their parents but also as a warning to the next generation that intolerance, hatred and scapegoating of minorities are ever-present threats.'



Truus Wijsmuller-Meijer in 1965.

We know this better than ever today: that intolerance, hatred and scapegoating of minorities are ever-present threats. That even as many cried 'never again' after the holocaust years, we see history repeating itself in Kosovo, Bosnia, Chechnya, Sudan, Sri Lanka, Kashmir, Nagaland, Syria, Columbia…. In practically every part of the world we see people turning against people simply because they can. History and records tell us that the mass extermination of Jews was the result of a carefully planned policy; orchestrated anti-Jewish violence was part of what was called 'the Final Solution'. We know, too, that history is an ever-spinning wheel.

That's why it is important to read books such as *The Last Train To London* — to read and remember the past, so that we can imagine a future for our children. So that children will never need to be separated from their parents again, even in the name of mercy. ■

# பெண்களே உடல் நலம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை!

ஷீலா நம்பியார்

பெண்கள் தங்கள் உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். உங்களின் உடல் தகுதி மற்றும் தேக ஆரோக்கிய நிலையை புறக்கணித்தால் வாழ்க்கைத் தரம் மோசமான நிலைக்குச் சென்று விடும் என்பதுடன் மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தி விடும். உடல் எடை தொடர்ச்சியாக அதிகரித்துவந்தால் அதுவும் பல சிக்கல்களை ஏற்படுத்தி விடும்.

நமது உடல் எடை அதிகரிப்பு நமது வயத்துக்கு ஏற்றவாறுதான் இயல்பாக இருக்கிறது என்று எத்தனை முறை நாம் சொல்லியிருக்கிறோம்? நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், மனச்சோர்வு, இதயநோய் போன்ற தொற்று அல்லாத நோய் ஏற்பட்டால், வயதாவதுதான் இதற்கு காரணம். மருந்து, மாத்திரைகள் சாப்பிடுவதுதான் இதற்கு ஒரே வழி என்று எத்தனை முறை நாம் சொல்லியிருக்கிறோம்? இந்த நோய் பரம்பரை பரம்பரையாக உள்ளது. எனது பெற்றோருக்கு இருந்தது. இப்போது எனக்கு தொடர்கிறது என்று எத்தனை முறை நாம் சமாதானப்படுத்திக் கொள்கிறோம் அல்லது நம்புகிறோம்?

இந்த நோய்கள் அனைத்துமே இயல்பானதுதான் என்று கூறி நாம் சகித்துக்கொள்கிறோம். இப்படிச் சொல்லியே நாம் நோய்களைப் பொறுத்துக்கொள்கிறேமே தவிர, உண்மையில் நாம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதில்லை அல்லது வைத்துக் கொள்ளத் தெரியவில்லை. பெண்கள் பெரும்பாலும் தங்கள் உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்தை புறக்கணித்தே வந்துள்ளனர். தங்களுடைய உடல் ஆரோக்கியத்தைவிட வேறு ஏதோ ஒன்றை முக்கியமானதாக கருதுவதே இதற்கு காரணம். குடும்பம், வேலை, சமூக சேவை இப்படி பல காரணங்களைச் சொல்லலாம். உடல் குண்டாக இருந்தாலோ அல்லது பல்வேறு காரணங்களால் ஆரோக்கியம் இல்லாமல் இருந்தாலோ ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி தப்பித்துக் கொள்ளவே விரும்புகிறார்கள். இது இயல்பானது அல்ல, இதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

உடல் தகுதி மற்றும் எடை பற்றி பேசும் போது (உடல் ஆரோக்கியத்திற்கு வேறு சில அம்சங்கள் இருந்த போதிலும் அவை பற்றி இங்கு விவாதிக்கவில்லை.) வயது காரணமாக உடல் எடை கூடுகிறது. அதாவது நாம் ஒரு பவுண்டு எடை கூடுகிறோம். 35 வயதுக்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் 1 பவுண்டு எடை தசையை இழக்கிறோம். (முன்னதாக நீங்கள் ஒரே நிலையில இருந்திருக்கும்பட்சத்தில்.) இவற்றை விரிவுபடுத்தி பார்த்தால் 60 வயதில் உங்கள் உடலின் தரம், தேக ஆரோக்கியம், தசைகளின் வலுபற்றிய தெளிவற்ற யோசனை பிறக்கும். தசைகள் வலுவிழப்பதாலும் அதேநேரத்தில் உடலில் கொழுப்பு அதிகரிப்பதாலும் உடலியக்கத்தில் என்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதை உங்களால் உணர முடியும். அப்போதுதான் நீங்கள் உங்கள் உடல் ஆரோக்கியத்தின் மீது கவனம் செலுத்துவது குறித்து உட்கார்ந்து சிந்திப்பீர்கள்.

உடல் ஆரோக்கியத்தில் தசைகளின் இயக்கம் முக்கியமானது. தசைகள் வலுவிழந்து இயக்கமும் குறைந்துவிட்டால் நம்மால் அன்றாட வேலைகளைக்கூடச் செய்யமுடியாது. கொழுப்புச் சத்தை அதிகரிப்பதால் மட்டும் உடலில் தோற்றப்பொலிவை



உண்டாக்க முடியாது. அது நமது அன்றாட பணிகளுக்குத் தடையாகவே இருக்கும். அது வீக்கம் மற்றும் நச்சுக் களின் களஞ்சியமாகவே இருக்கும். அதிக உடல் எடையானது தசைகள் வலுவிழப்பதால் மூட்டுகள் மற்றும் எலும்புகளின் வழக்கமான செயல்பாடு களில் அழுத்தத்தை ஏற்படுத்தும். இதயத்துக்கும் நுரையீரலுக்கும் ஒருவித இறுக்கத்தை ஏற்படுத்தும். அதானால்தான் அதிக உடல் எடை கொண்டவர்கள் அல்லது குண்டாக இருப்பவர்கள் மாடிப்படிகளில் ஏறும்போது பெருமூச்சு விடுகிறார்கள் அல்லது ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யும்போது சிரமப்படுகிறார்கள். இதுபோன்ற சமயங்களில் அவரது இதயமும் நுரையீரலும் கடினமாக வேலைசெய்ய வேண்டியுள்ளது. அதிகமான உடல் எடையை சமாளிக்க முடியாத நிலையில், தசைகளும் வலுவிழந்து இருப்பதாலும் இதயத் துடிப்பு சில சமயங்களில் சீராக இருக்காது. தசைகள் இயக்கத்தின்போது அதிக ஆக்ஸிஜன் தேவைப்படுகிறது. அப்போது சுவாச உறுப்புகள் சரிவர வேலை செய்யாததால் மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்படுகிறது. போதுமான ஆக்ஸிஜன் இல்லாமல் தசைகள் செயல்படும்போது உடலில் சோர்வு ஏற்படுகிறது.



இது சரி செய்யமுடியாத நிலைமை அல்ல. மிக மோசமான நிலைமைக்குச் சென்றுவிட்டால்கூட அதை மீட்டெடுக்க முடியும். மனித உடலின் மறுவாழ்வுக்கான அசாதாரணமான திறமையே அதை மிகவும் சிறப்பானதாக்குகிறது. இந்த நடைமுறையை முன்னரே தொடங்கினால் நல்லது. அது நல்ல உடல் ஆரோக்கியத்தை கொடுக்கும். உடல் மேம்பாட்டுக்கான எந்த நடவடிக்கையைத் தொடங்குவதிலும் காலதாமதமில்லை. 90 வயதில்கூட உடல் எடையை குறைக்கவும், உடல் வலிமை பெறவும் இதயத்தை வலுப்படுத்தும் பயிற்சிளை மேற் கொண்டால்  அது நன்மைபயக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளபடி தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் நடைபயிற்சி, ஓட்டம், சைக்கிள் ஓட்டுதல், உடற்பயிற்சி செய்வதன் மூலம் நமது இதயத்தின் செயல்பாட்டை வலுப்படுத்த முடியும். இவற்றை வாரத்தில் ஐந்து நாட்கள் பின்பற்றினாலே உடல்நிலை சீராகும். வாரத்திற்கு இரண்டு நாட்கள் தசையை வலிமைப்படுத்தும் பயிற்சி களை மேற்கொள்ளலாம்.

தசைகள் வலுவாக இருந்தால் அது வெளி அழுத்தத்தை தடுத்து நமது உடலை சரியான திசைக்குக் கொண்டு செல்லும். அதாவது 70 வயதான ஒருவர் எப்போதும் நாற்காலியிலேயே முடங்கிக் கிடக்காமல் மன அழுத்தம் இல்லாமல், சிறு சிறு வேலைகள் அல்லது பயிற்சிகளைச் செய்வதன் மூலம் உடல் ஆரோக்கியத்தை பராமரிக்க முடியும்.

அனைத்து பெண்களுமே உடல் எடையைச் சீராக வைத்துக்கொள்ளவும், தசைகள் இயக்கத்தை வலுப்படுத்தவும் உடற்பயிற்சி செய்வது அவசியமாகும். அதுவும் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு இது முக்கியமானது. ஏனெனில் அப்போதுதான் தசைகள் வலுவிழக்கத் தொடங்கும். எலும்புகள் பலவீனமடையும். தகுந்த உடற்பயிற்சி கள் மூலம் இவற்றை நாம் சீராக வைத்துக்கொள்ள முடியும்.

உடல் எடை குறைப்பு பயிற்சி பற்றி பெண்களிடம் பேசும்போது அது அவருக்கு அதிர்ச்சியை தராவிட்டாலும் முதலில் வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தும். உண்மை என்னவெனில் அதுபற்றி நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. முதலில் எளிமையான பயிற்சிகளை மேற்கொள்ளலாம். அதன்பிறகு கடுமையான பயிற்சிகளை மேற் கொள்ளலாம். ஒருவர் உடல் வலிமை பெறும்போது அவரது நம்பிக்கையும் அதிகரிக்கிறது. அப்போதுதான் உடல் சக்தி பெறுவதை உணர்கிறார். மாடிப்படி ஏறுதல், தரையில் உட்கார்ந் திருத்தல் அல்லது தரையிலிருந்து எழுந்திருத்தல் எளிதாக இருக்கும்.

நமக்குத் தேவையான வேலைகளை நாமே செய்யும்போது நமக்கே ஒரு பிரமிப்பு ஏற்படும். நமது உடல் சீராக இருப்பதை நாம் உணர முடியும். தோல்வியைக் கண்டு பயந்துவிடாமல், சரியான வழிகாட்டுதலுடன் ஆற்றல், பலம், நீள்தன்மை ஆகியவற்றை மனதில் கொண்டு செயல்பட்டால் எந்த வயதிலும் உடலை ஆரோக்கியத்துடன் வைத்துக்கொள்ள முடியும். எடை இழப்பு என்பது வழக்கமான உடற்பயிற்சியின் விளைவாகும்.

உங்கள் உடல் நலம் மற்றும் ஆரோக்கியம் முக்கியமானது. இது குறித்து நீங்கள் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். உடல் தகுதி என்பது உங்களது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும்  நேர்மறையான ஆற்றலை உருவாக்குகிறது. ஒரு நாளில் உங்களுக்காகவே ஒரு மணிநேரம் அல்லது குறைந்தபட்சம் அரை மணி நேரத்தை ஒதுக்குங்கள். உஙகள் செயல்பாட்டின் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக உடல் வளர்ச்சி மற்றும் மன வளர்ச்சியைப் பெறுங்கள். நீங்கள் உடற்பயிற்சியை செய்யத் தொடங்கிவிட்டால், நல்ல மனநிலையில் இருப்பீர்கள். உங்கள் அன்றாட நடவடிக்கைகளை எந்த மன அழுத்தமும் இல்லாமல் தொடர்வீர்கள்.

இது வெறும் நீண்ட ஆயுள் பற்றியது அல்ல, தரமான வாழ்க்கை பற்றியது என்பதையும் மறந்து விடாதீர்கள்.

இதன் ஆசிரியரை *sheelanambiar@gmail.com* என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம்.
*Website:www.drsheelanambiar.com*

## RC சிதம்பரம் சென்ட்ரல் — RID 2981




ஷெம் ஃபோர்ட் ஃப்யூச்சரிஸ்டிக் பள்ளியுடன் இணைந்து, ரூ.6 லட்சம் செலவில் நான்கு மருத்துவ உதவி வண்டிகள் கடலூர் மாவட்ட ஆட்சி தலைவர் சந்திர சேகர் சகமுரியிடம் வழங்கப்பட்டன.

## RC டெல்லி மன்தன் — RID 3011




பழைய காலணிகளை சேகரித்து புதியதாக மாற்றி 300 ஏழைகளுக்கு இந்த சங்கம் வழங்கியது.

## RC சேலம் சவுத் — RID 2982




போதி மரம் என்ற ஒரு முதியோர் இல்லத்தில், SKS மருத்துவ மனையுடன் இணைந்து ஓர் NCD முகாம் நடத்தப் பட்டது. சுமார் 75 மக்களுக்கு நோய்களுக்கான பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

## RC மன்மாட் — RID 3030



விசாபூரிலுள்ள பள்ளியில் சங்க உறுப்பினர் கள் மரக் கன்றுகள் வைத்து அவற்றை பாதுகாக்கும் மரக்காப் பான்களை வழங்கினார்கள்.

## RC கந்தர்வக் கோட்டை — RID 3000



காவல்துறையின் கோரிக்கையைத் தொடர்ந்து, தீபாவளிக் கூட்டத்தைச் சமாளிப் பதற்காக, உள்ளூர் வணிக அமைப்புடன் இணைந்து, காந்தி சிலை அருகில் இரண்டு கண்காணிப்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டன.

## RC டெவாஸ் — RID 3040




கண் புரை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் வசதி இல்லாத நோயாளி களுக்கு அந்தச் சிகிச்சை இலவசமாகச் செய்யப்பட்டது.

# செய்திகள்

## RC ஆல்வார் — RID 3053




சங்கத்தினர் பறவைகளுக்கு உணவு, தண்ணீர் வழங்குவதற்கு ஊரெங்கும் சிறு மண் தொட்டிகள் வைத்தனர்.

## RC ஸ்ரீகங்காநகர் ஈஸ்ட் — RID 3090

DG விஜய் அரோரா, ரூ 2.5 லட்சம் மதிப்புள்ள 75 இருக்கைகளை ஐந்து அரசுப் பள்ளிகளுக்கு வழங்கினார். PDG சஞ்சய் குப்தா, தன்னுடைய மறைந்த பெற்றோருடைய நினைவாக இந்த இருக்கைகளை வாங்குவதற்கு ஆதரவளித்தார்.



## RC வாப்பி — RID 3060



“பிளட்மொபைல்” என்ற பெயரிலான குருதிக் கொடை வேன் ஒன்றை இந்தச் சங்கம் தொடங்கி வைத்தது. இந்த வண்டி தொலைதூரப் பகுதிகளுக்குச் சென்று குருதியைத் திரட்ட உதவும்.

## RC பரெய்லி மெட்ரோ — RID 3110

இந்தச் சங்கத்தின் கோவிட் உதவித் திட்டங்களின் ஒரு பகுதியாக, சங்கத் தலைவர் அஷ்வினி சக்சேனா சுமார் 500 முகமூடிகளை வழங்கினார்.



## RC ஜம்மு திரிகூடா — RID 3070



ரோட்டரி WinS திட்டத்தை பற்றிய விழிப்புணர்வு பள்ளிக் குழந்தை களுக்கு ஏற்படுத்த சங்கம் பல போட்டிகளை நடத்தியது.

## RC ஒமெர்கா — RID 3132

நலிந்த பின்னணியைக் கொண்ட பெண்கள் சொந்தத் தொழில் தொடங்க சங்கம் நிதி உதவி அளித்தது.



## RC நிசாமாபாத் — RID 3150



இச்சங்கத்தின் சமூக மேம்பாட்டு முன்னெடுப்பு களின் கீழ், பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டன.

## RC குன்டாபுரா ரிவர்சைட் — RID 3182



“சாலைகளைப் பாதுகாப்பாக ஆக்குவோம்” என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக, NH–66ல் விழிப் புணர்வு உண்டாக்கு வதற்காக, அறிவிப்புப் பலகை ஒன்றை இச்சங்கம் நிருவியுள்ளது.

## RC பால்கி ஃபோர்ட் — RID 3160




டொம்பரி சமூகத்தில், அடிப்படையான வீடுகளில் வசிக்கும் 300 தேவையுள்ள குடும்பங் களுக்கு இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் கம்பளிப் போர்வைகள் மற்றும் ஆடைகளை நன்கொடையாக அளித்தார்கள்.

## RC மாத்தூர் — RID 3190



கல்பவ்ருக்ஷா என்ற மாவட்டத் திட்டத்தின் கீழ், சிறு விவசா யிகளுக்கு நீடித்த வாழ் வாதாரத்தை வழங்குவதற்காக, தென்னை மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

## RC ராம்தீர்த் — RID 3170



சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் ந்யாம் கௌடா முன்னிலையில், உலக இளம் பிள்ளை வாத நாளை முன்னிட்டு மிதி வண்டி மற்றும் இருசக்கர வண்டிப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

## RC கொச்சின் ஈஸ்ட் — RID 3201



வித்யா தான் திட்டத்தின் கீழ், நொச்சிமா கிராமத்தின் 15 குழந்தை களுக்கு ரூ.1 லட்சம் மதிப்புள்ள கணினி மேசைகள் வழங்கப்பட்டன.

# செய்திகள்

## RC சேர்தலா கிரீன் சிட்டி — RID 3211



உலக நீரிழிவு நாளை முன்னிட்டு, ரோட்டரிக் கூடத்தில் ஒரு மருத்துவ முகாம் நடத்தப் பட்டது.

## RC சென்னை மித்ரா — RID 3232

காக்கும் கரங்கள் என்ற ஒரு முதியோர் இல்லத்தில், மூத்த குடிமக்களுடைய நன்மைக்காக கண் முகாம் நடத்தப்பட்டது.



## RC திருநெல்வேலி — RID 3212



தீபாவளியை முன்னிட்டு, உதவும் உள்ளங்கள் வள்ளலார் இல்லத்தில் வசிப்போருக்கு ரூ.18,000 மதிப்புள்ள பட்டாசுகள், மதிய உணவு மற்றும் துணிப் பொருட்கள் Rtn செந்தில்குமார் ஆதரவில் வழங்கப்பட்டன.

## RC பெர்ஹாம்பூர் — RID 3262

ஆட்டோக்களில் ஒலி பெருக்கி மூலம் கோவிட் பற்றிய விழிப்புணர்ச்சி குடியிருப்பு பகுதிகளில் சங்கம் ஏற்படுத்தியது.




## RC பெர்ணாம்பட் — RID 3231



தொழிலாளர் மற்றும் வக்ஃப் மாநில அமைச்சராகிய நீலோஃபர் கஃபீல், 50 பேருக்கு அரிசிப் பொதிகளை வழங்கினார்.

## RC கல்கத்தா மேக்னம் — RID 3291

இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கலைப் பற்றிய செய்தியைப் பரப்புவதற்காக, ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்ட ஆட்டோ ஒன்றும் அனுப்பப்பட்டது.





ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

ADVT.



Rotary
District : 2982
Rotary Opens Opportunities
TEAM ACHIEVERS
Rotary
வர்ணஜாலம்
ரோட்டரி மாவட்ட மாநாடு 2020 – 2021
ரோட்டரி மாவட்டம் – 2982
மே 1 – 2
ஐடா ஸ்கட்டர் அரங்கம் ( வேலம்மாள் மருத்துவமனை வளாகம் )
அனுப்பானடி, மதுரை – தூத்துக்குடி ரிங்ரோடு,
மதுரை
K.S.வெங்கடேசன்
மாவட்ட ஆளுநர் 2020–2021
HP : 98432 36679
V.சிவகுமார்
தலைவர்– மாவட்ட மாநாடு
HP : 99949 69012


# On the racks




## The amazing human body

Author : **M V Ravikumar**
Publisher : **Kaveri Trust**
Pages : **76; ₹99**

A compilation of interesting facts about the various organs and systems of the human body. Written in simple English, the book talks about things that go on in our bodies, that we have no idea about as we go on about our day. Be it your new found high in the morning or how many times your heart beats a day. It's easy to forget how amazing the internal organs, eyes, or even the basic building blocks of life are. This book works as a gentle reminder on how fascinating each part of our body can be.




## Stage - 4: Love, Trauma & Redemption

Author : **Soumya Mohanty**
Publisher : **Notion Press**
Pages : **278; ₹320**


Rupa, a simple, beautiful girl in love with the author, is diagnosed with stage-four cancer. Everything comes to a standstill for the couple as they begin to fight the cancer. Written in an autobiographical mode, the book talks about love, life and what it takes to move on. The author talks about the struggle of a couple while dealing with an exhausting routine and doing everything it takes to save the love of your life. We follow the couple through their visits to the doctors, to temples and the partner waiting outside the ICU with hope and despair at the same time.




## Hamnet

Author : **Maggie O'Farrell**
Publisher : **Tinder Press**
Pages : **372; ₹999**

Hamnet is an imaginative take on Shakespeare's love life ,Agnes, the early days of their marriage, and the death of one of his children due to the bubonic plague. This is the story of Agnes and the emotional and psychological challenges of bereavement she faces. The book takes us back and forth from 1580 to 1599, the time where Shakespeare wrote his play *Hamlet*. At its heart, this is a story about grief and how a mother finds her way around it. Interestingly not once does the author call the playwright by his name in this book. The story includes magical beliefs, myths and superstitions of the time.




## Piranesi

Author : **Susanna Clarke**
Publisher : **Bloomsbury**
Pages : **245; ₹570**

Piranesi is alone and has no great memories, but curiously is content inside his big house, which has endless halls and countless rooms. The house and the world are one and the same for him. While birds have built an entire town for themselves in the house's upper halls, stormy tides flow through its lower levels. He wanders the empty halls and courtyards, documenting everything in his journal with satisfaction. He sustains himself with catching fish for food and burning dried seaweed during the winters. There is one other person — a man called The Other who visits Piranesi and needs his help to unravel a secret knowledge, revealing terrifying truths and a world beyond the labyrinth house.

Compiled by Kiran Zehra

# நண்பர்களிடையே நான் பிரபலம் ஏன்?

LBW

T C A ஸ்ரீனிவாசராகவன்

எல்லோரையும் போலவே எனக்கும் பல ஆண்டுகளாக நண்பர்கள் உண்டு. இவர்களை பொருளாதார வல்லுநர்கள், பத்திரிகையாளர்கள், கணக்காளர்கள், அதிகார வர்க்கத்தினர், வரலாற்றாசிரியர்கள் என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். இதில் விசித்தரம் என்னவெனில் என்ஜினீயர் களோ அல்லது டாக்டர்களோ நண்பர்களாக இல்லை. இவர்களில் ஒரு சிலரை எனக்குத் தெரியும். அதற்காக அவர்களை நான் நண்பர்கள் என்று அழைக்க முடியாது. என்னுடைய நண்பர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்கள்தான். ஆனாலும் எனது நட்பு வட்டத்தில் 5 பெண்களும் இடம்பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் வித்தியாசமாக பார்ப்பவர்கள். உதாரணமாக ஆண்களுக்கு தற்பெருமையும் அகங்காரமுமே முதலில் வருகிறது. ஆனால், பெண்களிடம் இது கடைசியாக உள்ளது. அவர்கள் பொது அறிவையே விரும்புகிறார்கள். ஆனால், பாலின வேறுபாடுகள் ஒருபுறம் இருக்க, நண்பர்கள் என்று சொல்லப்படும் ஆண்களும், பெண்களும் தொழில் முறையில் ஒரு விஷயத்தை எப்படி அணுகுகிறார்கள் என்பதைப் பார்த்தால் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்.

பொருளாதார வல்லுநர்கள் எந்த ஒரு விஷயத்தையும் செயல்திறன் அடிப்படையில் பார்க்கிறார்கள். ஒரு விஷயத்தை சிறப்பாக செய்வதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்ப்பார்கள். பத்திரிகையாளர்கள் ஒரு விஷயம் இப்படித்தான் நடக்கும் என்ற கோணத்தில் பார்ப்பார்கள். அதாவது சலித்துப்போனவர்கள் போலவே காணப்படுவார்கள். கணக்காளர்கள் ஒரு விஷயத்தைப் பற்றி கூடுதல் தரவுகளை கேட்டபடியே இருப்பார்கள். இது எரிச்சலை ஏற்படுத்தும். பெரும்பாலும் விவாதத்தில் கலந்து கொள்ள மாட்டார்கள். வரலாற்று ஆசிரியர்களோ தொழில்நுட்ப வளர்ச்சி தவிர உலகில் ஒன்றும் புதிது அல்ல என்பார்கள். தலைப்பை பொறுத்து அவர்கள் பேசுவைத ரிக் வேதத்திலிருந்து தொடங்குவார்கள். ஆனால், அதிகார வர்க்கத்தினர் எல்லோரையும் எரிச்சல்படுத்துவார்கள். கொள்கை அளவில் எதையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். வரலாறு, பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் அல்லது தரவுகள் இவற்றின் அடிப்படையில் எந்த ஒரு விஷயத்தையும் அவர்களிடம் விவாதிக்க முடியாது. எதற்கெடுத்தாலும் கோபப்படுவார்கள். அவர்களைப் பொறுத்தவரை ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் நான் தொல்லை கொடுப்பவன்.

கடந்த ஏழு மாதங்களாகவே பெரும்பாலும் கொரோனா வைரஸ் தொற்று குறித்துதான் விவாதிக்கப்படுகின்றன. பலரும் பல்வேறு கோணங்களில் அதைப் பற்றி பேசுகிறார்கள். வரலாற்று ஆசிரியர்கள் தொடக்க காலத்திலிருந்த நோய்களில் ஆரம்பித்து பேசத் தொடங்கி விடுவார்கள். இது ஒரு தற்செயல் நிகழ்வுதான் என்பார்கள். பொருளாதார நிபுணர்கள் மருத்துவ ஆராய்ச்சி, உற்பத்தி, விலை நிர்ணயம், விநியோகச் செலவு குறித்து பேசுவார்கள். கணக்காளர்கள் தரவுகள் எதுவும் கிடைக்காததால் என்ன நடக்கிறது என்று பார்த்துக்கொண்டிருப்பார்கள். பத்திரிகையாளர்கள் சரிபார்க்கப்படாத அல்லது சரிபார்க்க முடியாத வதந்திகளைப் பரப்பிவிடுவார்கள். அதிகார வர்க்கத்தினர் இதற்கு விதிமுறைகள் அனுமதிக்க வில்லை என்பது போல் பேசிக் கொண்டிருப்பார்கள்.

முதல் சில வாரங்கள் ஒவ்வொரு வரும் கொரோனாவுக்கு இந்தியாவில் எத்தனைப் பேர் பலியாவார்கள் என்று பேசினார்கள். அடுத்து உயிரிழப்பவர்கள் எண்ணிக்கை குறைந்ததும், எத்தனைப் பேர் வைரஸ் தாக்குதலால் பாதிக்கப்படுவார்கள் என்பது பற்றி பேச்சு இருந்தது. அடுத்த தடுப்பூசி கண்டுபிடிப்பதில் மும்முராக ஈடுபட்டிருந்தபோது தடுப்பூசி இந்த ஆண்டே கிடைக்குமா அல்லது அடுத்த ஆண்டு கிடைக்குமா என்ற விவாதம் எழுந்தது. இப்போது தடுப்பூசிக்கு நாம் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும் என்பது பற்றி பேசப்பட்டு வருகிறது. பத்திரிகையாளர்கள்தான் நமக்கு கோபமூட்டுகிறார்கள். அடுத்து அதிகார வர்க்கத்தினர். அவர்களிடம் பயனுள்ள தகவல் ஏதும் இல்லை. வரலாற்றாசிரியர்கள் தடுப்பூசிகளின் வரலாற்றைச் சொல்லி நம்மை குஷிப்படுத்து கிறார்கள். பொருளாதார வல்லுநர்கள் வீட்டிலிருந்தபடியே வேலை பற்றி கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். கணக்காளர்கள் இப்படிப்பட்ட முட்டாள்களுடன் எப்படி நட்பு வைத்திருக்க முடியும் என்று மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய பிரச்னை என்ன வென்றால் நான் எல்லாவற்றிலும் கொஞ்சம் இருக்கிறேன். ஒவ்வொருவர் சொல்லுவதையும் பொதுவாக ஏற்றுக்கொள்கிறேன். எனவே மற்றவர்கள் என்னை புத்திசாலி என நினைக்கின்றனர். உண்மை என்ன வென்றால் வலுவான கருத்து குறித்து எனக்கு அக்கறை இல்லை. ■

# செய்தித் துளிகள்




### பையில் இதயம்

இரு குழந்தைகளின் தாயாகிய சல்வா ஹுசைன் (39) தன்னுடைய இதயத்தை ஒரு முதுகுப் பையில் சுமந்து செல்கிறார்.

கிட்டத்தட்ட 7 கிலோ எடையுள்ள இவருடைய முதுகுப் பைக்குள் மின்கலன்கள், ஒரு மின் மோட்டார் மற்றும் காற்றழுத்த விசைக் குழாய் (பம்ப்) ஆகியவை உள்ளன. இவை குழாய்களின் வழியே காற்றைத் தள்ளுகின்றன, இதனால், இவருடைய நெஞ்சில் உள்ள பிளாஸ்டிக் அறைகள் ஆற்றல் பெறுகின்றன, ஒருவேளை, மின்கலன்களில் மின்சாரம் தீர்ந்துவிட்டால், 90 விநாடிகளுக்குள் வேறொரு மாற்று இயந்திரத்தில் இவரை இணைக்கவேண்டும்.

### தொண்டையில் புதிய உறுப்பு



லைவ்சைன்ஸ் அறிக்கை ஒன்றின்படி, நெதர்லாந்தில் இருக்கும் அறிவியலாளர்கள் மனித உடலில் ஒரு புதிய உறுப்பை எதேச்சையாகக் கண்டறிந்துள்ளார்கள். புரோஸ்டேட் புற்றுநோய் ஆராய்ச்சியை நடத்தும் போது இவர்கள் இதைக் கண்டறிந்தார்கள். தொண்டையின் மேற்பகுதி ஆழத்தில் அமைந்துள்ள இந்த எச்சில் சுரப்பிகளின் தொகுப்புக்கு, “டியூபாரியல் எச்சில் சுரப்பிகள்” என்று பெயரிடப்பட்டுள்ளது. குறைந்தது 100 நோயாளிகளை ஆராய்ந்தபிறகு, இந்தச் சுரப்பிகள் இருப்பதை நெதர்லாந்து புற்றுநோய் கல்விக்கழக ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். இந்தக் கண்டுபிடிப்பு, புற்றுநோய் சிகிச்சைக்கு முக்கியமாகக் கருதப்படுகிறது.

### உலகில் மிகத் தனிமையான வீடு



ஒரு வெள்ளை வீட்டின் புகைப்படங்கள் இன்ஸ்டாகிராமில் பதிவு செய்யப்பட்டுப் புகழ் பெற்றுள்ளன. இந்தப் புகைப்படம், நீலக் கடலால் சூழப்பட்ட ஒரு பசுமை மலையின்மீது இருக்கும் ஓர் அழகிய மர வீட்டைக் காண்பிக்கிறது. ஒரு தனித் தீவில் தன்னந்தனியாக நிற்கும் இந்தச் சிறிய வெள்ளை வீடு, மர்மமான சிந்தனைகளுக்கு இடமளித்துள்ளது. இந்தத் தனிமை வீடு, “உள்முகமான மனிதர்களுடைய கனவு வீடு” என்றும் அழைக்கப்படுகிறது.

### பொம்மைகளுக்கான மருந்தகம்



உங்கள் குழந்தைக்கு மிகவும் பிடித்த பொம்மையின் கால் உடைந்துவிட்டால் என்ன செய்வீர்கள்? ஒருவேளை, நீங்கள் ஜப்பானில் இருந்தால், நீங்கள் அந்தப் பொம்மையை ஒரு பொம்மை மருந்தகத்துக்கு அழைத்துச்செல்லலாம்.

டோக்கியோவிலுள்ள இந்த மருந்தகத்தில், பொம்மைகள் சுமார் 10 நாட்களில் பழுது பார்க்கப்படுகின்றன, இதற்கு 10,000 இலிருந்து 500,000 யென் (ரூ.7,000 - ரூ.3.56 லட்சம்) செலவாகிறது. இந்த மருந்தகத்தின் இணையத்தளத்தில், வீடு செல்லக் காத்திருக்கும் மீட்கப்பட்ட பொம்மை நோயாளிகளின் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன.



### SRKன் தில்லி இல்லத்தில் தங்குங்கள்

கௌரி மற்றும் ஷாருக்கானின் தில்லி இல்லத்தில் தங்கும் வாய்ப்பை வெல்ல விரும்புகிறீர்களா? இதற்கு நீங்கள் செய்யவேண்டியதெல்லாம், ஏர்பிஎன்பி (Airbnb)யில் ஒரு விண்ணப்பத்தை நிரப்பவேண்டும், 100க்கும் குறைவான சொற்களில், மிகச் சிறந்த இரு காங்களையும் நீட்டி வரவேற்பது” என்று நீங்கள் எதைச் சொல்வீர்கள் என்று விளக்கவேண்டும், இந்த வீட்டைக் கௌரி வடிவமைத்துள்ளார், இது, தம்பதிகளாக, ஒரு குடும்பமாகக் கான்களின் பயணத்தைப் பிரதிபலிக்கிறது, இவர்களுடைய தனிப்பட்ட நினைவுப்பொருட்களும் உலகைச் சுற்றி அவர்கள் நிகழ்த்திய பயணங்களிலிருந்து திரட்டப்பட்ட பொருட்களும் இங்கு நிறைந்துள்ளன.

இங்கு வரும் விருந்தினர்கள், கான் குடும்பத்துக்குப் பிடித்த உணவு வகைகள் நிறைந்த ஒரு திருவிழா இரவு உணவு விருந்தை உண்பார்கள்; ஷாருக்கின் குறிப்பிடக் கூடிய படங்களை அடுத்தடுத்து காண்பார்கள்.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணபரதீஷ்.

Regn. No. TN/CCN/677/2019-2021 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month



**Community Farming**

A New Way to Grow Together

One Acre Plots

**₹50/-**

— PER SQ.FT. —

# SAMRUDDHI FARMS - PALI

*A Community Farming Initiative*

*Great location, Great investment opportunity.*

Come join us & be a part of an agricultural society that we co-develop together!

Samruddhi Farms is spread over upwards of 300 acres of pristine agricultural land and overlooks the town of Pali, Raigadh area. Merely 100km from Mumbai, we offer you a plethora of professionally managed grow options.



**IDEAL FOR**

- Cashew Nuts
- Teak
- Sandalwood
- Drumsticks

- Individual plot holders will be provided membership by share certificates and possession letters and are transferable.
- The land here is perfectly suited for farming.
- Professional experts will ensure that all aspects of farming are managed & operated seamlessly. The managing committee of the society will oversee the operations.
- Build your own farm house
- Society may promote agro tourism by creating an experience of authentic contact with rural life.
- Generate TAX-FREE agricultural income.

**LATIM LIFESTYLE & RESORTS LTD.**

201, 2nd Floor, Navkar Plaza, Bajaj Road, Vile Parle (West),
Mumbai - 400056.

**Mobile : 9820110539 / 9820772246**

Scan **QR Code** for Direction